தமிழரசு

Tamilarasu

(Monthly)

டிசம்பர் 2025 (December 2025)
விலை ரூ.30/– (Price Rs.30/-)

தமிழ்நாடு அரசு
செய்தி – மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு

மலர் (Vol.) : 56
இதழ் (Issue) : 6

மூத்த குடிமக்களின் நல்வாழ்வை மேம்படுத்தும்

"அன்புச்சோலை திட்டம்"

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 26.11.2025 அன்று தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில் ஈரோடு, மொடக்குறிச்சி, ஜெயராமபுரத்தில் சுதந்திரப்போராட்ட வீரர் பொல்லான் அவர்களின் முழு திருவுருவச் சிலையுடன் கூடிய அரங்கத்தை திறந்து வைத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள் 26.11.2025 அன்று தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில் ஈரோடு, சித்தோடில், பால்வளத் தந்தை திரு. எஸ்.கே.பரமசிவன் அவர்களின் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்தார்.

தமிழரசு

தமிழ்நாடு அரசு
செய்தித்துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2056
விசுவாவசு வருடம்: கார்த்திகை – மார்கழி
டிசம்பர் 2025

மலர் : 56 விலை ரூ.30 இதழ் : 6

ஆசிரியர் - வெளியிடுபவர்
மரு. **இரா.வைத்திநாதன், இ.ஆ.ப.,**
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும்
அலுவலால் அரசு இணைச் செயலாளர்

நிருவாக ஆசிரியர்
மு. சத்தியசீலன்
இணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர் /
உதவி இயக்குநர்
எஸ். உதயா கதிரவன்

பொறுப்பாசிரியர்கள் /
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்
ப. கருணாகரன்
ச. மஞ்சுளா
மு. மணிமேகலை

உதவி ஆசிரியர்
கு. சுபாஷ்

நிருபர்கள்
எஸ்.ஆர்.எஸ். ஸ்ரீந்தர்
ஜெ. ஜெயசிம்ஹன்

முதுநிலை ஓவியர்
ரா. சாமுண்டிஸ்வரி

ஓவியர்
இரா. உமாமகேஸ்வரி

இதழ் உதவியாளர்
நி. ஷீலா

கணினிவழி வடிவமைப்பாளர்கள்
தி. ஜெய்சங்கர்
க.இரா. உமாமகேஸ்வரி

பிழைதிருத்தம் மேற்கொள்பவர்
த. பிரியா

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

தமிழரசு அலுவலகம்,
எண்.5, இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை-600 113.
தொலைபேசி : 22542221/22542224
மின்னஞ்சல் : ddpub.tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tndipr.gov.in

தமிழரசு இதழுக்கு
www.tamilarasu.org என்ற இணையதளத்தில்
சந்தா தொகையினை நேரடியாகச் செலுத்தலாம்.

எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின். (குறள்: 666)

எண்ணியதைச் செயல்படுத்துவதில் உறுதி உடையவர்களாக இருந்தால் அவர்கள் எண்ணியவாறே வெற்றி பெறுவார்கள்.

– திருக்குறள் **கலைஞர்** உரையிலிருந்து...

இந்த இதழில்...

★ மூத்த குடிமக்களின் நல்வாழ்விற்கான "அன்புச்சோலை திட்டம்" 4

★ தூய்மைப் பணியாளர்களுக்கான முதலமைச்சரின் உணவுத்திட்டம் 11

★ கோயம்புத்தூர் முதலீட்டாளர்கள் மாநாட்டில் ரூ.43,844 கோடி முதலீட்டில் 1,00,709 நபர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும் 158 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் 23

★ ஈரோடு மாவட்டத்தில் ரூ.278.62 கோடி மதிப்பில் 1,84,491 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் 27

★ ரூ.32 கோடி செலவில் 600 தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களுக்குப் புதிய வேலைவாய்ப்பளிக்கும் வகையில் "வேலூரில் மினி டைடல் பூங்கா" 32

★ திருவாரூர் மாவட்டத்தில் ரூ.50 கோடி முதலீட்டில் 2,500 நபர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும் வகையில் ஆடை உற்பத்தி அலகு அமைக்கும் திட்டம் 34

★ வெற்றி நிச்சயம் திட்டத்தின் மூலம் திறன் பயிற்சி பெற்ற இளைஞர்களுக்குப் பணி நியமன ஆணைகள் 52

★ 2025-2026 ஆம் கல்வியாண்டிற்கான மிதிவண்டிகள் வழங்கும் திட்டம் 59

★ தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் – பயிற்சி வினா-விடைத்தாள் 78

முதலாம் பக்க அட்டை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 10.11.2025 அன்று
திருச்சிராப்பள்ளி, பொன்மலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில்
மூத்த குடிமக்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதற்காக
10 மாநகராட்சிகளில் 25 "அன்புச்சோலை திட்டத்தின்"
மையங்களைக் காணொலிக் காட்சி வாயிலாகத்
தொடங்கி வைத்தார்.

மூத்த குடிமக்களின் நல்வாழ்விற்கான அன்புச்சோலை திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தொடங்கி வைத்தார். - 10.11.2025

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 10.11.2025 அன்று திருச்சிராப்பள்ளி, பொன்மலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் மூத்த குடிமக்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதற்காக "அன்புச்சோலை" மையங்கள் ஒரு மாநகராட்சியில் இரண்டு வீதம் 10 மாநகராட்சிகளில் 20 மையங்கள், சென்னை பெருநகர மாநகராட்சியில் 3 மையங்கள், தொழில் மாவட்டங்களான இராணிப்பேட்டை, கிருஷ்ணகிரியில் 2 மையங்கள் என மொத்தம் 25 "அன்புச்சோலை" மையங்களைத் தொடங்கி வைத்தார்.

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை மூலமாக குழந்தைகள், மகளிர், கல்வி பயிலும் மாணவ, மாணவியர், திருநங்கைகள், முதியோர் அனைவரையும் பேணிக்காக்கும் வகையில் பல்வேறு நலத்திட்டங்கள், சட்டங்கள் இத்துறையின் மூலமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஆதரவற்ற, கைவிடப்பட்ட முதியோர்களுக்காக முதியோர் இல்லங்கள், ஒருங்கிணைந்த வளாக இல்லங்கள், நடமாடும் மருத்துவ அலகுகள், ஓய்வூதியத் திட்டங்கள் உள்ளிட்ட மூத்த குடிமக்களுக்கான பல்வேறு நலத்திட்டங்களைத் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. முதியவர்கள் அமைதியான, கண்ணியமான, நிறைவான வாழ்க்கையை நடத்துவதை உறுதிசெய்து, அத்தியாவசிய வசதிகளை வழங்குவதே இத்திட்டங்களின் நோக்கம் ஆகும்.

மூத்த குடிமக்களுக்கான "அன்புச்சோலை" மையங்கள்

தமிழ்நாட்டில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் மூத்த குடிமக்களின் ஒட்டுமொத்த நல்வாழ்வை உறுதி செய்வதற்காக ஒரு மாநகராட்சியில் இரண்டு அன்புச்சோலைகள் வீதம், மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம், திருப்பூர், ஈரோடு, தூத்துக்குடி, வேலூர்,

தஞ்சாவூர், திண்டுக்கல் ஆகிய 10 மாநகராட்சிகளில் 20 அன்புச்சோலைகள் அமைக்கப்படுகின்றன. மேலும், 2 தொழில்துறை மாவட்டங்களான இராணிப்பேட்டை, கிருஷ்ணகிரி, பெருநகர மாநகராட்சியான சென்னையில் தண்டையார்பேட்டை, சோழிங்கநல்லூர், விருகம்பாக்கம் ஆகிய மூன்று இடங்களில் "அன்புச்சோலை" மையங்கள் தொடங்கப்பட்டு, இயன்முறை மருத்துவச் சேவைகள் (Physiotherapy), யோகா, பொழுதுபோக்கு அம்சங்கள், நூலகம் போன்றவை வழங்கப்படவுள்ளன.

அன்புச்சோலையின் முக்கிய நோக்கங்கள்

முதியோருக்கு வழங்கப்படும் இயன்முறை மருத்துவச் சேவைகள், பொழுதுபோக்கு, திறன் மேம்பாடு நிகழ்வுகள் மூலம் மனமும், உடலும் சுறுசுறுப்புடன் இருக்கச் செய்தல், முதியோர் ஒருவருடன் ஒருவர் தொடர்பு கொண்டு, சமூக உறவுகளை வலுப்படுத்துதல், ஆண், பெண் இருவரும் வேலைபார்க்கும் குடும்பங்களுக்கு, அவர்களது மூத்த உறுப்பினர்கள் பாதுகாப்பாகப் பராமரிக்கப்படுவதை உறுதி செய்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு அன்புச்சோலை மையங்கள் செயல்படும்.

அன்புச்சோலையின் சமூக நோக்கம்

அன்புச்சோலை திட்டமானது, முதியோர்களைப் போற்றும் தமிழ் பாரம்பரியத்தைப் பிரதிபலிப்பதோடு, முதியோர்களின் பாதுகாப்பையும், நன்முறையில் பராமரிப்பதையும் உறுதி செய்வதால் அவர்களது குடும்பத்தினருக்கு மன அமைதியை ஏற்படுத்துகிறது. இதனால் முழுமையான நிறுவனம் சார்ந்த பராமரிப்புத் தேவையைக் குறைத்தும், குடும்பப் பிணைப்பை வலுப்படுத்தவும் உதவுகிறது. மேலும், வேலைக்குச் செல்ல ஆர்வமுள்ள பெண்கள், தங்கள் வீட்டிலுள்ள முதியோர்களைப் பகல் நேரங்களில் பராமரிக்க இயலாததால் வேலைக்குச் செல்ல இயலாத நிலையுள்ளது. எனவே, வேலைக்குச் செல்லும் பெண்களுக்காகவும், வேலைக்குச் செல்ல ஆர்வமுள்ள பெண்களுக்காகவும், அவர்களது வீட்டு முதியவர்களுக்கு தனிமையில்லாமல் நேரத்தை சிறந்த முறையில் செலவு செய்து, மகிழ்வாக வாழ வழிவகை செய்யும் நோக்கத்தோடும் இம்மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

மூத்த குடிமக்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதற்காகத் திருச்சிராப்பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 25 அன்புச்சோலை மையங்களைக் காணொலி வாயிலாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்து, மூத்த குடிமக்களுக்கு மகளிர் சுயஉதவிக் குழுவினரால் தயாரிக்கப்பட்ட சிறுதானிய உணவு வகைகள், சத்துமாவு கொண்ட பெட்டகங்களை வழங்கி, அவர்களுடன் கலந்துரையாடி, கேரம் விளையாடினார்.

வயதானவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு “அன்புச்சோலை” திட்டம் தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றி...

கோயம்புத்தூர் மாவட்டம்

கோயம்புத்தூர் மாவட்டத்தில், கீரணத்தம், 'அன்புச்சோலை' மையத்தில் உள்ள சரவணம்பட்டி வி.எஸ் நகர் பகுதியைச் சேர்ந்த திருமதி அனுராதா அவர்கள் நம்மிடம் தெரிவித்ததாவது,

என் பெயர் அனுராதா. நான் சரவணம்பட்டியிலிருந்து இங்கு வந்துள்ளேன். எனக்கு 61வயது ஆகின்றது. வீட்டில் என் குடும்பத்தில் உள்ள அனைவரும் வேலைக்குச் சென்ற பிறகு நான் மட்டும் தனியாக இருப்பேன். ஆனால் இன்று அன்புச்சோலையில் என்னைப் போன்ற வயதானவர்கள் இருக்கின்றார்கள். அவர்களுடன் பேசுவது மட்டுமல்லாமல் சிறு சிறு விளையாட்டுகளுடன் என்னுடைய பொழுதைக் கழித்தபோது, தனிமை மறந்து இங்கு மிகவும் சந்தோஷமாக இருந்தேன். நல்ல உணவினைக் காலையிலும், மதியத்திலும் வழங்கினார்கள். இதன்மூலம் என்னுடைய மனதிற்கும், உடலுக்கும் மிகவும் புத்துணர்ச்சியாக இருந்தது. இனி தினந்தோறும் இங்கு வருவேன். தனிமையில் இருக்கின்றோம் என்ற உணர்வே இருக்காது. என்போன்ற வயதானவர்களின் நலனைக் கருத்தில்கொண்டு இத்திட்டத்தைத் தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

“அன்புச்சோலை”

முதியோர் மனம் மகிழும் ஆறுதல் வள மையம்...

கோயம்புத்தூர் மாவட்டத்தில் கீரணத்தம் ‘அன்புச்சோலை’ மையத்தில் உள்ள சரவணம்பட்டி பகுதியைச் சேர்ந்த திரு. நாகராஜ் அவர்கள் நம்மிடம் தெரிவித்ததாவது,

என் பெயர் நாகராஜ். நான் சரவணம்பட்டி, ஐடி பெட்ரோல் பங்க் பகுதியிலிருந்து இங்கு வந்துள்ளேன். எனக்கு 61வயது ஆகின்றது. வீட்டில் என் குடும்பத்தில் உள்ள அனைவரும் வேலைக்குச் சென்ற பிறகு நான் மட்டும் தனியாக இருப்பேன். ஆனால் அன்புச்சோலையில் என்னைப் போன்ற வயதானவர்கள் இருக்கின்றார்கள். தற்போது இந்த முகாமில் பல்வேறு பகுதிகளிலிருந்து வரும் முதியவர்கள் அனைவரும் ஒரே இடத்தில் இருப்பதாலும் ஒத்த வயதிலும் இருப்பதாலும் மனம் விட்டுப் பேச முடிகிறது. அவர்களுடன் பேசியது மட்டுமல்லாமல் தினசரி நாளிதழ் வாசித்து, கேரம் விளையாடி என்னுடைய பொழுதைக் கழித்தபோது, தனிமை மறந்து இங்கு மிகவும் சந்தோஷமாக இருந்தேன்.

நல்ல உணவினைக் காலையிலும், மதியத்திலும் வழங்கினார்கள். இனித் தினந்தோறும் இங்கு வருவேன். அன்புச்சோலை முதியோர் மனம் மகிழும் வகையில் வள மையமாக ஆறுதலைத் தந்துள்ளது இங்கு இருக்கும்போது மிகவும் மகழ்ச்சியாக இருப்பதுபோல் உணர்ந்தேன். என்போன்ற வயதானவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு இத்திட்டத்தைத் தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன் எனத் தெரிவித்தார்.

மூத்த குடிமக்களின் நல்வாழ்வை மேம்படுத்தும்
"அன்புச்சோலை முதியோர் மனமகிழ் வள மையம்"

சேலம் மாவட்டம்

'அன்புச்சோலை' முதியோர் மனமகிழ் வள மையத்தில் உள்ள சேலம் மாவட்டம், ஏற்காடு மெயின் ரோடு பகுதியில் வசித்து வரும் முதியோர் திரு. பொன்னுசாமி அவர்கள் நம்மிடம் பேசியதாவது,

எனது பெயர் பொன்னுசாமி. என்னுடைய வயது 65. நான் ஏற்காடு மெயின் ரோடு பகுதியில் வசித்து வருகிறேன். மனைவி இல்லை. இக்காலகட்டத்தில் எனக்குப் பேசுவதற்கும், அரவணைப்புடனும் இருப்பதற்கும் யாரும் இல்லை என்ற மன வருத்தத்தில் இருந்து வந்தேன்.

இச்சமயத்தில் எங்களைப் போன்ற முதியோர்களின் நலம் குறித்து யோசித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மூத்த குடிமக்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதற்காக, "அன்புச்சோலை முதியோர் மனமகிழ் வள மையம்" என்ற திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள். இந்த மையத்தின் மூலமாக என்னைப் போன்றோர் மற்றவர்களுடன் பழகுவதற்கும், கருத்துப் பரிமாற்றம் செய்வதற்கும், யோகா, உடற்பயிற்சி உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் இம்மையம் அமைக்கப்பட்டுள்ளது ஒரு வரப்பிரசாதமாக உள்ளது.

வயதான காலத்தில் ஆதரவை எதிர்நோக்கிக் காத்திருக்கும் எங்களைப்போன்ற முதியோர்களுக்காக இம்மையத்தை ஏற்படுத்திக் கொடுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

'அன்புச்சோலை' முதியோர் மனமகிழ் வள மையத்தில் உள்ள சேலம் மாவட்டம், அண்ணாநகர் பகுதியைச் சேர்ந்த முதியோர் திருமதி சாரதாமணி அவர்கள் நம்மிடம் பேசியதாவது,

எனது பெயர் சாரதாமணி, வயது 65. நான் சேலம் அண்ணாநகரில் வசித்து வருகிறேன். வேலை, குடும்ப வேலை காரணமாக மகன்கள் வெளியில் செல்ல நேர்வதால் நானும் எனது கணவரும் தனிமையின் காரணமாக மன உளைச்சலுக்கு ஆளானோம். இந்நேரத்தில் முதியோர்களின் நலன் கருதி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் "அன்புச்சோலை முதியோர் மனமகிழ் வள மையம்" என்ற திட்டத்தைத் தொடங்கி வைத்துள்ளதால் நாங்கள் இம்மையத்தில் வந்து பயனடைகிறோம்.

மேலும், பகல் நேரத்தில் முதியவர்களுக்குப் பாதுகாப்பான, ஆதரவான சூழலும், முதியோர்கள் தங்களது சம வயதினருடன் பழகுவதற்கான வாய்ப்பாகவும், பகல் நேரத்தில் தனிமையில் அவதிப்படும் முதியவர்களுக்கு ஆறுதல் அளிக்கும் வகையிலும் இம்மையம் செயல்படுகிறது.

நல்ல பராமரிப்பாளர்கள், சமூகப்பணியாளர்கள், உடல் நல சிகிச்சையாளர்கள் மூலம் ஆரோக்கியத்திற்கான வசதிகள் வழங்கப்படுவதால் உடல் நலமும் நன்றாக உள்ளது. எங்களைப்போன்ற முதியவர்களின் எண்ணங்களைத் திட்டங்களாக செயல்படுத்தி எங்களுக்கு மகிழ்ச்சியைப் பரிசளித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு அனைவரின் சார்பிலும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

“அன்புச்சோலை” முதியோர் மனமகிழ் வள மையத்தைப் பார்க்கும்போது ஆசையாகவும் பெருமையாகவும் இருக்கிறது...

தஞ்சாவூர் மாவட்டம்

அன்புச்சோலை திட்டத்தில் பயனடைந்த பயனாளி தஞ்சாவூர் மாவட்டம், மானோஜிப்பட்டி பகுதியைச் சேர்ந்த திருமதி பிலோபின் அவர்கள் நம்மிடம் தெரிவித்ததாவது.

எனது பெயர் பிலோபின். நான் தஞ்சாவூர் மாவட்டம் மானோஜிப்பட்டி பகுதியில் வசித்து வருகிறேன். அன்புச்சோலை மையத்தைப் பார்க்கும் போது ஆசையாகவும், பெருமையாகவும் இருக்கிறது. பொழுதுபோக்குவதற்கான கேரம், பல்லாங்குழி போன்ற விளையாட்டு உபகரணங்கள் இருக்கின்றன. இதை எல்லாம் பார்க்கும் போது பழைய நினைவுகள் எல்லாம் வருகிறது. உணவுகள் தரமாகவும், சூடாகவும், நல்ல ருசியாகவும் கிடைக்கிறது. எங்களைப் போன்ற வயதுடையவர்களுடன் பேசிப், பழக முடிகிறது, மற்றவர்களுடன் ஜாலியாகப் பேசிக்கொண்டுமிருப்பது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. அன்புச்சோலையைத் திறந்துவைத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

“அன்புச்சோலை” திட்டம் எங்களைப் போன்ற மூத்த குடிமக்களுக்கு ஆறுதல் தருவதாக அமைந்த மையம்...

அன்புச்சோலை மையம் திட்டத்தில் பயனடைந்த தஞ்சாவூர் மாவட்டம் திருக்கானூர்பட்டி கிராமத்தைச் சேர்ந்த பயனாளி திருமதி வசந்தா அவர்கள் நம்மிடம் தெரிவித்ததாவது.

எனது பெயர் வசந்தா. நான் தஞ்சாவூர் மாவட்டம் திருக்கானூர்பட்டி கிராமத்தில் வசித்து வருகிறேன். எங்களைப் போன்ற மூத்த குடிமக்களுக்கு ஆறுதல் தரும் மையமாக அன்புச்சோலை அமைந்துள்ளது. இங்கு எல்லோரிடமும் எளிதாகச் சேர்ந்து பேசிப் பழகி, நோய்கள் நீங்கி சந்தோஷமாக இருக்க வாய்ப்பாக அமைந்துள்ளது. நல்ல இயற்கைச் சூழல், காற்றோட்டம் நிறைந்து, அமைதியான சூழ்நிலை, தங்குமிடமும் அமைந்துள்ளது. இங்கு விளையாட்டு வசதி, மருத்துவ வசதி, நூலக வசதிகளுடன், தரமான உணவு வழங்கப்படுகிறது. அன்புச்சோலையைத் திறந்துவைத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வயதான அனைவருக்கும் புத்துணர்ச்சி ஊட்டும் “அன்புச்சோலை” அகம் மகிழும் திட்டம்...

ஈரோடு மாவட்டம்

ஈரோடு மாநகராட்சிப் பகுதி, ரங்கம்பாளையம், லட்சுமி கார்டன், சேரன் நகரில் உள்ள அன்புச்சோலை இல்லத்திற்கு வருகை தரும் குறிக்காரன்பாளையம் பகுதியைச் சேர்ந்த திருமதி மஞ்சுளாராமசாமி அவர்கள் மகிழ்ச்சியுடன் நம்மிடம் தெரிவித்ததாவது,

நான் கிராமத்தில் வசித்து வந்தேன். எனது கணவர் இறந்து 2 ஆண்டுகள் ஆகின்றன. மகன்கள் பணியின் காரணமாக ஈரோடு மாநகராட்சிப் பகுதியில் குடியிருந்து வருகிறார்கள் எனது மகன்கள், மருமகள்கள் வேலைக்குச் சென்று விடுகிறார்கள். கிராமச்சூழலில் வசித்து வந்த எனக்கு இந்த நகரப்பகுதியில் தனியாக இருப்பது எனது மனதிற்கு மிகுந்த வேதனை அளிப்பதாக உள்ளது. இந்தச் சூழ்நிலையில் தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அன்புச்சோலை என்ற அகம் மகிழும் திட்டத்தினைக் கொண்டுவந்து எங்களைப்போன்ற வயதான அனைவருக்கும் புத்துணர்ச்சியினை ஊட்டியுள்ளார். அங்கு வந்திருந்த வயதானவர்கள் என்னிடம் அன்பாகவும், பண்பாகவும் பழகுவதற்கு இனிமையாகவும் இருந்தார்கள். எனக்கு கேரம்போர்டு விளையாட பிடிக்கும். நாங்கள் குழுவாகச் சேர்ந்து கேரம்போர்டு விளையாடும் போது நான் மீண்டும் இளம் வயதிற்கு திரும்பியது போன்ற மகிழ்ச்சியும், உணர்வும் ஏற்பட்டது. இத்தகைய சிறப்பு மிகு திட்டத்தினை வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஈரோடு மாநகராட்சிப் பகுதி, ரங்கம்பாளையம், சேரன் நகரில் உள்ள அன்புச்சோலை இல்லத்திற்கு வருகை தரும் இரணியன்வீதியைச் சேர்ந்த திரு. க.சு.கிருஷ்ணன் அவர்கள் மகிழ்ச்சியுடன் நம்மிடம் தெரிவித்ததாவது,

எனக்கு 70 வயதிற்கு மேல் ஆகிறது. மகன்கள் பணியின் காரணமாக ஈரோடு மாநகராட்சிப் பகுதியில் குடியிருந்து வருகிறார்கள். எனக்குச் சிறு வயது முதலே தந்தைப் பெரியார் அவர்கள் மீது எனக்கு மிகுந்த பற்றும், மரியாதையும் உள்ளது. அவரைப்பற்றிய புத்தகங்களை நூலகத்திற்குச் சென்று படித்து வந்தேன் தற்போது வயதான எனக்குத் தொடர்ந்து நூலகத்திற்குச் செல்ல இயலவில்லை தற்போது தந்தையுள்ளம் கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நம்பிக்கை ஊட்டும் வகையில் அன்புச்சோலை என்ற திட்டத்தின் மூலம் எங்களது இல்லத்திற்கு அருகிலேயே அமைத்துக்கொடுத்து உள்ளார்கள். அன்புச்சோலை ஆரம்பித்த நாள் முதல் சுதந்திரப் போராட்ட வீரர்களின் வாழ்க்கை வரலாற்றுப் புத்தகங்கள், சிறுகதைகள், தினசரி நாளிதழ்கள் உள்ளிட்ட புத்தகங்களை நாள்தோறும் வாசித்து வருகின்றேன், மேலும் எங்களுக்கு சிற்றுண்டி, தேநீர் வழங்குகிறார்கள். மேலும் யோகா வகுப்பில் கலந்து கொள்வதால் எங்கள் மனதும், உடலும் புத்துணர்வு பெறுகிறது, எங்களைப்போன்ற வயதானவர்களுக்கு வயது என்பது வெறும் எண்கள் மட்டுமே என்பதை உணர்த்தி எங்களது மனதினை இளம் பருவத்திற்குக் கொண்டு வந்த தந்தையுள்ளம் கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எங்களது நிறைந்த மனதோடு நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்து!

கொள்கைப் பற்றோடு உழைப்பிலும் உயர்ந்து வரும் உதயநிதிக்குப் பிறந்தநாள் வாழ்த்துகள்!

இளைஞரணிச் செயலாளராக - விளையாட்டுத் துறை அமைச்சராக - மாண்புமிகு துணை முதலமைச்சராக நீ ஆற்றிவரும் பணிகளை மக்களும் கழகத்தினரும் பாராட்டிச் சொல்வதைக் கேட்கும்போது தந்தையாக மட்டுமல்ல தலைவனாக மகிழ்ச்சி அடைகிறேன்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமைத் தொண்டனாக நான் உனக்கு அறிவுறுத்துவது,

காட்சிக்கு எளியனாக, கடுஞ்சொல் சொல்லாதவனாக, மக்களின் அன்புக்குரியவனாக,எப்போதும் அவர்களுக்காகக் களத்தில் நிற்பவனாக நீ திகழ வேண்டும்.

இளைஞர்களிடம் திராவிட இயக்கக் கருத்தியலைத் தொடர்ந்து விதைத்து, அவர்களுக்கு எடுத்துக்காட்டாகத் திகழ வேண்டும்!

— மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளையொட்டி வாழ்த்துத் தெரிவித்து, வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு - 27.11.2025

கோபாலபுரம் இல்லத்தில்
முத்தமிழறிஞர் **கலைஞர்** அவர்களின்
திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை

தூய்மைப் பணியாளர்களுக்கான முதலமைச்சரின் உணவுத் திட்டம்

தூய்மைப் பணியாளர்களுக்கு குடியிருப்பு வீடுகள் உள்ளிட்ட புதிய நலத்திட்டங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 15.11.2025 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பெருநகரச் சென்னை மாநகராட்சியில் 31,373 தூய்மைப் பணியாளர்கள் பயன்பெறும் வகையில், தூய்மைப் பணியாளர்களுக்கான முதலமைச்சரின் உணவுத் திட்டத்தைத் தொடங்கி வைத்து, தூய்மைப் பணியாளர்களுக்குக் குடியிருப்பு ஒதுக்கீடு வழங்கும் திட்டத்தில் 1,000 தூய்மைப் பணியாளர்களுக்கு குடியிருப்புக்கான ஒதுக்கீட்டு ஆணைகள், பணியின்போது உயிரிழந்த 2 தூய்மைப் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்குத் தலா 10 இலட்சம் ரூபாய் நிதியுதவி, தூய்மைப் பணியாளர்களின் குடும்பத்தினர் சுயமாகத் தொழில் தொடங்குவதற்கு முதலமைச்சரின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்கான தொழில் முனைவோர் திட்டத்தின் கீழ் 25

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. மு.க.ஸ்டாலின்** அவர்கள் தொடங்கி வைத்தார்- 15.11.2025.

பயனாளிகளுக்கு மானியத்துடன் கடனுதவி, தூய்மைப் பணியாளர்களின் குழந்தைகளுக்குப் புதிய உயர்கல்வி உதவித்தொகைத் திட்டத்தின் கீழ், 1,260 மாணவர்களுக்கு அனைத்து விதமான கல்விக் கட்டணம், விடுதிக் கட்டணம், இதர கட்டணங்களுக்காக 2.82 கோடி ரூபாய்க்கான உதவிகள், தூய்மைப் பணியாளர்களுக்கு தாட்கோ நிறுவனம் மூலம் செயல்படுத்தப்படும் சிறப்புத் திட்டங்களின் கீழ், 1,000 பயனாளிகளுக்கு 35 இலட்சம் ரூபாய் உதவித் தொகைக்கான நலத்திட்ட உதவிகள் ஆகியவற்றை வழங்கினார்.

தூய்மைப் பணியாளர்கள், அவர்களைச் சார்ந்தோரின் நலன் கருதி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 2007-ஆம் ஆண்டு "தூய்மைப் பணியாளர் நல வாரியம்" அமைக்கப்பட்டது. இவ்வாரியத்தில் பதிவு செய்த உறுப்பினர்களுக்கு விபத்து மரண உதவித்தொகை, இயற்கை மரண நிதியுதவி, ஈமச்சடங்கு நிதியுதவி, கல்வி உதவித்தொகை, திருமண நிதியுதவி, மகப்பேறு நிதியுதவி, கண்கண்ணாடி வாங்க நிதியுதவி, முதியோர் ஓய்வூதியம், வீடு வழங்கும் திட்டம் போன்ற பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வழியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு, தூய்மைப் பணியாளர்களின் நலன் காத்திட பல்வேறு திட்டங்களைச் சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில், தூய்மைப் பணியாளர்களின் வாழ்வாதாரத்தை மேலும் மேம்படுத்திட 14.08.2025 அன்று 6 புதிய சிறப்புத் திட்டங்களை அறிவித்திருந்தார்கள்.

தூய்மைப் பணியாளர்களின் நல்வாழ்விற்காக அறிவிக்கப்பட்ட அப்புதிய அறிவிப்புகளைச் செயல்படுத்திடும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பெருநகரச் சென்னை மாநகராட்சியில் தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு வழங்கும் தூய்மைப் பணியாளர்களுக்கான முதலமைச்சரின் உணவுத் திட்டம், குடியிருப்புக்கான வீடுகள், புதிய நலத்திட்ட உதவிகளை வழங்கி தொடங்கி வைத்தார். அதன் விவரங்கள்:

பெருநகர சென்னை மாநகராட்சியில் தூய்மைப் பணியாளர்களுக்கான முதலமைச்சரின் உணவுத் திட்டம்

பெருநகரச் சென்னை மாநகராட்சியில் காலை, மதியம், இரவு என சுழற்சி முறையில் பணியாற்றும், தூய்மைப் பணியாளர்களுக்கு

உணவு வழங்கும் தூய்மைப் பணியாளர்களுக்கான முதலமைச்சரின் உணவுத் திட்டத்தைத் தொடங்கி வைக்கும் விதமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தூய்மைப் பணியாளர்களுக்கு உணவுத் திட்டத்திற்காக உணவு கொண்டு செல்லும் வாகனங்களைக் கொடியசைத்துத் தொடங்கி வைத்து, தூய்மைப் பணியாளர்களுக்கு உணவினை வழங்கி அவர்களுடன் கலந்துரையாடினார்.

இத்திட்டம் நடைமுறைப்படுத்துவதால், பெருநகரச் சென்னை மாநகராட்சியில், நிரந்தர, சுயஉதவிக்குழு தூய்மைப் பணியாளர்கள், மலேரியா தொழிலாளர்கள், தூய்மைப் பணிக்கான தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்கள், நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புகளில் தனியார் நிறுவனத்தில் பணியாற்றும் தூய்மைப் பணியாளர்கள், மயான பூமி தூய்மைப் பணியாளர்கள், தனியார் பொது பங்களிப்பில் செயல்படும் கழிப்பறைச் சுத்தம் செய்யும் பணியாளர்கள், பூங்காக்கள், விளையாட்டு மைதானங்களில் பணியாற்றும் தொழிலாளர்கள், மாநகராட்சியில் களப் பணிகளில் ஈடுபடும் சாலைப் பணியாளர்கள், என மொத்தம் 31,373 பணியாளர்களுக்கு நாள்தோறும் வெப்பம் தாங்கும் பைகளில் (Insulated Thermal Carrying Bag) சிற்றுண்டி தாங்கிப் பெட்டிகள் (Stainless Steel Tiffin Box) மூலம் சுகாதாரமான உணவு வழங்கப்படும்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் தூய்மைப் பணியாளர்களுக்கு குடியிருப்பு ஒதுக்கீடு வழங்கும் திட்டம்

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், பெருநகரச் சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் வீட்டுக் கழிவுகளை அகற்றும் பணியில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களுக்குத் தகுதியின் அடிப்படையில் முதற்கட்டமாக கார்கில் நகர் திட்டப்பகுதியில் 510 குடியிருப்புகளும், பெரும்பாக்கம் பகுதி-III திட்டப்பகுதியில் 490 குடியிருப்புகளும், என மொத்தம் 1,000 குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதற்கான ஆணைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

பணியின்போது இறக்க நேரிடும் தூய்மைப் பணியாளர்களின் குடும்பங்களின் எதிர்கால நலன், வாழ்வாதாரத்தை உறுதி செய்ய ரூ.10 இலட்சம் நிதியுதவி வழங்கும் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் பெருநகரச் சென்னை மாநகராட்சியில் பணியின்போது உயிரிழந்த 2 தூய்மைப் பணியாளர்களின் குடும்பத்தினருக்கு

தலா 10 இலட்சம் ரூபாய் உதவித் தொகைக்கான காசோலைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

தூய்மைப் பணியாளர்களின் குடும்பத்தினர், சுயமாகத் தொழில் தொடங்குவதற்கு ரூபாய் 3.50 இலட்சம் வரை மானியம் வழங்கும் திட்டம்

தூய்மைப் பணியாளர்களின் குடும்பத்தினர் சுயமாகத் தொழில் தொடங்கிடும் வகையில், முதலமைச்சரின் ஆதிதிராவிடர், பழங்குடியினர் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்கானத் தொழில் முனைவோர் திட்டத்தின் கீழ், 25 பயனாளிகளுக்கு மொத்தத் திட்ட தொகையான 46 இலட்சம் ரூபாயில் 16 இலட்சம் ரூபாய் மானியத் தொகைக்கான காசோலைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

தூய்மைப் பணியாளர்களின் குழந்தைகளுக்குப் புதிய உயர் கல்வி உதவித்தொகை திட்டம்

தூய்மைப் பணியாளர்களின் குழந்தைகளில் 1,260 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு ஆதிதிராவிடர், பழங்குடியினர், இதர திட்டங்களின்படி வழங்கப்பட்டு வரும் கல்வி உதவித் தொகையுடன் கூடுதலாகப் புதிய உயர்கல்வி உதவித் தொகைத் திட்டத்தின் கீழ், அவர்கள் எந்தப் பள்ளியில் பயின்றாலும் அவர்கள் உயர்கல்விப் பயிலும்பொழுது அவர்களுக்கு அனைத்து விதமான கல்விக் கட்டணம், விடுதிக் கட்டணம், இதர கட்டணங்களுக்காக 2.82 கோடி ரூபாய் நலத்திட்ட உதவிக்கான ஆணைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களுக்கு தாட்கோ நிறுவனம் மூலம் செயல்படுத்தப்படும் சிறப்புத் திட்டங்கள்

தூய்மைப் பணிபுரிவோர், அவர்களைச் சார்ந்த குடும்ப உறுப்பினர்களுக்கு நலத்திட்ட உதவிகளான விபத்து மரண உதவித்தொகை, இயற்கை மரண உதவித் தொகை, ஈமச்சடங்கு உதவித் தொகை, கல்வி உதவித் தொகை, திருமண உதவித் தொகை, மகப்பேறு உதவித் தொகை, கருச்சிதைவு உதவித் தொகை, கண் கண்ணாடி வாங்க உதவித் தொகை, முதியோர் ஓய்வூதியம் ஆகிய நலத்திட்ட உதவிகள் வழங்கிடும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 1,000 பயனாளிகளுக்கு 35 இலட்சம் ரூபாய் உதவித் தொகைக்கான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

தூய்மைப் பணியாளர்களின் நல்வாழ்விற்காகப் புதிய அறிவிப்புகளை வெளியிட்டு, அதனைச் செயல்படுத்தியதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்குத் தூய்மைப் பணியாளர்கள் தங்களது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை.

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தை முதலில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தினமும் காலையில் விடிகின்றபோது நம்முடைய சென்னை, முந்தைய நாள் குப்பைகள் இல்லாமல், தூய்மையாக இருக்கிறது என்றால், அதற்குக் காரணம், இரவு முழுவதும் கடுமையாக உழைக்கின்ற, தூய்மைப் பணியாளர்களாக இருக்கக்கூடிய நீங்கள்தான்!

அப்படிப்பட்ட உங்களுக்கு உணவு வழங்கும் இந்த முதலமைச்சரின் உணவுத் திட்டத்தைத் தொடங்கி வைப்பதில் நான் உள்ளபடியே பெருமை அடைகிறேன்!

என்னதான், சத்தான உணவு – டயட் – எக்சர்சைஸ் என்று இருந்தாலும், நாம் ஆரோக்கியமாக வாழவேண்டும் என்றால், அதற்கு அடிப்படை என்னவென்று கேட்டால், தூய்மைதான்!

வெயில் – மழை – வெள்ளம் – புயல் என்று இந்த மாநகரம் எந்தப் பேரிடரை எதிர்கொண்டாலும், அதிலிருந்து மீண்டு வருவதில் உங்களுடைய பணி தான் மிக முக்கியமானதாக இருக்கிறது!

உங்களின் ஒப்பற்ற உழைப்பால்தான், நம்முடைய சுற்றுப்புறம் சுத்தமாக இருக்கிறது!

உங்களால்தான் நீர்நிலைகள் தூய்மையாக இருக்கிறது! உங்களால்தான் குழந்தைகள் நலமாகப் பள்ளிக்கு எல்லாம் சென்று வருகிறார்கள்!

நான் இந்தச் சென்னை மாநகருக்கு மேயராகப் பொறுப்பேற்றபோது, தலைவர் கலைஞர் எனக்கு என்ன அறிவுரை சொன்னார்கள் என்றால், "இது பதவியல்ல; பொறுப்பு" என்று சொன்னார். அதேபோல், நான் உங்களுக்குச் சொல்கிறேன்... நீங்கள் செய்வதும் வேலை இல்லை; அது சேவை!

சென்னையில் நைட் டிராவல் செய்பவர்களுக்குத்தான் தெரியும்... பகலெல்லாம் பிசியாக இருக்கின்ற இந்த சிட்டியில், ஊரே அடங்கிய பிறகு, ஓய்வில்லாமல் உழைப்பவர்கள் நீங்கள்தான்!

உங்களின் அர்ப்பணிப்புமிக்க சேவை உணர்வைப் பார்த்து - நான் மட்டுமல்ல; இந்த மாநகரமே நன்றியுணர்ச்சியோடு உங்களை வணங்குகிறது! ஒட்டுமொத்த சென்னை சார்பாக உங்களுக்கு எல்லாம் என்னுடைய இதயப்பூர்வமான நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்!

கிட்டத்தட்ட 30 ஆண்டுகளுக்கு முன்பு, நான் இந்தச் சென்னைக்கு மேயராகப் பொறுப்பேற்றபோது, தூய்மையான நகராக இந்த நகரை உயர்த்த வேண்டும் என்று நினைத்தேன். அதற்காகத் தூய்மைப் பணிகளில், இயந்திரங்களைப் பயன்படுத்த நாங்கள் தொடங்கினோம்.

குப்பைகளை, மக்கும் குப்பை - மக்காத குப்பை என்று பிரித்து வைத்து, அதை மேலாண்மை செய்ய

இருண்டுபோன எங்க வாழ்க்கையிலே வந்த ஒரு சுடர் ஒளி...

தூய்மைப் பணியாளர்களுக்கான முதலமைச்சரின் உணவுத்திட்டம் தந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு பெருநகரச் சென்னை மாநகராட்சித் தூய்மைப் பணியாளர் பயனாளி திருமதி அமலா நன்றி...

என் பெயர் அமலா. மண்டலம் 2-இல் தூய்மைப் பணியாளராக வேலை செய்றேன். நான் காலையிலே எழுந்திருச்சி தினமும் வேலைக்கு அவசர அவசரமா சாப்பாடு செஞ்சிட்டு குழந்தைகளுக்கெல்லாம் குடுத்திட்டு வேலைக்கு வரதுக்கு ரொம்ப கஷ்டமா இருக்கும். ஒரு சில நேரத்தில அவசரத்தாலேயே நான் சாப்பிடாமலே வந்திருவேன். அதற்கப்புறம் நான் என்னன்னா ஒரு சில டைம்ல பழைய சாதத்தையும் கூட எடுத்துட்டு வந்து சாப்பிடுவேன். அந்த பழைய சாதம் கூட இல்லைனா நாங்க வேலை செய்யுற இடத்துல குப்பை வாங்குற வீட்டில் மிச்சம் மீதி சாப்பாடு இருக்கும்ல, அந்த மிச்ச மீதி சாப்பாடுகள எங்களுக்கு குடுப்பாங்க. நாங்க அதை வாங்கி சாப்பிட்டிட்டு அந்த வேலையைச் செய்வோம். அந்த வேலையைச் செய்யும்போது எங்களுக்கு வந்து ரொம்ப அது கஷ்டமா இருந்தது. இப்ப வந்து அந்த கஷ்டம் கிடையாது. ஏன்னா மாண்புமிகு முதலமைச்சர் அய்யா தூய்மைப் பணியாளர் மேல அக்கறை கொண்டு எங்களுக்கு உணவு வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறாரு. இந்தத் திட்டத்தின் மூலமாக நான் வந்து சத்தான சாப்பாடும், ஆரோக்கியமான சாப்பாடும் சாப்பிடப்போறேன். யார்கிட்டேயும் நான் சாப்பாடு கையேந்தி வாங்கி சாப்பிடுங்கிற அவசியம் கிடையாது. ஏன்னா அய்யா இந்தத் திட்டத்தின் மூலமாக சுய மரியாதையோட இப்ப வாழப் போறோம். அது மட்டுமல்ல, எங்களுக்கு வீடு வந்து ஒரு கனவாதான் இருந்தது. ஏன்னா அங்க இந்தத் தூய்மைப் பணியாளர் வேலை செஞ்சிதான் எங்க பசங்களைப் படிக்க வச்சி அந்த வருமானத்திலிருந்து தான் நாங்க வீட்டு வாடகை எல்லாம் கட்னோம். நாங்க வந்து சொந்த வீடு எங்களுக்குக் கிடைக்குமான்னு டெய்லி கடவுள்கிட்டெல்லாம் போய் வேண்டின காலமெல்லாம் இருக்குது. ஆனால் இப்பகூட அந்தக் கவலை எனக்கு கிடையாது. ஏன்னா மாண்புமிகு முதலமைச்சர் அய்யா வந்து இன்னைக்கு எங்களுக்கெல்லாம். சொந்தமா வீட்டில பிரவேசிக்கிறதுக்கு எங்களுக்கு வழி செஞ்சிருக்காரு. எங்களுக்கு ஒரு கருணைக் கடலா உருவெடுத்து அன்னதானப் பிரபுவாகவே மாறி இருண்டுபோன எங்க வாழ்க்கையிலே ஒரு சுடர் ஒளியாய் வந்த அய்யாவுக்கு நாங்க தூய்மைப் பணியாளர்கள் எல்லாம் சேர்ந்து எங்கள் கரங்களைக் கூப்பி அய்யாவுக்கு நன்றி தெரிவித்துக்கொள்றோம்.

வேண்டும் என்று பல்வேறு முன்னெடுப்புகளை எல்லாம் கொண்டுவந்தேன். அவையெல்லாம்தான் இன்றைக்கு நாம் அடைந்திருக்கின்ற மாற்றத்திற்கு முதல் படி!

இந்த மாநகரத்தைத் தூய்மையாகப் பாதுகாக்கின்ற உங்களைப் பாதுகாக்க வேண்டியது எங்களுடைய கடமை! உங்களுடைய மாண்பு காக்கப்பட வேண்டும்! உங்களுடைய வாழ்க்கைத் தரம் உயர வேண்டும்! உங்களுடைய நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும்! இதுதான், சமூகநீதி!

இந்தச் சமூகநீதிப் பயணத்தில் உங்கள் சுயமரியாதையைக் காத்து – உங்கள் பசியைப் போக்கிடத்தான், இன்றைக்கு இந்த முதலமைச்சரின் உணவுத் திட்டத்தை தொடங்கியிருக்கிறோம்!



இந்தத் திட்டத்தின்படி, தூய்மைப் பணியாளர்களுக்கு அவர்களுடையப் பணிகளுக்கு இடையில், உணவு வேளையில் சுவையும் - ஆரோக்கியமும் நிறைந்த உணவு வழங்கப்படும்.

தூய்மையான முறையில் சமைத்து, டிஃபன் பாக்ஸில் வைத்து, சூடு குறையாமல் இருப்பதற்கு வெப்பக் காப்புப் பையில் அதை எடுத்துச் செல்லப்பட்டு, தூய்மைப் பணியாளர்கள் பணியாற்றும் இடத்திற்கு அருகாமையிலேயே உள்ளாட்சி அமைப்புக்குச் சொந்தமான கட்டடத்தில் உணவு பரிமாறப்படும்.

நம்முடைய நலனுக்காக உழைக்கின்ற மக்களுக்கு உணவு அளிப்பது அரசின் பொறுப்பு என்கின்ற உணர்வோடுதான் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துகிறோம்.

இது இல்லாமல், தமிழ்நாட்டில் தூய்மைப் பணியாளர்கள் நலனுக்காக நம்முடைய கழக ஆட்சி காலத்தில் முக்கியமான திட்டங்கள் நிறைய செய்திருக்கிறோம். அதுபற்றி நான் சுருக்கமாகச் சொல்ல வேண்டும் என்றால்,

2006 – 2011-இல் தலைவர் கலைஞர் ஆட்சி காலத்தில்தான், தூய்மைப் பணியாளர்கள் நல வாரியம் அமைக்கப்பட்டது. அவர்களுக்கான நலத்திட்டங்களை வழங்குவதற்கு அதனை வழிவகை செய்தோம். தூய்மைப் பணியாளர்களின் குழந்தைகளுக்குக் கல்வி உதவித்தொகை, திருமண நிதியுதவி வழங்கும் திட்டம் உள்ளிட்ட பல திட்டங்கள் தொடங்கப்பட்டன.

தாட்கோ நிறுவனம் மூலமாகவும், தூய்மைப் பணியாளர்களின் வாரிசுகளுக்குத் தொழில் சார்ந்த பயிற்சிகள் வழங்கப்பட்டு, அவர்கள் தொழில் முனைவோராக வழிவகை செய்யப்பட்டது. தூய்மைப் பணியாளர்களுக்குச் சுகாதாரக் காப்பீடு, பாதுகாப்பு உபகரணங்கள் வழங்குதல், தடுப்பூசி முகாம்கள் ஆகியவை கட்டாயமாக்கப்பட்டன.

நகர்ப்புறப் பகுதியில், தூய்மைப் பணியாளர்கள் தள்ளுவண்டி பயன்படுத்துவதால், அவர்களுக்கு ஏற்படக்கூடிய கஷ்டத்தைப் போக்குவதற்கு மூன்று சக்கர மிதிவண்டி வாகனங்கள், இலகு ரக வாகனங்கள் வழங்க நடவடிக்கை எடுத்தோம்.

நகர்ப்புறத் தூய்மைப் பணியாளர்களுக்கு முதன்முறையாக, அடுக்குமாடிக் குடியிருப்புக் கட்டும் திட்டம் துவங்கப்பட்டது. மேலும், பாதாளச் சாக்கடை அடைப்பை நீக்கக்கூடிய பணியில் ஈடுபட்டு, பணியின்போது இறக்க நேரிட்டால், அவர்கள் வாரிசுகளுக்குக் கருணைத் தொகையாக 30 இலட்சம் ரூபாய் வழங்கக்கூடிய திட்டம் உருவாக்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக இப்போது நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில், தூய்மைப் பணியாளர்கள் மேம்பாட்டுத் திட்டம் அறிவிக்கப்பட்டு, கடந்த 2022-ஆம் ஆண்டு டிசம்பர் 12-ஆம் தேதி, மதுரையில் நான் தொடங்கி வைத்தேன்.

இந்தத் திட்டத்தில், நான் முதல்வன் திறன் பயிற்சி, பாதுகாப்பு உபகரணம் வழங்குதல், ஹெல்த் இன்சூரன்ஸ், நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தில், தொடர் உடல்நலப் பரிசோதனைகள், மாற்று வாழ்வாதார நடவடிக்கைகள் ஆகியவற்றைத் தடையின்றிப் பெற ஏற்பாடு செய்திருக்கிறோம்.

இதற்காக, 50 கோடி ரூபாய் - அறக்கட்டளை நிதி உருவாக்கப்பட்டு, தூய்மைப் பணியாளர்களின் ஒட்டுமொத்த வாழ்க்கை மேம்படுத்தப்பட நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

சென்னை பெருநகர் குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் சார்பில், பாதாளச் சாக்கடை திட்டத்தின் மூலம் நடைபெறும் அனைத்துப் பணிகளும், முழுமையாக இயந்திரமயம் ஆக்கப்பட்டிருக்கின்றன.

இன்னும் நிறைய நலத்திட்டங்கள் செயல்பாட்டில் இருக்கின்றன. இவ்வளவு செய்திருந்தாலும், உங்களுக்கான தேவைகள் இன்னும் நிறைய இருக்கின்றன என்று எனக்கு நன்றாகத் தெரியும்!

நான் நிச்சயமாகச் சொல்கிறேன்... அதையெல்லாம் நம்முடைய திராவிட மாடல் அரசு படிப்படியாகச் செய்யும் என்பதை நம்பிக்கையோடு தெரிவித்துக் கொள்கிறேன்!

இரவு பகல் பார்க்காமல் நீங்கள் உழைக்கிறீர்கள்... ஆனால், உங்களுக்கென்று தனியாக ஓய்வறை இல்லை என்று பலரும் கவலைப்படுவதாக என்னிடம் சொன்னார்கள்... பலபேர் என்னிடத்தில் சொன்னார்கள். அதனால், இந்த நிகழ்ச்சி மூலமாக ஒரு அறிவிப்பை வெளியிட விரும்புகிறேன்...

பெருநகர சென்னை மாநகராட்சியின் 200 வார்டுகளிலும், தூய்மைப் பணியாளர்களுக்காக பிரத்தியேகமாக, 300 சதுர அடி அளவில் உடை மாற்றும் அறை,கழிப்பறை உள்ளிட்ட வசதிகளுடன் ஓய்வறைகள் கட்டப்பட்டு, பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும்!

அதுமட்டுமல்ல, இன்றைக்குத் தொடங்கப்பட்டிருக்கின்ற இந்த முதலமைச்சரின் உணவுத்திட்டம் வருகின்ற டிசம்பர் 6-ஆம் தேதி முதல் அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகளுக்கும் விரிவுப்படுத்தப்படும்!

நான் ஏற்கெனவே சொன்னது போல, உங்களுடைய மற்ற கோரிக்கைகள் படிப்படியாக நிச்சயம் நிறைவேற்றித் தரப்படும்! என்னைப் பொறுத்தவரைக்கும், வெளி மாநிலங்களில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் வருபவர்களுக்குச் சென்னைதான் இந்தியாவிலேயே – "கிளீன் சிட்டி", தமிழ்நாடு தான் "கிளீன் ஸ்டேட்" என்று சொல்ல வேண்டும்! அதற்கு நீங்கள் எல்லோரும் துணை நிற்கவேண்டும்! இந்த நிலையை நாம் உடனே அடைந்துவிட முடியாது. நன்றாகத் தெரியும். ஏனென்றால், இதற்கு பல நடைமுறைச்

சிக்கல்களும், தடைகள் எல்லாம் இருக்கிறது. அதை நான் மறுக்கவில்லை! இருந்தாலும், நான் உங்களைக் கேட்டுக் கொள்ள விரும்புவது, இப்போது கூட சமீபத்தில், ஜெர்மனி நாட்டிற்குச் சென்று வந்தேன். அதற்குப் பிறகு வெளியிட்ட 'உங்களில் ஒருவன் பதில்கள்' வீடியோ பதிவில் நான் சொல்லியிருந்தேன். பொது இடங்களில் தூய்மையைப் பேணக் கூடிய "Self discipline" நம்முடைய மக்களுக்கு வரவேண்டும் என்று சொன்னேன்.

பொதுமக்கள் சிறிது யோசித்துப் பார்க்கவேண்டும். நாம் நடந்து செல்கின்ற பாதை, சிறிது தூய்மையற்று இருந்தாலே, முகச் சுளிப்போடு கடந்து போவோம். ஆனால், தூய்மைப் பணியாளர்களோ, நாம் அன்றாடம் தேவையில்லை என்று தூக்கி எறிகின்ற கழிவுகளை அப்புறப்படுத்துகிறார்கள்.

இவர்களைக் கொஞ்சம் நினைத்துப் பார்த்து, அதையெல்லாம் நீங்கள் சிந்தித்துப் பார்க்காமல், பொது இடங்களில் கழிவுகளைக் கொட்டுவது போன்ற செயல்களை எல்லாம் செய்வது நியாயமா? என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். சிலரெல்லாம் வீட்டில் இருந்து, குப்பைத் தொட்டி வரைக்கும், எடுத்துக் கொண்டு வந்த குப்பையை, குப்பைத் தொட்டியில் போடாமல், அங்கிருந்து தூக்கி எறிவது, அப்படியே அருகாமையில் போடுவது, தூரத்தில் இருந்து தூக்கி வீசுவார்கள்... இந்தப் பழக்கத்தை எல்லாம் ஈசியா மாற்றிக்கொள்ளலாம்!

எதிர்காலத்தில், மேற்கத்திய நாடுகள், ஜப்பான் போன்ற நாடுகளில் இருப்பதுபோல, மக்கள் அனைவரும் சுய ஒழுக்கத்தை நூறு விழுக்காடு கடைப்பிடிப்பவர்களாக முன்னேறி, குப்பைகளை ஒழுங்காகத் தரம் பிரித்துப் போட்டு, தூய்மைப் பணியாளர்களின் சுமை பெருமளவில் குறைக்க வேண்டும்.

தூய்மைப் பணியாளர் என்பது மற்ற எந்தப் பணியையும் போன்ற பணியாகக் கருதப்படுகின்ற அளவுக்கு இவர்களுடைய கண்ணியமும், முறையான பணிச்சூழலும் உறுதி செய்யப்பட வேண்டும் என்று நான் விரும்புகிறேன்!

அதற்கான முன்னெடுப்புகளைத், திட்டங்களாக உருவாக்கிச் செயல்படுத்த வேண்டும் என்று நான் நினைக்கிறேன்... இதையெல்லாம் இவர்களுக்காக என்று சொல்லவில்லை...

பொதுவாகவே, ஒரு சமூகமாக நம்முடைய ஒழுக்கம் மேம்பட வேண்டும் என்ற அக்கறையுடன் சொல்கிறேன்! நம்மைப் பார்த்துத்தான் நம்முடைய பிள்ளைகள் நடந்து கொள்வார்கள்! நாம் Correct-ஆக நடந்து கொண்டால், அடுத்து வரக்கூடிய தலைமுறை இன்னும் Better-ஆக நடந்து கொள்வார்கள். அப்படிப்பட்ட ஒரு சமூகமாக நாம் நகரவேண்டும் என்று நான் விரும்புகிறேன்!

என்னுடைய கனவு – உங்களுடைய வாழ்க்கைத் தரம் முன்னேற வேண்டும்! உங்களுடைய உடல்நலம் பாதுகாக்கப்பட வேண்டும்! உங்களுடைய பிள்ளைகள் நன்றாகப் படித்து, உயர்ந்த பொறுப்புகளில் உட்கார வேண்டும்!

கடந்த ஆண்டு, ஒரு செய்தி வந்தது... ஞாபகம் இருக்கும் என்று நினைக்கிறேன்... திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த துர்கா என்ற ஒரு பெண் - தூய்மைப் பணியாளரின் மகள் – அவர் படித்து, குரூப்-2 தேர்வில் வெற்றி பெற்று, நகராட்சி ஆணையராக பொறுப்பேற்றுக் கொண்டார்கள்! இதுதான், நான் விரும்பக்கூடிய முன்னேற்றம்!

எதிர்காலத்தில், உங்கள் பிள்ளைகளும் படித்து முன்னேறி, பெரிய அதிகாரிகளாகப் பொறுப்பிற்கு வரவேண்டும்! அவர்களுக்கு நான் பணி நியமன ஆணைகள் தரவேண்டும்! இதற்காகத்தான் தொலைநோக்குப் பார்வையுடன் திட்டங்களை எல்லாம் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்!

சுய ஒழுக்கம் இல்லாமல், முழுமையான வளர்ச்சியோ, சமூக மேன்மையோ அடைவதற்குச் சாத்தியமே கிடையாது! அரசு தன்னுடைய கடமையைச் செய்யும்! மக்களும் பொறுப்பாக இருந்து, பொது இடங்களிலும், நம்முடைய மனங்களையும் தூய்மையாக வைத்திருப்போம்! அதற்காகத் தொடர்ந்து உழைப்போம்! தன்னலம் கருதாத தூய்மைப் பணியாளர்களின் சேவையைப் போற்றுவோம்! நன்றி! வணக்கம்!

கோயம்புத்தூர் மாவட்டத்தில் உலகத்தரத்தில் பல்வேறு நவீன வசதிகளுடன் செம்மொழிப் பூங்கா...

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 25.11.2025 அன்று கோயம்புத்தூர், காந்திபுரம் மத்திய சிறைச்சாலை வளாகத்தில் 165 ஏக்கர் பரப்பளவிலான செம்மொழிப் பூங்காவிற்கு, முதற்கட்டமாக 45 ஏக்கர் பரப்பளவில் 208.50 கோடி ரூபாய் செலவில் உலகத்தரத்தில் பல்வேறு நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள செம்மொழிப் பூங்காவினை மக்கள் பயன்பாட்டிற்காகத் திறந்துவைத்தார்.

செம்மொழிப் பூங்கா அமைத்திட அறிவிப்பு

கோயம்புத்தூரில் 2010-ஆம் ஆண்டு நடைபெற்ற உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டில், அன்றைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், செம்மொழிப் பூங்கா அமைக்கப்படும் என்று அறிவித்தார்.

அதன் தொடர்ச்சியாக, 22.11.2021 அன்று கோயம்புத்தூர் வ.உ.சி. மைதானத்தில் நடைபெற்ற அரசு விழாவில், காந்திபுரத்தில் பொதுமக்கள் பயன்படுத்தக்கூடிய நடைபாதை போன்ற அனைத்து வசதிகளும், கூட்ட அரங்கு, வெளி அரங்கு போன்ற கட்டமைப்புகளும் கொண்ட செம்மொழிப் பூங்கா இரண்டு கட்டங்களாக அமைக்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்.

உலகத்தரத்தில் அமைக்கப்பட்டுள்ள செம்மொழிப் பூங்கா மக்கள் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தல்

இந்த அறிவிப்பினை செயல்படுத்திடும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த 18.12.2023 அன்று செம்மொழிப் பூங்கா அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டி, பணிகளைத் தொடங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து கோயம்புத்தூர் மாநகராட்சி, காந்திபுரம் மத்திய சிறைச்சாலை வளாகப் பகுதியில் 165 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கவும், தற்போது முதற்கட்டமாக 45 ஏக்கர் நிலப்பரப்பில், உலகத் தரத்திலான பூங்கா அமைப்பதற்கு 208.50 கோடி ரூபாய் நிருவாக அனுமதி வழங்கப்பட்டது.

அதன்படி, செம்மொழிப் பூங்காவில் தாவரவியல் பூங்கா, சூரியதகடு, சிற்பங்கள், பேட்டரியில் இயங்கும் வாகனங்கள், உக்கடம் கழிவுநீர்ச் சுத்திகரிப்பு மையத்திலிருந்து சுத்திகரிக்கப்பட்ட நீரைக் குழாய் மூலம் செம்மொழிப் பூங்காவிற்கு எடுத்து வருதல்,

பூங்கா வளாகத்தில் தரைத்தள வாகன நிறுத்துமிடம், நிலத்தடி நீர்த்தொட்டி, மழைநீர் வடிகால், மின்சாரம் மற்றும் தகவல் தொடர்பு குழாய்கள், கூடுதல் மேம்பாட்டுப் பணிகள், தரைத்தள வாகன நிறுத்துமிடம் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் மொத்தம் 208.50 கோடி ரூபாய் செலவில் உலகத்தரத்தில் அமைக்கப்பட்டுள்ள செம்மொழிப் பூங்காவினைப் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்துவைத்தார்.

பின்னர், பூங்காவில் உள்ள தமிழர் கொடை சிற்ப வனம், கடையேழு வள்ளல்கள் சிலைகள், மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான விளையாட்டுப் பூங்கா, படிப்பகம், திறந்தவெளி அரங்கம் போன்றவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார். மேலும், செம்மொழிப் பூங்காவில் மரக்கன்றினை நட்டார்.

அதனைத் தொடர்ந்து, கோயம்புத்தூர் மாவட்டம், செட்டிப்பாளையம் பேரூராட்சிக்குட்பட்ட ஓராட்டுக்குப்பை கிராமத்தில் அனைவருக்கும் வீடுகள் வழங்கும் திட்டம், ஜி.டி. நாயுடு அறக்கட்டளையின் பங்களிப்புடன் 5 கோடியே 67 இலட்சம் ரூபாய் செலவில் மாற்றுத்திறனாளிகளுக்காக பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்டுக் கட்டப்பட்டுள்ள 86 புதிய வீடுகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்துவைத்து, பயனாளிகளுக்கு வீடுகளுக்கான சாவிகளை வழங்கினார்.

பின்னர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கோயம்புத்தூரிலுள்ள முக்கியப் பிரமுகர்களை சந்தித்துக் கலந்துரையாடி, பூங்கா வளாகத்தில் நடைபெற்ற பாரம்பரியக் கலை நிகழ்ச்சிகளைப் பார்வையிட்டார்.

செம்மொழிப் பூங்காவின் சிறப்பம்சங்கள்

உலகத்தரம் வாய்ந்த இப்பூங்காவில், செம்மொழி வனம், மூலிகைத் தோட்டம், மகரந்தத் தோட்டம், நீர்த் தோட்டம், மணம்கமிழ்த் தோட்டம், பாலைவனத் தோட்டம், மலர்த் தோட்டம், மூங்கில் தோட்டம், நட்சத்திரத் தோட்டம், ரோஜா தோட்டம், பசுமை வனம் போன்ற 23 வகையான தோட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், செம்மொழி வனத்தில் சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள மரங்கள், செடிகள் நடப்பட்டு உள்ளதோடு, 2000-க்கும் மேற்பட்ட ரோஜா வகைகள் ரோஜா தோட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளன. அத்துடன் இப்பூங்கா வளாகத்தில் கடையேழு வள்ளல்களின் கற்சிலைகளும் நிறுவப்பட்டுள்ளன.

செம்மொழிப் பூங்கா வளாகத்தில், நுழைவுச்சீட்டு வழங்குமிடம், அனுபவ மையக் கட்டடம், 500 நபர்கள் அமரக்கூடிய வகையில் திறந்தவெளி அரங்கம், பூங்காவில் பணியாற்றும் தோட்டத் தொழிலாளர்களுக்கு அறை, உணவகம், ஒப்பனை அறை, சில்லறை விற்பனை நிலையம், செயற்கை நீர்வீழ்ச்சியுடன் கூடிய நுழைவு வாயில் போன்ற பல்வேறு சிறப்பம்சங்களுடன் அமைக்கப்பட்டுள்ளது.

செம்மொழிப் பூங்கா வளாகத்தில் தரைத் தள வாகன நிறுத்துமிடத்தில் மொத்தம்

453 கார்கள், 10 பேருந்துகள், 1,000 இருசக்கர வாகனங்கள் நிறுத்தும் அளவிற்கு கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், செம்மொழிப் பூங்கா வளாகத்தினுள் ஜெர்மன் தொழில்நுட்பத்தில் மழைநீர்ச் சேகரிப்பு வடிகால் அமைப்பு 2 கிலோ மீட்டர் நீளத்திற்கு அமைக்கப்பட்டுள்ளது.

இப்பூங்கா வளாகத்தில் மக்கள் நடைப்பயிற்சி மேற்கொள்வதற்கு நடைபாதை, சாலை வசதி அமைக்கப்பட்டுள்ளதோடு, மகளிர் சுயஉதவி குழுக்களால் தயாரிக்கப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதற்கு ஏதுவாக "மதி அங்காடி"-யும் நிறுவப்பட்டுள்ளது.

செம்மொழிப் பூங்கா வளாகத்தினுள், உலகத் தரத்தில் உயர்தர உடற்பயிற்சிக் கருவிகளுடன் கூடிய திறந்தவெளி உடற்பயிற்சிக் கூடம், 4,000 சதுர அடி பரப்பளவில் உள்வன மாதிரி காட்சியமைப்பு (Terrarium), குழந்தைகள் விளையாடுவதற்கு 14,000 சதுர அடி பரப்பளவில் விளையாட்டுத்திடல், சிறுவர்களுக்கான உள்விளையாட்டு அறை, மாற்றுத்திறனாளிகள் விளையாடுவதற்கு ஏதுவாக பிரத்தியேக விளையாட்டுத்திடல் போன்ற பல்வேறு பொழுதுபோக்கு வசதிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வளாகத்தில் உள்ள நுழைவுச்சீட்டு, அனுபவ மையக் கட்டடத்தில் பழங்காலத் தமிழர்கள் உபயோகப்படுத்திய பொருட்களுடன் கூடிய அருங்காட்சியகம், தாவரவியல் அருங்காட்சியகம், இளம்வயதினர் படிப்பதற்கு ஏதுவாக படிப்பகம், முதியோர்களும், மாற்றுத்திறனாளிகளும் பயணிக்கும் வகையில் சக்கர நாற்காலிகள், பேட்டரி வாகனங்கள் போன்ற வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

செம்மொழிப் பூங்கா வளாகத்தில் உள்ள மரங்கள், தாவரங்கள் குறித்த தகவல்கள் அடங்கிய பெயர்ப் பலகைகள் அமைக்கப்பட்டுள்ளதோடு, அதில் QR குறியீடுகள், Barcode போன்ற தொழில்நுட்ப வசதிகளும் நிறுவப்பட்டுள்ளன.

கோயம்புத்தூர் முதலீட்டாளர்கள் மாநாட்டில் ரூ.43,844 கோடி முதலீட்டில் 1,00,709 நபர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும் 158 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் 25.11.2025 அன்று தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் கோயம்புத்தூரில் நடைபெற்ற TN Rising முதலீட்டாளர்கள் மாநாட்டில், 42,792 கோடி ரூபாய் முதலீட்டில், 96,207 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் வழங்கிடும் வகையில் 111 புரிந்துணர்வு ஒப்பந்தங்களும், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் சார்பில், 1,052 கோடி ரூபாய் முதலீட்டில் 4,502 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் வழங்கிடும் வகையில் 47 புரிந்துணர்வு ஒப்பந்தங்களும், என மொத்தம், 43,844 கோடி ரூபாய் முதலீட்டில் 1,00,709 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிடும் வகையில் 158 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

மேலும், உயர்தர பம்புகள், மோட்டார் உற்பத்தித் தொழில் மேம்பாட்டிற்காக, ஆவாரம்பாளையத்தில் 14.43 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், வார்ப்புகள், உலோக வடிவமைப்பு மேம்பாட்டிற்காக, மூப்பேரிப்பாளையத்தில், 26.50 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், திறன்மிகு மையங்கள் அமைப்பதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன - 25.11.2025

அத்துடன், 9 தொழில் நிறுவனங்களில், பல்வேறு பணியிடங்களுக்குத் தெரிவு

செய்யப்பட்டவர்களுக்குப் பணி நியமன ஆணைகளையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை

தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்ட சில முக்கியமான திட்டங்களின் விவரம் பின்வருமாறு:

1) Yield Engineering Systems - அமெரிக்காவைத் தலைமையகமாகக் கொண்ட, உலகின் முன்னணிக் குறைக்கடத்தி உதிரிப் பாகங்கள் உற்பத்தி நிறுவனம் ஆகும். இந்நிறுவனம், கோவையில் தனது உற்பத்தி, பொறியியல் திட்டத்தை அமைத்துள்ளது. உலக அளவில், குறைக்கடத்தி உதிரிப்பாகங்களுக்கான தேவை தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில், இந்நிறுவனம் கோவையில், 150 கோடி ரூபாய் முதலீட்டில் 50 புதிய வேலைவாய்ப்புகள் வழங்கும் வகையில், ஒரு விரிவாக்கத் திட்டத்தை மேற்கொள்ள உள்ளது.

2) Mindox – சிங்கப்பூரைத் தலைமையகமாகக் கொண்ட இந்நிறுவனம், குறைக்கடத்தி உதிரிப்பாகங்கள் ஆராய்ச்சி வடிவமைப்பு, உற்பத்தியில் ஈடுபட்டுள்ளது. இந்நிறுவனம், 398 கோடி ரூபாய் முதலீட்டில் 460 புதிய வேலைவாய்ப்புகள் வழங்கும் வகையில், கோவையில் உள்ள அதன் உற்பத்தித் திட்டத்தை மேலும் விரிவுப்படுத்த திட்டமிட்டுள்ளது.

3) Caliber Interconnects – சிங்கப்பூரைத் தலைமையகமாகக் கொண்ட இந்த நிறுவனம், குறைக்கடத்தி மற்றும் மின்னணு உதிரிப்பாகங்கள் திட்டங்களைக் கோவை, திருநெல்வேலியில் அமைத்துள்ளது. கோயம்புத்தூரை மையமாகக்

கொண்டு, குறைக்கடத்தி, மின்சக்தி மின்னணு உற்பத்திச் சூழலை மேம்படுத்தும் நோக்கில், 3,000 கோடி ரூபாய் முதலீடு, 4,000 புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில், ஒரு விரிவாக்கத் திட்டத்தை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது.

4) சக்தி ஏர்கிராஃப்ட் இண்டஸ்ட்ரி லிமிடெட் – திருப்பூர் மாவட்டத்தில் நவீன இரு இருக்கைகள் கொண்ட பயிற்சி விமானங்களின் அசெம்ப்ளி, உதிரிப் பாகங்கள் உற்பத்தி செய்யும் அதிநவீன தொழிற்திட்டத்தை அடுத்த ஐந்து ஆண்டுகளில் 500 கோடி ரூபாய் முதலீட்டுடன் செயல்படுத்தவுள்ளது. இத்திட்டத்தின் மூலம் நேரடியாக 200 நபர்களுக்கும், மறைமுகமாக சுமார் 1,000 நபர்களுக்கும் வேலைவாய்ப்புகள் உருவாகும்.

மேற்கண்ட முதலீடுகள், ஜவுளி, வான்வெளி, பாதுகாப்பு, மின்னணுவியல், தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள், பொது உற்பத்தி, சுற்றுலா துறைகளில் மேற்கொள்ளப்பட உள்ளன. இம்முதலீடுகள் பரவலாகக் கோவை, திருப்பூர், நாமக்கல், கரூர், ஈரோடு, நீலகிரி, பெரம்பலூர் போன்ற மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட உள்ளன.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் சார்பில் 1,052 கோடி ரூபாய் முதலீட்டில் 4,502 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் வழங்கிடும் வகையில் 47 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இரண்டு திறன்மிகு மையங்கள் அமைத்திட அடிக்கல் நாட்டுதல்.

வார்ப்புத் தொழில், பம்புகள் உற்பத்தித் தொழில் ஆகியவற்றில் கோவை மாவட்டம் முன்னணி மாவட்டமாகத் திகழ்ந்து வரும் நிலையில், இத்துறைகளை மேலும் மேம்படுத்தும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இரண்டு திறன்மிகு மையங்களுக்கு அடிக்கல் நாட்டினார். அதன் விவரம்:

- ஆவாரம்பாளையத்தில், உயர்தரப் பம்புகள், மோட்டார் (Advanced Pumps & Motors) உற்பத்திக்காக ஒரு திறன்மிகு மையம் (Centre of Excellence) 14.43 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட உள்ளது.
- மூப்பேரிப்பாளையத்தில், வார்ப்புகள், உலோக வடிவமைப்பு மேம்பாட்டிற்காக (Foundary Skill and Castings Development) 26.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில், ஒரு திறன்மிகு மையம் நிறுவப்பட உள்ளது.

மேற்கண்ட திறன்மிகு மையங்களுக்கு, செயலாக்க முகமையாக, டிட்கோ நிறுவனம் இயங்கும். இதன்மூலம், திறன் வளர்ப்பு, பரிசோதனை, ஆய்வு வசதிகள், கருவி உருவாக்கம், மறுசுழற்சி, தொழில்நுட்ப – புதுமை மேம்பாடு போன்ற முக்கியத் துறைகளில், தொழிற்சாலைகளுக்குத் தேவையான முழுமையான சேவைகள் வழங்கப்படும்.

கூட்டு ஆராய்ச்சித் திட்டங்களுக்கு நிதியுதவி

தொழில், கல்வித்துறை ஒத்துழைப்புடன் புதுமை, ஆராய்ச்சியை வளர்ப்பதன் மூலம் அறிவுப் பொருளாதாரத்தை உருவாக்கும் நோக்கத்துடன், தமிழ்நாடு அரசு, "தமிழ்நாடு பல்கலைக்கழக ஆராய்ச்சிப் பூங்கா அறக்கட்டளை" என்ற புதிய நிறுவனத்தை அமைத்துள்ளது. கோவை மண்டலத்தில் புதுமையான ஆராய்ச்சித் திட்டங்கள், புதிய தயாரிப்பு மேம்பாட்டை ஊக்குவிக்க, இந்நிறுவனம் 2.58 கோடி ரூபாய் ஆராய்ச்சிக்கான மானியத்துடன் 10 பயன்பாட்டு ஆராய்ச்சி (Applied Research) திட்டங்களுக்கு நிதியளிக்கிறது. இந்தத் திட்டங்களுக்கான முதல் தவணையாக 78 இலட்சம் ரூபாய் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ஆராய்ச்சியாளர்களிடம் வழங்கப்பட்டது.

ஜவுளித் துறையில் முத்தரப்புப் புரிந்துணர்வு ஒப்பந்தம்

மெசே ஃப்ராங்க்ஃபர்ட் இந்தியா நிறுவனம், தொழில்நுட்ப ஜவுளித்துறைக்காக 2026-ஆம் ஆண்டு முதல், கோயம்புத்தூரில் 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை, கண்காட்சி நடத்திட உள்ளது. தொழில்நுட்ப ஜவுளி சூழலமைப்பு மேம்படும் வகையில் மேற்கொள்ளப்படும் இம்முன் முயற்சிக்காக, வழிகாட்டி நிறுவனம் – கைத்தறி, கைத்திறன், துணிநூல், கதர்த்துறை, மெசே ஃப்ராங்க்ஃபர்ட் இந்தியா நிறுவனம் ஆகியவற்றிற்கு இடையே, ஒரு முத்தரப்புப் புரிந்துணர்வு ஒப்பந்தம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது.

பணி நியமன ஆணைகள் வழங்குதல்

9 தொழில் நிறுவனங்களில் பல்வேறு பணியிடங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

ஈரோடு மாவட்டத்தில் ரூ.278.62 கோடி மதிப்பில் 1,84,491 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 26.11.2025 அன்று ஈரோட்டில் நடைபெற்ற அரசு விழாவில், 235 கோடியே 73 இலட்சம் ரூபாய் செலவிலான 790 முடிவுற்ற பணிகளைத் திறந்துவைத்து, 91 கோடியே 09 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 23 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பல்வேறு துறைகளின் சார்பில் 1,84,491 பயனாளிகளுக்கு 278 கோடியே 62 இலட்சம் ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார் – 26.11.2025

ஈரோடு மாவட்டத்தில் திறந்து வைக்கப்பட்ட முடிவுற்றத் திட்டப்பணிகளின் விவரங்கள்

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில், சோலார் பகுதியில் 74 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில் புதிய பேருந்து நிலையம், மோளகவுண்டம்பாளையம் நடுநிலைப்பள்ளி, இரயில்வே காலனி மேல்நிலைப் பள்ளிகளில் 1 கோடியே 13 இலட்சம் ரூபாய் செலவில் கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள், ஈரோடு மாநகராட்சிப் பகுதிகளில் 3 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் 3 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள்,

6 நகர்ப்புறத் துணை சுகாதார நிலையங்கள், 36 இலட்சம் ரூபாய் செலவில் ஒன்பது மீட்டர் உயரம் கொண்ட சிறிய கோபுர மின் விளக்குகள், 21 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் செலவில் சாமுண்டி நகர்ப் பகுதியில் நியாயவிலைக் கடை, இரயில்வே காலனி அரசு மேல்நிலைப்பள்ளிக்கான மேசை, நாற்காலிகள்;

சத்தியமங்கலம் நகராட்சியில் 3 கோடியே 3 இலட்சம் ரூபாய் செலவில் புதிதாக அமைக்கப்பட்ட வாரச்சந்தை, புன்செய்புளியம்பட்டி நகராட்சியில் 3 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் புதிய வணிக வளாகம், 52 கோடியே 7 இலட்சம் ரூபாய் செலவில் குடிநீர்த் திட்ட அபிவிருத்திப் பணிகள், கருமாண்டிசெல்லிபாளையம் பேரூராட்சி-சீலம்பட்டியில் 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம், 6 கோடியே 57 இலட்சம் ரூபாய் செலவில் அரச்சலூர், அத்தாணி, வாணிப்புத்தூர், எலத்தூர், நசியனூர் ஆகிய பேரூராட்சிகளில் புதிய பேரூராட்சி அலுவலகக் கட்டடங்கள், காஞ்சிக் கோவில் பேரூராட்சியில் வணிக வளாகம், கொளப்பலூர், அத்தாணி, ஓலகடம், மொடக்குறிச்சி ஆகிய பேரூராட்சிகளில்

6 கோடியே 71 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்ட வாரச்சந்தைகள்;

லக்கம்பட்டி,அத்தாணி ஆகிய பேரூராட்சிகளில் 1 கோடி ரூபாய் செலவில் சமுதாயக் கூடங்கள், நம்பியூர், ஆப்பக்கூடல், கொல்லன்கோவில், சிவகிரி ஆகிய பேரூராட்சிகளில் உள்ள பள்ளிகளில் 3 கோடியே 49 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் செலவில் வகுப்பறைக் கட்டடங்கள், 3 கோடியே 64 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் செலவில் ஈரோடு மாவட்டத்தில் உள்ள 19 பேரூராட்சிகளில் 9 மீட்டர் உயரம் கொண்ட சிறிய கோபுர மின் விளக்குகள், 3 பேரூராட்சிகளில் 12 மீட்டர் உயரம் கொண்ட உயர் கோபுர மின்விளக்குகள், நியாய விலைக் கடைகள், குடிநீர்ப் பணிகள் உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சிப் பணிகள்;

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில், 2 கோடியே 15 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் கூத்தம்பாளையம், எழுநூத்திமங்கலம், அயலூர், மூங்கில்பாளையம் ஆகிய இடங்களில் 4 ஊராட்சிமன்ற அலுவலகக் கட்டடங்கள், பவளத்தாம்பாளையம், ஒரிச்சேரி, நல்லூர் ஆகிய இடங்களில் 3 நியாயவிலைக் கடைகள், வாய்ப்பாடி சாணார்பாளையம், நல்லூர், பனையம்பள்ளி ஆகிய இடங்களில் 3 அங்கன்வாடி மையக் கட்டடங்கள், கரட்டுப்பாளையத்தில் 1 கோடியே 3 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் செலவில் ஜிம்னாஸ்டிக் ஸ்டேடியம், சானிடோரியம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் 33 இலட்சத்து 18 ஆயிரம் ரூபாய் செலவில் வகுப்பறைக் கட்டடங்கள், கொண்டையம்பாளையம் பள்ளி பேருந்து நிறுத்தம் அருகில் 8 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் பயணியர் நிழற்குடை, பவானிசாகர் பேரூராட்சியில் 6 கோடியே 91 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் இலங்கை வாழ் தமிழர்களுக்கான ஒருங்கிணைந்த வீடுகள்,

1 கோடியே 48 இலட்சத்து 74 ஆயிரம் ரூபாய் செலவில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, மகளிர் சுய உதவிக் குழுக்கான பணிக்கொட்டகை, சிமெண்ட் கான்கிரீட் சாலையுடன் கூடிய உறிஞ்சுகுழி;

1 கோடியே 1 இலட்சம் ரூபாய் செலவில் தாளவாடியில் வட்டாரப் பொதுச் சுகாதார மையம், காசியூரில் துணைச் சுகாதார நிலையம், கலிங்கியம், சிறுவலூர், கொண்டையம் பாளையம், தலமலை, அரேபாளையம், கேர்மாளம் ஆகிய கிராம ஊராட்சிகளில் 1 கோடியே 20 இலட்சத்து 72 ஆயிரம் ரூபாய் செலவில் 6 கிராம ஊராட்சி அலுவலகத்துடன் கூடிய பொது சேவை மையக் கட்டடங்கள், மொடக்குறிச்சி வட்டாரம்-நஞ்சை காளமங்கலம், மன்னாதம் பாளையம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் 7 இலட்சத்து 88 ஆயிரம் ரூபாய் செலவில் புதிய இருப்பறையுடன் கூடிய சமையல் அறை, மொடக்குறிச்சி வட்டாரம் - ஆனந்தம்பாளையம், காகம், புஞ்சை காளமங்கலம்,

துய்யம்பூந்துறை ஆகிய இடங்களில் 24 இலட்சத்து 39 ஆயிரம் ரூபாய் செலவில் 4 பொதுச் சுகாதார வளாகங்கள்;

69 இலட்சத்து 29 ஆயிரம் ரூபாய் செலவில் ஒரிச்சேரிபுதூர், பெரியபுலியூர் ஆகிய இடங்களில் ஊராட்சி மன்றக் கட்டடங்கள், கருந்தேவன்பாளையத்தில் உணவு தானியச் சேமிப்புக் கிடங்கு, ஈரோடு மாவட்டத்தின் அனைத்து வட்டாரங்களிலும் 19 கோடியே 15 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் செலவில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் 618 வீடுகள், முதலமைச்சரின் வீடுகள் மறுகட்டுமானத் திட்டத்தின் கீழ் 16 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் செலவில் மறுசீரமைக்கப்பட்ட 7 வீடுகள்;

20 இலட்சம் ரூபாய் செலவில் 46 புதூர் ஊராட்சியில் ஈரோடு புறநகர் சுற்றுச்சாலை ஆணைக்கல்பாளையம் பூந்துறை ரோடு சந்திப்பு நால் சாலையில் 16 மீட்டர் உயரத்தில் 200 வாட்ஸ் கொண்ட 8 உயர் மின்கோபுர விளக்குகள், 46 புதூர் நால் சாலை சந்திப்பு, முத்துக் கவுண்டம்பாளையம் ஊராட்சி – வெள்ளக்கோவில் முத்தூர் சாலை சந்திப்பு நால் சாலை ஆகிய இடங்களில் 12 மீட்டர் உயரத்தில் 200 வாட்ஸ் கொண்ட 6 உயர் மின்கோபுர விளக்குகள், 49 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் கண்டிக்காட்டுவலசு, சாமிநாதபுரம், மொடக்குறிச்சி ஆகிய இடங்களில் உள்ள 3 அரசு பள்ளிகளுக்கு மேசைகள், நாற்காலிகள், 21 அரசுப் பள்ளிகளில் அறிவுத் திறன் வகுப்பறைகள்;

வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை சார்பில், கடம்பூரில் 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் 500 மெ.டன். கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்கு, உலர்களத்துடன் கூடிய ஏல மையம்;

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில், அந்தியூர் அரசு மருத்துவமனையில் 5 கோடி ரூபாய் செலவில் தரைத் தளம் மற்றும் முதல் தளத்துடன் கூடிய கட்டடம், ஈரோடு மாவட்ட அரசுத் தலைமை மருத்துவமனையில் 8 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் உள்ளிட்ட மருத்துவ உபகரணங்கள், தாமரைப்பாளையம் அரசு ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கு 15 இலட்சம் ரூபாய் செலவில் ஓமியோபதி பிரிவுக் கட்டடம், சத்தியமங்கலம் நகராட்சியில் 75 இலட்சம் ரூபாய் செலவில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம்;

நெடுஞ்சாலைத் துறை சார்பில், சத்தி-அத்தாணி-பவானி சாலை முதல் தாசரிபாளையம் சாலை வரையில் 7 கோடி ரூபாய் செலவில் உயர்மட்டப் பாலம்;

வணிகவரி மற்றும் பதிவுத் துறை சார்பில், பவானியில் 2 கோடியே 35 இலட்சம் ரூபாய் செலவில் வணிகவரித்துறை அலுவலகக் கட்டடம்;

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில், மொடக்குறிச்சி, ஜெயராமபுரத்தில் மாவீரன் பொல்லான் அவர்களுக்கு 4 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில் திருவுருவச்சிலையுடன் கூடிய அரங்கம், ஈரோடு பால்பண்ணை வளாகத்தில் உள்ள பூங்காவில் தமிழ்நாட்டில் வெண்மைப் புரட்சிக்கு வித்திட்ட பால்வளத் தந்தை எஸ்.கே.பரமசிவன் அய்யா அவர்களுக்கு 50 இலட்சம் ரூபாய் செலவில் திருவுருவச்சிலை;

பள்ளிக் கல்வித் துறை சார்பில், டி.ஜி.புதூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் 1 கோடியே 64 இலட்சத்து 92 ஆயிரம் ரூபாய் செலவில் 7 கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள், கும்மக்காளிபாளையம் அரசு உயர்நிலைப்பள்ளியில் 1 கோடியே 64 இலட்சத்து 55 ஆயிரம் ரூபாய் செலவில் 6 கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள், ஆண்கள் மற்றும் பெண்கள் கழிவறைகள், குடிநீர் வசதிகள், மலையப்பாளையம் அரசு மேல்நிலைப்பள்ளியில் 1 கோடியே 41 இலட்சத்து 36 ஆயிரம் ரூபாய் செலவில் 6 கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள், கணபதிபாளையம் அரசு மேல்நிலைப் பள்ளியில் 2 கோடியே 82 இலட்சத்து 72 ஆயிரம் ரூபாய் செலவில் 12 வகுப்பறைக் கட்டடங்கள், கருமாண்டிசெல்லிபாளையத்தில் 50 இலட்சம் ரூபாய் செலவில் புதிய நூலகக் கட்டடம்;

இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை சார்பில், பண்ணாரி அம்மன் திருக்கோயிலில் 61 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்ட கருணை இல்லம்;

என மொத்தம், 235 கோடியே 73 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் செலவிலான 790 முடிவுற்ற திட்டப் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்துவைத்தார்.

ஈரோடு மாவட்டத்தில் அடிக்கல் நாட்டப்பட்ட பணிகளின் விவரங்கள்

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில், நசியனூர் பேரூராட்சியில் 16 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குடிநீர் திட்ட மேம்பாட்டுப் பணிகள், காஞ்சிக்கோவில் பேரூராட்சியில் 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நகர்ப்புறச் சுகாதார துணை நிலையம், 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கொங்கம்பாளையத்தில் ஆழ்குழாய் கிணறு அமைத்துக் குடிநீர் வசதி ஏற்படுத்துதல், செம்பாம்பாளையத்தில் கல்வெட்டுப்பாலம் அமைக்கும் பணிகள், கவுண்டம்பாளையம் பகுதியில் குடிநீர் வசதி ஏற்படுத்துதல்;

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை சார்பில், ஈரோடு சிக்கய்ய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகத்தில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முதலமைச்சரின் சிறு விளையாட்டு அரங்கம், 1 கோடியே 13 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கூரப்பாளையம், குளவிளக்கு, நிச்சாம்பாளையம், எக்கட்டாம்பாளையம் நல்லபள்ளி, எக்கட்டாம்பாளையம் வெப்பிலி, முருங்கத்தொழுவு, ஓட்டப்பாறை, புஞ்சைபாலத்தொழுவு, வெள்ளிதிருப்பூர் ஆகிய 9 ஊராட்சிகளில் பேருந்து நிழற்குடைகள், வெள்ளிதிருப்பூர், கெட்டிசமுத்திரம் ஆகிய 2 ஊராட்சிகளில் பகுதிநேர நியாயவிலைக் கடைகள், நகலூர் ஊராட்சியில் தகனமேடை, சுற்றுச்சுவர் அமைக்கும் பணிகள், 46 புதூரில் 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பல்நோக்கு மையக் கட்டடம்;

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை சார்பில், மரூரில் 65 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புகள்;

நீர்வளத் துறை சார்பில், எண்ணமங்கலத்தில் வழுக்குபாறைபள்ளம் ஓடையில் 1 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தடுப்புச் சுவர் அமைக்கும் பணிகள், குண்டேரிப்பள்ளம் அணையின் கால்வாய்க் கதவுகள் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கும் பணிகள்;

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில், அரச்சலூர் ஓடாநிலையில் உள்ள தீரன் சின்னமலை மணிமண்டப வளாகத்தில் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தீரன் சின்னமலை அவர்களுக்கு வெண்கலச் சிலை அமைக்கும் பணி;

என மொத்தம், 91 கோடியே 08 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான 23 புதிய திட்டப் பணிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

ஈரோடு மாவட்டத்தில் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கிய விவரங்கள்

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் 19,500 பயனாளிகளுக்கு பட்டாக்கள்; ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் 20 பயனாளிகளுக்கு இலவச தையல் இயந்திரங்கள்; வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் 44,305 பயனாளிகளுக்குக் கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம், மாநில வேளாண் வளர்ச்சித் திட்டம், தமிழ்நாடு சிறுதானிய

இயக்கம், ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம், பாரம்பரிய வேளாண் வளர்ச்சித் திட்டம், மானாவாரி மேம்பாட்டுத் திட்டம், நுண்ணீர்பாசனத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின்கீழ் உதவிகள்;

வேளாண்மைப் பொறியியல் துறை சார்பில் 253 பயனாளிகளுக்குப் பண்ணைக் குட்டைகள் அமைத்தல், முதலமைச்சரின் சூரியசக்தி மின்மோட்டார், பழைய மின்மோட்டார்களை மாற்றி மானியத்தில்புதியமின்மோட்டார்களை வழங்குதல், திறந்தவெளி பாசனக் கிணறுகளை புனரமைத்தல் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின்கீழ் உதவிகள்; தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பில் 96,050 பயனாளிகளுக்குத் தேசியத் தோட்டக்கலை இயக்கம், தேசிய மூங்கில் இயக்கம், மானாவாரி பகுதி மேம்பாட்டுத் திட்டம், தேசிய வேளாண் வளாச்சித் திட்டம், மாநிலத் தோட்டக்கலை வளர்ச்சித் திட்டம், பனை மேம்பாட்டு இயக்கம், ஊட்டச்சத்து மேலாண்மை இயக்கம் போன்ற பல்வேறு திட்டங்களின்கீழ் உதவிகள்;

மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 1,566 பயனாளிகளுக்குப் பராமரிப்பு உதவித்தொகை, கல்வி உதவித்தொகை, திருமண நிதியுதவித்தொகை, காதொலிக் கருவி, மூன்று சக்கர பெட்ரோல் ஸ்கூட்டர்கள், சிறப்புச் சக்கர நாற்காலிகள், மூன்று சக்கர சைக்கிள்கள், பிரெய்லி கைக்கடிகாரங்கள், ஒளிரும் மடக்குக் குச்சிகள், பேட்டரியால் இயங்கும் சக்கர நாற்காலிகள் போன்ற பல்வேறு உதவிகள்; சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில் 120 பயனாளிகளுக்குத் திருமண உதவித் திட்டத்தின் கீழ் நிதியுதவி;

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் 625 பயனாளிகளுக்குக் கலைஞரின் கனவு இல்லம், முதலமைச்சரின் வீடுகள் கட்டுமானத் திட்டத்தின் கீழ் வீடுகள்; தமிழ்நாடு மாநில மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் 7020 பயனாளிகளுக்கு மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு வங்கிக் கடனுதவி மற்றும் அடையாள அட்டைகள் வழங்குதல்; சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் 449 பயனாளிகளுக்கு புதிய தொழில்முனைவோர், தொழில் நிறுவன மேம்பாட்டுத்திட்டம், அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம், வேலையற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புஉருவாக்கும் திட்டம், கலைஞர் கைவினைத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின்கீழ் உதவிகள்;

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் 900 பயனாளிகளுக்கு டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித்தொகை, ஊட்டச்சத்துப் பெட்டகங்கள், மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின்கீழ் உதவிகள்; தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை சார்பில் 10,100 பயனாளிகளுக்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய அடுக்குமாடிக் குடியிருப்பில் வீடுகள் ஒதுக்கீடு, பதிவுபெற்ற பெண் ஓட்டுநர்களுக்கு ஆட்டோ வாங்கிட மானியம், கல்வி, திருமண உதவித்தொகை, கண்கண்ணாடி வாங்க நிதியுதவி, ஓய்வூதியம், இயற்கை மரணம், ஈமச்சடங்கிற்கான நிதியுதவி, விபத்து மரணத்திற்கான நிவாரண நிதியுதவி, நலவாரியப் பதிவு அடையாள அட்டைகள் வழங்குதல்;

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சார்பில் 1974 பயனாளிகளுக்குப் புதிய குடும்ப அட்டைகள், பயிர்கடன் மற்றும் இதர கடன்கள்; பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர்மற்றும்சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் 331 பயனாளிகளுக்கு விலையில்லா தையல் இயந்திரங்கள் வழங்குதல், முஸ்லிம் மகளிர் உதவும் சங்கம், கிறித்துவ மகளிர் உதவும் சங்கத்தின் மூலம் நலத்திட்ட உதவிகள்;

கால்நடைப் பராமரிப்புத் துறை சார்பில் 310 பயனாளிகளுக்கு நாட்டுக்கோழி வளர்ப்பில் ஆர்வமுள்ள விவசாயிகளுக்கு மானியத்தில் நாட்டுக் கோழிப் பண்ணைகள் அமைக்கும் திட்டம், முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ் ஊரக ஏழைக் கால்நடை விவசாயிகளின் சினையுற்ற கறவைப் பசுக்களுக்கு மானியத்தில் ஊட்டச்சத்து வழங்கும் திட்டம், சிறு, குறு விவசாயிகளுக்கு மின்சாரம் மூலம் இயங்கும் புல் நறுக்கும் கருவிகள் மானியத்தில் வழங்கும் திட்டம் ஆகிய திட்டங்களின்கீழ் உதவிகள், எனபல்வேறு துறைகளின் சார்பில் மொத்தம் 1,84,491 பயனாளிகளுக்கு 278 கோடியே 62 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

ரூ.32 கோடி செலவில் 600 தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களுக்குப் புதிய வேலைவாய்ப்பளிக்கும் வகையில் "வேலூரில் மினி டைடல் பூங்கா"

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 05.11.2025 அன்று தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாகத் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில், வேலூரில் 32 கோடி ரூபாய் செலவில் 600 தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களுக்குப் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள வேலூர் மினி டைடல் பூங்காவினைத் திறந்து வைத்தார். மேலும், நாமக்கல் மாவட்டம், ராசிபுரத்தில் 37 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 600 தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களுக்குப் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் மினி டைடல் பூங்கா அமைப்பதற்கு அடிக்கல் நாட்டினார்.

தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டுள்ள டைடல் பூங்காக்கள், மினி டைடல் பூங்காக்கள்

2000-ஆம் ஆண்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தொலைநோக்குப் பார்வையுடன் சென்னை, தரமணியில் டைடல் பூங்காவை நிறுவி, திறந்து வைத்தார். இது மாநிலத்தில் தகவல் தொழில்நுட்பத்துறை மாபெரும் வளர்ச்சிபெற வித்திட்டது.

'அனைவரையும் உள்ளடக்கிய பரவலான வளர்ச்சி' என்ற தமிழ்நாடு அரசின் முக்கிய கொள்கையின்படி, தகவல் தொழில்நுட்பச் சூழல் அமைப்பினை மாநிலம் முழுவதும் பரவலாக

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
திறந்து வைத்தார் - 05.11.2025.

விரிவுபடுத்தும் விதமாக, மதுரை மாநகரில் ரூ.314 கோடி மதிப்பீட்டில், 5.34 இலட்சம் சதுரடி கட்டுமான பரப்பளவுடனும், திருச்சிராப்பள்ளி, பஞ்சப்பூரில் ரூ.403 கோடி மதிப்பீட்டில், 5.58 இலட்சம் சதுர அடிக் கட்டுமான பரப்பளவுடனும், புதிய டைடல் பூங்காக்களை நிறுவ மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 18.02.2025 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. இவற்றின் கட்டுமானப்பணிகள் பல்வேறு முன்னேற்ற நிலைகளில் நடைபெற்று வருகின்றன. மேலும், 5.57 இலட்சம் சதுர அடி கட்டுமானப் பரப்பளவில், 21 தளங்களுடன் கட்டப்பட்ட பட்டாபிராம் டைடல் பூங்கா, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 22.11.2024 அன்று திறந்து வைக்கப்பட்டது. ஓசூரில் ரூ.400 கோடி செலவில் 5 இலட்சம் சதுர அடி பரப்பளவில் டைடல் பூங்கா உருவாக்கப்படும் என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. இத்திட்டங்கள் ஒவ்வொன்றும் 6,000 தகவல் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த வல்லுநர்களுக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்கும்.

இவை மட்டுமின்றி, தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியை ஊக்குவிக்கவும், புத்தொழில்களை

ஆதரிக்கவும், டைடல் நியோ லிமிடெட் என்ற சிறப்பு நோக்க நிறுவனத்தின் மூலம் இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை நகரங்களில், 50,000 சதுர அடி முதல் 1,00,000 சதுர அடி கட்டுமான பரப்பளவுடன் மினி டைடல் பூங்காக்களை அமைக்க அரசு முடிவெடுத்து, விழுப்புரம், திருப்பூர், வேலூர், தூத்துக்குடி, தஞ்சாவூர், சேலம் ஆகிய பகுதிகளில் மினி டைடல் பூங்காக்கள் அமைப்பதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, அவற்றில் கட்டுமானப் பணிகள் நிறைவுபெற்ற, விழுப்புரம் மினி டைடல் பூங்கா 17.02.2024 அன்றும், தஞ்சாவூர், சேலம் மினி டைடல் பூங்காக்கள் 23.09.2024 அன்றும், தூத்துக்குடி மினி டைடல் பூங்கா 29.12.2024 அன்றும், திருப்பூர் மினி டைடல் பூங்கா 11.08.2025 அன்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்துவைக்கப்பட்டன.

மேலும், திருவண்ணாமலை மாவட்டத்தில் மினி டைடல் பூங்கா அமைப்பதற்கு 01.08.2025 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, அதன் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. காரைக்குடி மினி டைடல் பூங்காவின் கட்டுமானப் பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளன.

இவ்வரசு பொறுப்பேற்றது முதல் இதுவரை விழுப்புரம் மினி டைடல் பூங்கா, சேலம் மினி டைடல் பூங்கா, தூத்துக்குடி மினி டைடல் பூங்கா, திருப்பூர் மினி டைடல் பூங்கா, தஞ்சாவூர் மினி டைடல் பூங்கா, பட்டாபிராம் டைடல் பூங்கா ஆகியவை திறந்து வைக்கப்பட்டுள்ளன.

வேலூர் மினி டைடல் பூங்கா திறந்து வைத்தல், நாமக்கல் மினி டைடல் பூங்கா அடிக்கல் நாட்டுதல்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ள வேலூர் மினி டைடல் பூங்கா 32 கோடி ரூபாய் செலவில், தரை, நான்கு தளங்களுடன், 60,000 சதுர அடி கட்டுமான பரப்பளவில், 600 தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள் பணிபுரியும் வகையில், அனைத்து நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்ட நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் மினி டைடல் பூங்கா 63,200 சதுர அடி கட்டுமானப் பரப்பளவில் சுமார் 600 தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள் பணிபுரியும் வகையில் அதிநவீன வசதிகளுடன் அமைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்ச்சியின்போது, வேலூர் மினி டைடல் பூங்காவினை முழுமையாகக் குத்தகைக்கு எடுத்துள்ள M/s. AGS Health care நிறுவனத்திற்குத் தள ஒதுக்கீட்டு ஆணையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்த மினி டைடல் பூங்காக்கள் மூலம் வேலூர், நாமக்கல் மாவட்டங்களில் வசித்துவரும் படித்த இளைஞர்களுக்கு, குறிப்பாக பெண்களுக்கு அவர்களின் சொந்த மாவட்டங்களிலேயே தகவல் தொழில்நுட்பம் சார்ந்த பணிகளில் வேலைவாய்ப்புகள் ஏற்படுவதுடன் அப்பகுதிகள் சமூக-பொருளாதார வளர்ச்சி பெறவும், மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சி மேம்படவும் வழிவகுக்கும்.

திருவாரூர் மாவட்டத்தில் ரூ.50 கோடி முதலீட்டில் 2,500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் ஆடை உற்பத்தி அலகு அமைக்கும் திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் 13.11.2025 அன்று தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்வில், திருவாரூர் மாவட்டத்தில் 50 கோடி ரூபாய் முதலீட்டில் 2,500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், SCM Garments பிரைவேட் லிமிடெட் நிறுவனம் (தி சென்னை சில்க்ஸ் குழுமம்) ஆடை உற்பத்தி அலகு அமைக்கும் திட்டத்திற்குப் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

தமிழ்நாட்டின் இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், 2030-க்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரம் 1 ட்ரில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு வளர்ச்சி பெறுவதற்கும், தேவையான முதலீடுகளை ஈர்ப்பதற்கும் தமிழ்நாடு அரசு பல்வேறு சிறப்பான முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது. இவ்வரசு பொறுப்பேற்றதிலிருந்து, அனைவரையும் உள்ளடக்கிய சீரான மற்றும் பரவலான வளர்ச்சி என்பதில் சிறப்புக் கவனம் செலுத்தி வருகிறது. மாநிலம் முழுவதும் உலகத் தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி, அனைத்து மாவட்டங்களிலும் தொழில் வளர்ச்சி மேம்பட அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில், திருவாரூர் மாவட்டத்தில், இந்தத் திட்டம் நிறுவப்பட உள்ளது குறிப்பிடத்தக்கது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்
முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டது - 13.11.2025

SCM Garments பிரைவேட் லிமிடெட்

ஜவுளித் துறையில் முன்னணி நிறுவனமாக விளங்கும் SCM Garments குழுமத்தின் துணை நிறுவனமான SCM Garments பிரைவேட் லிமிடெட் நிறுவனம் (தி சென்னை சில்க்ஸ் குழுமம்), உலகப் புகழ் பெற்ற நிறுவனங்களை வாடிக்கையாளர்களாகக் கொண்ட ஆடைகள் தயாரிக்கும் நிறுவனமாகும்.

இந்நிறுவனம், 50 கோடி ரூபாய் முதலீட்டில் 2500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், திருவாரூர் மாவட்டத்தில் ஆடை உற்பத்தி அலகு அமைத்திட திட்டமிட்டுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில், இத்திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சியில்

சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் பொல்லான் அவர்களுக்கு முழு திருவுருவச் சிலையுடன் கூடிய அரங்கம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின்
அவர்கள்
திறந்து வைத்தார்
- 26.11.2025

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 26.11.2025 அன்று தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில் ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி, ஜெயராமபுரத்தில் 4 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில் சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலையின் நம்பிக்கைக்குரிய படைத்தளபதி சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் பொல்லான் அவர்களின் முழு திருவுருவச் சிலையுடன் கூடிய அரங்கத்தைத் திறந்து வைத்தார்.

தமிழ்நாட்டின் புகழ்சால் பெருந்தகையாளர்கள், தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு தமிழ்நாட்டிற்குப் பெருமைத் தேடித்தந்த அறிஞர் பெருமக்கள், சமூகநீதி, விடுதலை உணர்வுகளை ஊட்டிவளர்த்த கவிஞர்கள், இசை மேதைகள், தமிழ்நாட்டின் தியாக வரலாற்றுக்கு உன்னத சாட்சியங்களாக விளங்கும் தியாகிகள், மேதைகள், அறிஞர்களின் நினைவுகளைப் போற்றிப் பெருமைப்படுத்தும் வகையிலும், தமிழ் சமுதாயத்திற்கு அவர்களின் பங்களிப்பைப் பெருமைப்படுத்தும் வகையிலும், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் நினைவகங்கள், திருவுருவச் சிலைகள், அரங்கங்கள், நினைவுத் தூண்கள், நினைவுச் சின்னங்கள் ஆகியவை அமைக்கப்பட்டு, சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர், விடுதலைப் போரில் இன்னுயிர் ஈந்தும், சொத்து சுகங்களை இழந்தும், தியாகங்கள் புரிந்த சுதந்திரப் போராட்ட தியாகிகளைப் போற்றிப் பெருமைப்படுத்திடும் வகையில், கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. அவர்கள் சிறையில் இழுத்த செக்கு வைக்கப்பட்டிருக்கக்கூடிய மண்டபம், காந்தி மண்டபத்தில் பொலிவூட்டப்பட்டு அங்கு அவரது மார்பளவு சிலை, வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களுக்கு திருவுருவச் சிலை, மருது

சகோதரர்கள் மற்றும் வீரமங்கை வேலுநாச்சியார் ஆகியோருக்கு திருவுருவச் சிலை, கோயம்புத்தூர் வ.உ.சி. பூங்காவில் வ.உ. சிதம்பரனார் அவர்களின் முழு உருவச் சிலை, மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் அவர்களுக்கு திருவுருவச் சிலை, டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் அவர்களுக்குத் திருவுருவச் சிலை, எனப் பல்வேறு தியாக சீலர்களுக்கு சிலைகளை நிறுவி, மணிமண்டபங்கள் அமைத்து அவர்களின் புகழ்போற்றி வருகிறது.

சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் பொல்லான் அவர்களின் முழு திருவுருவச் சிலையுடன் கூடிய அரங்கத்தைத் திறந்து வைத்தல்

ஈரோடு மாவட்டம், அரச்சலூர் அருகே உள்ள நல்லமங்காபாளையம் கிராமத்தில் பிறந்த பொல்லான், சிறுவயதிலிருந்தே வாள், வில், மற்போரில் சிறந்த முறையில் பயிற்சிகள் பெற்றார். மாவீரன் பொல்லான் பதினெட்டாம் நூற்றாண்டில் ஆங்கிலேயரின் அத்துமீறலுக்கு எதிராகப் போர்புரிந்த தீரன் சின்னமலையின் போர்ப்படையிலும், ஒற்றர் படையிலும் தளபதியாகத் திகழ்ந்தவர். தீரன் சின்னமலை, வெள்ளையர் படையை எதிர்த்து 1801-ல் நடைபெற்ற பவானிப்போர், 1802-ல் நடைபெற்ற ஓடாநிலைப் போர். 1,803-ல் நடைபெற்ற அரச்சலூர் போர் ஆகிய மூன்று போர்களிலும் பெற்ற வெற்றிகளுக்கு மூலகாரணமாகத் திகழ்ந்தவர் மாவீரன் பொல்லான் ஆவார். அதனால், ஆங்கிலேயர்களின் சினத்திற்குள்ளான மாவீரன் பொல்லான் ஆங்கிலேய படைத்தளபதி கர்னல் ஹாரிஸ் அவர்களின் படை வீரர்களால், ஓடாநிலை கோட்டைக்கு அருகில் ஜெயராமபுரத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மாவீரன் பொல்லான் அவர்களது வீரத்தைப் போற்றும் வகையில், ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டம், வடுகப்பட்டி கிராமம், ஜெயராமபுரத்தில் 4 கோடியே 90 இலட்சம் ரூபாய் செலவில் சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலையின் நம்பிக்கைக்குரிய படைத்தளபதி சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் பொல்லான் அவர்களின் முழு திருவுருவச் சிலையுடன் கூடிய அரங்கம் அமைக்கப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. பின்னர், மாவீரன் பொல்லான் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தி, அரங்கத்தைப் பார்வையிட்டார்.

அதனைத் தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் பொல்லான் அவர்களின் வாரிசுதாரர்கள்– திரு. வரதராஜன், திரு. முருகன், திரு. வீரன், திரு. பழனிச்சாமி, திரு. ராஜன் ஆகியோருக்கு சால்வை அணிவித்துச் சிறப்புச் செய்தார்.

பின்னர், சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் பொல்லான் அவர்களின் வாரிசுதாரர்கள் மற்றும் பயனாளிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பூமிதான வாரிய நில விநியோகப் பத்திரங்களை வழங்கினார்.

மாவீரன் பொல்லான் அவர்களின் முழு திருவுருவச் சிலையுடன் கூடிய அரங்கத்தைத் திறந்து வைத்தமைக்காக, ஆதித் தமிழர் பேரவையின் நிறுவனத் தலைவர் திரு. இரா. அதியமான், நிர்வாகி திரு. கு. ஜக்கையன், தமிழ்ப் புலிகள் கட்சியின் தலைவர் திரு. நாகை திருவள்ளுவன், திராவிட தமிழர் கட்சியின் தலைவர் திருமதி வெண்மணி, தமிழ்நாடு அருந்ததியர் இளைஞர் முன்னணியின் திரு.எஸ்.டி. கல்யாண சுந்தரம், திரு. சண்முகம், சமூகநீதி மக்கள் கட்சியின் (மாவீரன் பொல்லான்) திரு. வடிவேல் ராமன், விடுதலை வேங்கைகள் கட்சியின் திரு. இரா.தமிழன்பன், தமிழ் சிறுத்தைகள் கட்சியின் திரு. சு.அகத்தியன், தமிழ்நாடு பெஸ்ட் ஆசிரியர் அரசு ஊழியர் கூட்டமைப்பின் திரு. எல்.ரவி, தமிழ்நாடு சாக்கிய அருந்ததியர் சங்கத்தின் எழுத்தாளர் திரு. மதிவண்ணன்,

அருந்ததிய சமூகச் சேவை மடத்தின் திரு. செல்லகுமார், சமூக விடுதலைக் கட்சியின் திரு. என்.பி.ஆறுமுகம், திராவிடர் விடுதலை கட்சியின் திரு. அன்பு மகேஷ், அருந்ததி மக்கள் கட்சியின் திரு. சுப்பிரமணி, தாஸ்கோ அமைப்பின் திரு. பெருமாள்ராஜ்;

கொங்குநாடு திராவிடக் கட்சியின் திரு. ஏ.ஜி.பாட்டன் சக்திவேல், தென்னாட்சி மக்கள் கட்சியின் திரு. சின்னதம்பி, அறம் மக்கள் கட்சியின் திரு. எல்.எம். காமராஜ், அருந்ததியர் விடுதலை முன்னணியின் திரு.என்.டி.ஆர்., நமது தேசம் கட்சியின் திரு. என்.லஷ்மிபதி, அருந்ததியர் மக்கள் நலச் சங்கத்தின் திரு. சீனிவாசன், இந்திய சன சங்கத்தின் பேராசிரியர் முத்துசாமி, திரு. துரைசாமி, ஜனநாயக மக்கள் கழகத்தின் திரு. அசோக் கண்ணன், தமிழ்நாடு அருந்ததியர் சங்கத்தின் திரு. கண்ணன்,

மதுரை வீரன் மக்கள் விடுதலை இயக்கத்தின்

திரு. பி.ஆறுமுகம், தமிழர் சமூகநீதிக் கழகத்தின் திரு. சுரா. தங்க பாண்டியன், மக்கள் விடுதலைக் கழகத்தின் திரு. ஆர்.சீனிவாசராகவன், சமூக விடுதலை முன்னணியின் திரு. இராஜசேகரன், தலித் விடுதலை இயக்கத்தின் திரு. கிச்சா, தமிழ்நாடு அருந்ததியர் சங்கத்தின் திரு.கே.ஏ. வரதராஜன், திராவிடச் சமத்துவக் கட்சியின் திரு. அம்பேத் அண்ணாதுரை, தமிழர் தொழிலாளர் கட்சியின் திரு. மாகாளியப்பன், இந்தியக் குடியரசுக் கட்சியின் திரு. செபஸ்டியன், YGS மாநிலத் தலைவர் திரு.சி. பெருமாள்;

கொங்கு விடுதலைப் புலிகள் கட்சியின் திரு. எஸ்.விஸ்வநாதன், திராவிட எழுச்சி பேரவையின் தலைவர் திரு. சக்திவேந்தன், சமூக நீதி பாதுகாப்புக் கழகத்தின், திரு. ஆர்.முத்துராஜ், அருந்ததியர் மக்கள் முன்னேற்றக் கழகத்தின் திரு. ஆவடி ரங்கநாதன், அருந்ததியர் மக்கள் கட்சியின் திரு. இராமச்சந்திரன், அனைத்துலக அருந்ததியர் மக்கள் பேரவையின் திரு. ரமேஷ், அருந்ததியர் விடுதலைக் கழகத்தின் முனைவர் இளந்தமிழன், அருந்ததி கட்சியின் திரு. பி.புருசோத்தமன், ஜெய்பீம் மக்கள் கட்சியின் திரு. அறிவழகன், திராவிடப் புரட்சி கழகத்தின் திரு. சவுந்திர பாண்டியன், திரு. நாத்திக ராவணன், ஆதித் தமிழர் ஜனநாயக பேரவையின் திரு. அ.சு.பவுத்தன், அருந்ததியர் ஆசிரியர் அரசு பணியாளர் கூட்டமைப்பின் திரு. இரா.பால்ராஜ்,

அருந்தமிழர் முன்னேற்றப் பேரவையின் திரு. பொன்னுசாமி, ஜெய்பீம் விடுதலைக் கட்சியின் திரு. ஆறுமுகம் உள்ளிட்ட பல்வேறு அமைப்பின் நிர்வாகிகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

“உங்கள் ஒவ்வொரு அடியிலும் உங்களுடன் நிற்பேன்...”

குழந்தைகள் நாளையொட்டி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி - 14.11.2025.

தமிழ்நாட்டின் குழந்தைகள் நலமாகப் பிறக்க மகப்பேறு நிதியுதவி,

பிறந்ததும் வளமாக வளர ஊட்டச்சத்தை உறுதிசெய்,

வளர்ந்து பள்ளிக்குச் செல்லும் நிலையிலும் சத்தான உணவைப் பெறக் காலை உணவுத் திட்டம்,

பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு அன்புக்கரங்கள்,

உயர்கல்விக்கு உதவ நான் முதல்வன், புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன்,

ஒட்டுமொத்த நலனை உறுதிசெய்யத் ‘தமிழ்நாடு மாநிலக் குழந்தைகளுக்கான கொள்கை 2021’ எனக் குழந்தைகளின் மீது தாயன்பு காட்டி, உங்கள் கனவுகளுக்கெல்லாம் துணைநிற்கும் திராவிட மாடல் அரசின் சார்பில் எனது குழந்தைகள் நாள் நல்வாழ்த்துகள்!

உங்களின் ஒவ்வொரு அடியிலும் உங்களுடன் நிற்பேன், நீங்கள் விழாமல் தாங்கிப் பிடித்துக் கொள்வேன், உங்களின் வெற்றியைக் கண்டு மகிழ்வேன், உங்கள் அனைவரையும் பரந்த பார்வையும், பகுத்தறிவும் கொண்ட உலகக் குடிமக்களாக வளர்த்தெடுப்பேன்!

தருமபுரி நகராட்சி

புதிய பேருந்து நிலையம் மற்றும் சிப்காட் தொழிற்பூங்கா கட்டுமானப் பணிகள்...

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
பார்வையிட்டு ஆய்வு செய்தார் - 03.11.2025

தருமபுரி மாவட்டத்திற்கு 03.11.2025 அன்று வருகை தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தருமபுரி நகராட்சி புதிய பேருந்து நிலையம், தருமபுரி சிப்காட் தொழிற்பூங்காவில் மேற்கொள்ளப்பட்டு வரும் கட்டுமானப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தருமபுரி நகராட்சியில் புதிய பேருந்து நிலையம்

தருமபுரி நகராட்சிக்கு அருகிலுள்ள ஏ.ரெட்டிஅள்ளி கிராமம், சோகத்தூர் பஞ்சாயத்திற்குட்பட்ட பகுதிகளில் 10 ஏக்கர் பரப்பளவில் 39.14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தனியார், பொதுமக்கள் பங்களிப்புடன் நடைபெற்று வரும் தருமபுரி நகராட்சி புதிய பேருந்து நிலையத்தின் கட்டுமானப் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகள் அனைத்தையும் விரைவில் முடித்திட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இப்புதிய பேருந்து நிலையத்தில் தற்போது தரைத்தளம், முதல் தளத்தில் கடைகள், உணவகங்கள், ATM மையம், பொருட்கள் வைப்பதற்கான பாதுகாப்பு அறை,கழிவறைகள், நேரக் காப்பாளர் அறை, தாய்மார்கள் பாலூட்டும் அறை, மேற்கூரை அமைக்கும் பணிகள், பயணிகள், ஓட்டுநர்கள் ஓய்வு அறைகள், 55 எண்ணிக்கையிலான பேருந்து நிறுத்தும் இடம், நடைபாதை, பயணிகள் அமரும் இடத்தில் டைல்ஸ் பதிக்கும் பணிகள், பிரதான சாலை, மழைநீர் வடிகால் பணிகள் போன்ற பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன.

தருமபுரி சிப்காட் தொழிற்பூங்கா

தருமபுரி சிப்காட் தொழிற்பூங்காவிற்கு வருகை தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அங்கு நடைபெற்று வரும் அலுவலகக் கட்டடம், சிறு பாலங்கள், மழைநீர் வடிகால் பணிகள் போன்ற கட்டுமானப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர், இப்பணிகள் அனைத்தையும் விரைவாக முடித்திட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

தருமபுரி வட்டம், அதகபாடி கிராமம், நல்லம்பள்ளி வட்டம், தடங்கம், அதியமான் கோட்டை, பாலஜங்கமனஹள்ளி ஆகிய கிராமங்களில் மொத்தம் 1,733 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, சுற்றுச்சூழல் அனுமதி 04.11.2024 அன்று பெறப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 17.08.2025 அன்று தருமபுரி சிப்காட் தொழிற்பூங்கா திறந்து வைக்கப்பட்டது.

இத்தொழிற் பூங்காவில் உட்புறச்சாலைகள், மழைநீர் வடிகால், தெருவிளக்கு, நீர் விநியோகம் போன்ற உட்கட்டமைப்பு, இதர பணிகள் மேற்கொள்ள மொத்தம் 937.36 கோடி ரூபாய் நிதி வழங்கிட ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேலும், இத்தொழிற் பூங்காவில் 1.35 கி.மீ நீள அணுகு சாலைக்கான பணி முழுவதும் 14.04 கோடி ரூபாய் செலவில் முடிக்கப்பட்டுள்ளதுடன், பூங்காவினையொட்டியுள்ள தேசிய நெடுஞ்சாலை 44-ன் சேவைச் சாலையை 5.42 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் அகலப்படுத்த பணி ஆணை வழங்கப்பட்டு, இப்பணி மார்ச் மாதம் தொடங்கப்பட்டு, இந்த ஆண்டு இறுதிக்குள் முடிக்கப்படும்.

மேலும், முதற்கட்டமாக 200 ஏக்கர் நிலப்பரப்பில் மழைநீர் வடிகால், சிறுபாலங்கள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்ள 103.08 கோடி ரூபாய் திட்ட நிதி ஒப்புதல் வழங்கப்பட்டு, அதில் முதற்கட்டமாக 66.70 கோடி ரூபாய்க்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் அனைத்தும் ஜூன் 2026-இல் முடிக்கப்படும்.

இதுவரை, இத்தொழிற் பூங்காவில் 9 தொழில் நிறுவனங்களுக்கு மொத்தம் 40.91 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், இத்தொழிற் பூங்காவின் விரிவாக்கத்திற்காக (நிலை -II க்காக), தருமபுரி வட்டம், அதகபாடி கிராமம், நல்லம்பள்ளி வட்டம், தடங்கம், பாலஜங்கமனஹள்ளி ஆகிய கிராமங்களில் மொத்தம் 690 ஏக்கர் நிலம் தெரிவு செய்யப்பட்டு, அதில் 132 ஏக்கர் பட்டா நிலம் கையகப்படுத்த அரசின் நிருவாக அனுமதி பெறப்பட்டதைத் தொடர்ந்து தற்போது நில எடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அத்துடன் 558 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலத்தினை சிப்காட் நிறுவனம் பெயரில் நில உரிமை மாற்றம் செய்வதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தருமபுரி சிப்காட் தொழிற்பூங்கா முழு செயல்பாட்டிற்கு வரும்பொழுது, தமிழ்நாட்டிலுள்ள மிகப் பெரிய தொழிற்பூங்காக்களில் ஒன்றாகத் திகழும் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், இத்தொழிற்பூங்காவில் பேட்டரி, மின்வாகனங்களின் உற்பத்திக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும். ■

படமும்/செய்தியும்

உவமைக் கவிஞர் சுரதா அவர்கள் பிறந்தநாள்

தமிழ்நாடு அரசின் சார்பில், 23.11.2025 அன்று உவமைக் கவிஞர் சுரதா அவர்களின் 105-வது பிறந்த நாளையொட்டி, சென்னை அசோக் நகரில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் திரு. எஸ்.எம்.நாசர், பெருநகரச் சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, துணை மேயர் திரு. மு.மகேஷ்குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறைச் செயலாளர் திரு.வே.ராஜாராமன். இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறைக் கூடுதல் இயக்குநர் (செய்தி) திரு. ச.செல்வராஜ், இணை இயக்குநர் (நினைவகங்கள்) திரு. கு.தமிழ்செல்வராஜன், சுரதா அவர்களின் குடும்பத்தினர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

ஈரோட்டில்
பால்வளத் தந்தை
திரு. எஸ்.கே.பரமசிவன் அவர்களுக்குத்
திருவுருவச் சிலை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 26.11.2025 அன்று தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில் ஈரோடு, சித்தோடு, ஆவின் பால்பண்ணை வளாகத்தில் 50 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள பால்வளத் தந்தை திரு. எஸ்.கே.பரமசிவன் அவர்களின் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்தார்.

மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின்
அவர்கள் திறந்து வைத்தார் -
26.11.2025

பால்வளத் தந்தை திரு. பரமசிவன் அவர்களின் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்தல்

கொங்கு மண்டலத்தின் பெருமையாகத் திகழ்ந்த திரு. எஸ்.கே.பரமசிவன் 'பசுமை நிலம், வெண்மைப் பால்' என்ற கனவைக் கொண்டு நூற்றுக்கணக்கான மாடு வளர்ப்பாளர்களை

ஒன்றிணைத்து, தமிழ்நாட்டிற்குப் புதிய பொருளாதாரக் களத்தை உருவாக்கியதோடு, விவசாயக் குடும்பங்களின் வருவாயை உயர்த்தவும், பால் விநியோக முறையை நவீனப்படுத்தவும், பால்வளத் துறையைத் தொழில்மயமாக்கவும் அர்ப்பணிப்புடன் செயல்பட்டார்.

தமிழ்நாடு அரசின் ஆவின் நிறுவனம், கூட்டுறவுப் பால் சங்கங்கள், பால் செயலாக்கக் கட்டமைப்புகள் – அனைத்தும் அவர் விதைத்த விதையின் செழிப்பான விளைவுகளாகும். அதனால் அவர் பால்வளத் தந்தை என அழைக்கப்படுகிறார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. பரமசிவன் அவர்களின் சேவையைப் போற்றும் வகையில், ஈரோடு மாவட்டத்தில் 20.12.2024 அன்று நடைபெற்ற அரசு விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், "ஈரோடு மாவட்டம், சின்னியம்பாளையத்தில் பிறந்து, நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்டதோடு, தன்னுடைய அயராத முயற்சிகளால் பால் உற்பத்தியைப் பெருக்கி, தமிழ்நாட்டில் வெண்மைப் புரட்சிக்கு வித்திட்ட பால்வளத் தந்தை எஸ்.கே.பரமசிவன் அய்யா அவர்களின் திருவுருவச்சிலை, ஈரோடு பால் பண்ணையில் நிறுவப்படும்" என்று அறிவித்தார்.

அதன்படி, ஈரோடு, சித்தோடு, ஆவின் பால் பண்ணை வளாகத்தில், தமிழ்நாட்டில் வெண்மைப் புரட்சிக்கு வித்திட்ட பால்வளத் தந்தை திரு. எஸ்.கே.பரமசிவன் அவர்களுக்கு நிறுவப்பட்டுள்ள திருவுருவச் சிலையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்துவைத்து, திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

டிசம்பர் 10: மூதறிஞர் இராஜாஜி அவர்கள் பிறந்தநாள்

"தேசத் தலைவர்"

"அரசியலைக் கடந்து அன்பு காட்டிய ஒரு உள்ளத்தை நாம் இழந்து விட்டோம். தேசத்தின் தலைசிறந்த மூத்த தலைவர்களில் ஒருவர் தீபஸ்தம்பம் சாய்ந்தது போலச் சாய்ந்துவிட்டார்; அரசாங்க முறைப்படி உரிய சடங்குகள் அனைத்தும் உண்டு. மறைந்த தலைவருக்கு மரியாதை செலுத்தும் வகையில் நாளை ஒரு நாள் தேசிய விடுமுறையாக விடப்படும். ஒருவார காலத்திற்கு துக்கம் மேற்கொள்ளப்படும்."

– மூதறிஞர் இராஜாஜி அவர்கள் மறைவு குறித்து
முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 25.12.1972 அன்று
வெளியிட்ட இரங்கல் செய்தி



தமிழ் இலக்கியத்திற்கு வளம் சேர்க்கும் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் வகையில் இலக்கிய மாமணி விருதுகள்

படமும்/செய்தியும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. மு.க.ஸ்டாலின்** அவர்கள் 20.11.2025 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் தமிழ் இலக்கியத்திற்கு வளம் சேர்க்கும் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் வகையில் 2024-ஆம் ஆண்டிற்கான இலக்கிய மாமணி விருதுகளை சென்னை மாவட்டத்தைச் சேர்ந்த முனைவர் தெ. ஞானசுந்தரம் (மரபுத் தமிழ்), திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த முனைவர் இரா. காமராசு (ஆய்வுத் தமிழ்), தென்காசி மாவட்டத்தைச் சேர்ந்த திரு. க.சோமசுந்தரம் (எ) கலாப்ரியா (படைப்புத்தமிழ்) ஆகியோருக்கு வழங்கி சிறப்பித்தார்.

2025–ஆம் ஆண்டிற்கான குழந்தைகள் நலன் – சேவை விருதுகள்

படமும்/செய்தியும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. மு.க.ஸ்டாலின்** அவர்கள் 27.11.2025 அன்று தலைமைச் செயலகத்தில், 2025-ஆம் ஆண்டிற்கான "குழந்தைகள் நலன் - சேவை விருதுகளைத்" தஞ்சாவூர், அன்னை சத்யா அம்மையார் நினைவு அரசினர் குழந்தைகள் இல்லம், தூத்துக்குடி புனித மரியன்னை கருணை இல்லம், சென்னை, அரசினர் கூர்நோக்கு இல்லம், இராமநாதபுரம், மாவட்டக் குழந்தைகள் பாதுகாப்பு அலகு ஆகியவற்றிற்கு வழங்கி, விருதுடன் பரிசுத் தொகையாக தலா ஒரு இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளையும் வழங்கி சிறப்பித்தார்.

காஞ்சிபுரத்தில் ரூ.3 கோடி செலவில் புனரமைக்கப்பட்ட "அண்ணா பட்டு விற்பனை வளாகம்"

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார் – 13.11.2025

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 13.11.2025 அன்று தலைமைச் செயலகத்தில், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை சார்பில் காஞ்சிபுரம், வள்ளல் பச்சையப்பன் சாலையில் அமைந்துள்ள காஞ்சிபுரம் அறிஞர் அண்ணா பட்டுக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் அண்ணா பட்டு விற்பனை வளாகத்தை 3 கோடி ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்டுக் காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார்.

தமிழ்நாட்டின் கைத்தறித் தொழிலானது தொன்மையும், வரலாற்றுப் பாரம்பரிய சிறப்பும், நுணுக்கமான பல்வேறு வேலைப்பாடுகளையும் கொண்டதாகும். கைத்தறித் தொழிலில் தமிழ்நாடானது பிற மாநிலங்களுக்கு முன்னோடியாக விளங்குவதுடன், உலகளவில் பிரசித்தி பெற்ற இரகங்களான காஞ்சிபுரம் பட்டு, ஆரணி பட்டு, திருபுவனம் பட்டு, பவானி ஜமக்காளம் போன்ற இரகங்களை உற்பத்தி செய்து வருகின்றது. தமிழ்நாட்டில் 1,112 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு அரசின் சீரிய திட்டங்களின் வாயிலாகத் தொடர் வேலைவாய்ப்பும், உத்திரவாதமான கூலியும் உறுதி செய்யப்பட்டு வருவதுடன், நெசவாளர் நலத்திட்டங்கள் வாயிலாகப் பல்வேறு நலத்திட்டங்களும் அரசால் வழங்கப்பட்டு வருகின்றன.

புனரமைக்கப்பட்ட அண்ணா பட்டு விற்பனை வளாகத்தைத் திறந்து வைத்தல்

காஞ்சிபுரம் அறிஞர் அண்ணா பட்டுக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் 1971-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, தொடர்ச்சியாக இலாபகரமாக செயல்பட்டு வருகிறது.

காஞ்சிபுரம், வள்ளல் பச்சையப்பன் சாலையில் உள்ள இச்சங்கத்திற்குச் சொந்தமான இடத்தில் அமைந்துள்ள அண்ணா பட்டு விற்பனை வளாகம், தமிழ்நாடு அரசின் கைத்தறி ஆதரவுத் திட்டத்தின் கீழ், 6597 சதுர அடி பரப்பளவில், 3 கோடி ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

இந்த விற்பனை வளாகத்தில் அறிஞர் அண்ணா பட்டுக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் அசல் பட்டு, சரிகை சேலைகள், ஆரணி பட்டுச் சேலைகள், திருபுவனம் பட்டுச் சேலைகள், கோவை மென்பட்டுச் சேலைகள். சேலம் வெண்பட்டு வேட்டிகள், அங்கவஸ்திரங்கள், திண்டுக்கல் Tie & Dye சேலைகள், பரமக்குடி பம்பர் காட்டன் சேலைகள். திருநெல்வேலி செடி புட்டா சேலைகள். விருதுநகர் அருப்புக்கோட்டை காட்டன் சேலைகள், நாகர்கோவில் காட்டன் வேட்டிகள், ஈரோடு பவானி ஜமக்காளம், போர்வை இரகங்கள், படுக்கை விரிப்புகள், வீட்டு உபயோக துணி இரகங்கள் உள்ளிட்ட கைத்தறி இரகங்கள் காட்சிப்படுத்தப்பட்டு விற்பனை மேற்கொள்ளப்படும். இவ்விற்பனை வளாகம் குளிர்சாதன வசதி, வாகனங்கள் நிறுத்தும் வசதியுடன் புனரமைக்கப்பட்டுள்ளது. இவ்வளாகம் புனரமைக்கப்பட்டதன் மூலம் ஆண்டொன்றுக்கு 10 கோடி ரூபாய் அளவிற்கு விற்பனை மேற்கொள்ள வழிவகை ஏற்படும்.

புதிய தோழி விடுதிகளுக்கு அடிக்கல்

படமும்/செய்தியும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 13.11.2025 அன்று தலைமைச் செயலகத்தில், திருப்பத்தூர், நாமக்கல், மயிலாடுதுறை, விருதுநகர், திண்டுக்கல், நீலகிரி, இராமநாதபுரம், தூத்துக்குடி, புதுக்கோட்டை, அரியலூர், திருவாரூர், கன்னியாகுமரி ஆகிய இடங்களில் 62 கோடியே 51 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 740 பணிபுரியும் மகளிர் பயன்பெறும் வகையில் 12 புதிய தோழி விடுதிகள் அமைக்கும் பணிகள், கோயம்புத்தூர் – "பூஞ்சோலை" அரசினர் மாதிரி கூர்நோக்கு இல்லம், திருச்சிராப்பள்ளி அரசினர் கூர்நோக்கு இல்லத்திற்கு 27.90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள புதிய கட்டடங்கள் ஆகியவற்றிற்கு அடிக்கல் நாட்டி, சென்னை, இராயபுரம் அரசினர் குழந்தைகள் இல்லத்தில் 7 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடத்தைத் திறந்து வைத்தார்கள்.

சென்னை, கொளத்தூர், பெரியார் நகரில் ரூ.5.24 கோடி செலவில் புதுப்பிக்கப்பட்ட பெரியார் நகர் நூலகம் மற்றும் முதல்வர் படைப்பகம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார் - 14.11.2025

சென்னை, கொளத்தூர் தொகுதியில் பெரியார் நகர் முழுநேரக் கிளை நூலகம், ஜவஹர் நகர் முழுநேர கிளை நூலகம், பேப்பர் மில்ஸ் சாலை கிளை நூலகம், சீனிவாச நகர் (கொளத்தூர்) கிளை நூலகம், கபிலர் தெரு கிளை நூலகம், மதுரைப்பிள்ளை தெரு கிளை நூலகம், கொளத்தூர் பகுதி நேர நூலகம், என மொத்தம் ஏழு நூலகங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த ஏழு நூலகங்களில் 28,121 நபர்கள் உறுப்பினர்களாக உள்ளதோடு, சுமார் 3,31,830 நூல்களும் உள்ளன. இதில் நாள்தோறும் ஆயிரக்கணக்கான மாணவர்கள், பொதுமக்கள் இந்நூலகத்தால் பயன்பெற்று வருகிறார்கள்

பெரியார் நகர் வட்டார நூலகத்தில் 17,886 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். இந்நூலகத்தில் தினசரி நாளிதழ் பிரிவு, இரவல் பிரிவு, சிறுவர்கள் பிரிவு, மகளிர் பிரிவு, குறிப்புதவி நூல்கள் பிரிவு ஆகியவை அமைந்துள்ளன. இதில் 70,000 புத்தகங்கள் உள்ளன. மொத்த புரவலர்கள் 496 பேர் உள்ளனர்.

புதுப்பிக்கப்பட்ட பெரியார் நகர் நூலகம், முதல்வர் படைப்பகம்

கொளத்தூர், பெரியார் நகர் நூலகம், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 5.24 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்டு, முதல்வர் படைப்பகம், நவீன நூலகமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் மக்கள் பயன்பாட்டிற்காகத் திறந்து வைக்கப்பட்டது.

இப்புதுப்பிக்கப்பட்ட முதல்வர் படைப்பகம், தரைத்தளம், முதல் தளத்தைக் கொண்ட குளிரூட்டப்பட்ட நவீன படைப்பகமாக அமைக்கப்பட்டுள்ளது. தரைத்தளத்தில் 75 இருக்கைகளுடன் கூடிய நூலகம், முதல் தளத்தில் 85 இருக்கைகள் கொண்ட கற்றல் மையம், 60 இருக்கைகள் கொண்ட பயிற்சிக் கூடம் ஆகிய வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும், இந்நூலகத்தில், தமிழ்நாடு பாடநூல் கழகப் புத்தகங்கள், தமிழ் இலக்கியம், கவிதை, கட்டுரை, அறிஞர்களின் வரிசையில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, அண்ணல் அம்பேத்கர், முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரது நூல்கள், ஆங்கிலப் புத்தகங்கள், பல தலைவர்களின் வாழ்க்கை வரலாறு நூல்கள், மருத்துவ நூல்கள், போட்டித் தேர்வு மாணவர்களுக்கான TNPSC & UPSC புத்தகங்கள், குழந்தைகளுக்கென்று 4,000 நூல்கள், என சுமார் 70,000 புத்தகங்களுடன் கூடிய நூலக வசதி, மின்வழி கற்றல் (E-Learning), இலவச இணையதள இணைப்பு, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்,

சிற்றுண்டியகம், கழிப்பறைகள் உள்ளிட்ட அனைத்து நவீன வசதிகளும், மாணவர்கள், போட்டித் தேர்வு ஆர்வலர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் சிறப்பாக உருவாக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, மேலும் மாணவச் செல்வங்கள் பயன்பெறும் வகையில், போட்டித் தேர்வுகளுக்கான வழிகாட்டல், தீவிரப் பயிற்சிகளை வழங்குவதற்கு, தமிழ்நாடு அரசின் சார்பில் இயங்கிவரும், அகில இந்தியக் குடிமைப் பணி பயிற்சி மையமும் இணைந்து, இளைஞர்களுக்கு திசைகாட்டும் மாபெரும் திட்டமான "நான் முதல்வன்" திட்டத்தின் கீழ், இந்தியக் குடிமைப் பணி தேர்வுகள், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத் தேர்வுகளுக்குச் சிறந்த பயிற்றுநர்கள் மூலமாகச் சிறப்பான பயிற்சி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பல்வேறு போட்டித் தேர்வுகளுக்குப் படிக்கின்ற மாணவர்கள் இங்கு வருகின்ற காரணத்தால்,அவர்களுக்குள்கலந்துரையாடல் செய்வதற்கு ஒரு வாய்ப்பாகவும் அமைகிறது. இந்த அரிய வாய்ப்பினை மாணவர்கள் பயன்படுத்திக்கொள்ளுமாறு

கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், உயர்கல்வி பயிலும் மாணவியர்களுக்கு புதுமைப் பெண் திட்டம், மாணவர்களுக்குத் தமிழ்ப்புதல்வன் திட்டம், இளைஞர்களின் திறனை மேம்படுத்திட நான் முதல்வன் திட்டம் எனக் கல்வித் துறையில் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி பெரும்புரட்சியைச் செய்து வருகிறார். திராவிடமாடல் அரசு மாணவர்களின் அறிவுத் திறனை மேம்படுத்திட தனிக்கவனம் செலுத்தி, நூலகங்கள், படிப்பகங்களை உருவாக்கி இந்தியாவிற்கே கல்வியில் முன்னோடி மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது.

பெண்களின் பாதுகாப்பினை உறுதி செய்வதற்காக 80 இளஞ்சிவப்பு ரோந்து வாகனங்களின் சேவைகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்- 11.11.2025

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 11.11.2025 அன்று தலைமைச் செயலகத்தில், காவல்துறை சார்பில் பெண்களின் பாதுகாப்பினை உறுதி செய்வதற்காக, மாநகரங்களின் பயன்பாட்டிற்காக 12 கோடி ரூபாய் செலவில் 80 இளஞ்சிவப்பு ரோந்து வாகனங்களின் சேவைகளைக் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

மாநிலத்தின் அமைதியைப் பேணிப் பாதுகாத்து, சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கும் முக்கியப் பணிகளை ஆற்றி வரும் காவல் துறையின் பணிகள் சிறக்க, புதிய காவல் நிலையங்கள், காவலர் குடியிருப்புகள் கட்டுதல், பாதுகாப்புப் பணிகளுக்காக வாகனங்களை கொள்முதல் செய்தல், உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், 2025-2026ஆம் ஆண்டு காவல்துறை மானியக் கோரிக்கையில், பெண்களின் பாதுகாப்பினை உறுதி செய்வதற்காக மாநகரங்களின் பயன்பாட்டிற்காக 80 இளஞ்சிவப்பு ரோந்து வாகனங்கள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, மாநகரங்களின் பயன்பாட்டிற்காக 80 இளஞ்சிவப்பு ரோந்து வாகனங்கள் 12 கோடி ரூபாய் செலவில் கொள்முதல் செய்யப்பட்டு, அவ்வாகனங்களின் பயன்பாட்டினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

இந்த இளஞ்சிவப்பு ரோந்து வாகனங்கள், தாம்பரம், ஆவடி, சேலம், கோயம்புத்தூர், திருப்பூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, மதுரை மாநகரத்திற்கு உட்பட்ட பகுதிகளில் ரோந்துப் பணி மேற்கொண்டு பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்வதில் தனிக்கவனம் செலுத்த ஈடுபடுத்தப்படும்.

"108" அவசரகால ஊர்திகளின் சேவைகளை மேம்படுத்தும் விதமாக 87 புதிய '108' அவசரகால ஊர்திகள்...

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 01.11.2025 அன்று தலைமைச் செயலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் 18 கோடியே 90 இலட்சத்து 46 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான 87 புதிய '108' அவசரகால ஊர்திகளின் சேவையினைப் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

'108' அவசரகால ஊர்திச் சேவையானது 2008 ஆம் ஆண்டு செப்டம்பர் 15-ஆம் நாள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. தமிழ்நாடு அரசானது EMRI GHS என்ற தனியார் நிறுவனத்துடன் ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் '108' அவசரகால ஊர்திகளின் சேவையை வழங்கி வருகிறது. இச்சேவை 24x7 மணி நேரம் என்ற சேவையின் அடிப்படையில், பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கப்படுகிறது. பொதுமக்கள் அவசரகால மருத்துவத் தேவைக்கு "108" என்ற கட்டணமில்லா இலவச தொலைபேசி எண்ணைத் தொடர்புகொண்டு பயன்பெறுகின்றனர்.

அவசரகால நெருக்கடியின்போது தேவையான மருத்துவ உதவியை எளிதாகவும், உடனடியாகவும் பொதுமக்கள் அனைவரும் பயன்பெறும் வகையில் வழங்க, தற்போது 1,353 எண்ணிக்கையிலான '108' அவசரகால ஊர்திகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில், 977 – அடிப்படை வசதி கொண்ட அவசரகால ஊர்திகள், 307 – மேம்படுத்தப்பட்ட அவசரகால ஊர்திகள், 65 – பச்சிளங்குழந்தைகளுக்கான ஊர்திகள் உள்ளிட்ட ஊர்திகள் அடங்கும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார் – 01.11.2025.

இந்த அரசு பொறுப்பேற்றதிலிருந்து இதுவரை '108' அவசரகால ஊர்திகளின் சேவை மூலம் கருவுற்ற தாய்மார்கள், சாலை விபத்துகளில் காயமுற்றோர், இதர அவசரகால மருத்துவத் தேவைகள் என மொத்தம் 85,98,054 மருத்துவப் பயனாளிகள் பயன்பெற்றுள்ளனர். இவைத்தவிர, 41 இரு சக்கர வாகன அவசரகால ஊர்திகள் மூலம் 1,61,688 மருத்துவப் பயனாளிகளும், பச்சிளங்குழந்தைகளுக்கான சேவை மூலம் 95,119 மருத்துவப் பயனாளிகளும், பழங்குடியினர் பகுதிகளில் வசிக்கும் 4,30,697 மருத்துவப் பயனாளிகளும் பயன்பெற்றுள்ளார்கள்.

87 புதிய '108' அவசரகால ஊர்திகள்

'108' அவசரகால ஊர்திகளின் சேவையை மேலும் செம்மையாகச் செயல்படுத்தும் வகையில், தமிழ்நாடு அரசின் சார்பில் 18 கோடியே 90 இலட்சத்து 46 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான 87 புதிய '108' அவசரகால ஊர்திகளின் சேவையினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில்

525 கலைஞர்களுக்கு ரூ.85 இலட்சம் நிதியுதவி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 11.11.2025 அன்று தலைமைச் செயலகத்தில், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறையின்கீழ்ச் செயல்படும் தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் சார்பில் கலைமாமணி விருது பெற்று நலிந்த நிலையில் வாழும் 10 கலைஞர்களுக்குப் பொற்கிழியாகத் தலா 1 இலட்சம் ரூபாய் நிதியுதவி, தமிழில் கருத்தாழமிக்க அரிய கலைகள் சார்ந்த நூல்களைப் பதிப்பிக்க 5 நூலாசிரியர்களுக்குத் தலா 2 இலட்சம் ரூபாய் நிதியுதவி, தமிழில் புதிய நாடகங்கள் தயாரித்து மேடையேற்றம் செய்ய 5 நாடகக் கலைஞர்களுக்குத் தலா 1.50 இலட்சம் ரூபாய் நிதியுதவி, தமிழில் புதிய நாட்டிய நாடகங்களைத் தயாரித்து மேடையேற்றம் செய்ய 5 நாட்டியக் கலைஞர்களுக்கு தலா 1.50 இலட்சம் ரூபாய் நிதியுதவி, 500 நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு இசைக்கருவிகள், ஆடை ஆபரணங்கள் வாங்குவதற்கு தலா 10 ஆயிரம் ரூபாய் நிதியுதவி என மொத்தம் 85 இலட்சம் ரூபாய்க்கான நிதியுதவிகளை 525 கலைஞர்களுக்கு வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் வழங்கினார் – 11.11.2025

தமிழ்நாடு அரசால் 1955-ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம் என்ற அமைப்புத் தோற்றுவிக்கப்பட்டது. இச்சங்கமானது, இயல் தமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ் என்ற முத்தமிழுக்கும் பெருமை சேர்க்கும் விதத்தில், 1973-ஆம் ஆண்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

கலைப் பண்பாட்டுத் துறையின் ஓர் அங்கமாகத் திகழும், தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம், தமிழ்நாடு அரசால் வழங்கப்படும் நிதியுதவியின் மூலம் தொன்மையான கலைகளை

வளர்த்தல், அக்கலைகளில் ஈடுபட்டுள்ள கலைஞர்களை ஊக்குவித்தல், அழிந்து வரும் கலை வடிவங்களை ஆவணமாக்குதல், நாடகம், நாட்டிய நாடகங்களுக்குப் புத்துயிர் அளித்தல், தமிழகப் பாரம்பரிய கிராமியக் கலைகளை வெளி மாநிலங்களிலும், உலகளவிலும் எடுத்துச் செல்லுதல், தமிழ்க் கலைகளின் வளர்ச்சிக்கு அளப்பரிய பங்களிப்பு அளிக்கும் கலைஞர்களுக்கு விருதுகள் வழங்குதல், நலிந்த நிலையிலுள்ள கலைஞர்களுக்கு மாதாந்திர நிதியுதவி வழங்குதல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

கலைமாமணி விருது பெற்று நலிந்த நிலையில் வாழும் 10 கலைஞர்களுக்கு பொற்கிழி வழங்குதல்

அந்த வகையில், தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் சார்பில் கலைமாமணி விருது பெற்று நலிந்த நிலையில் வாழும் திரு. டி.ஜி. ரத்தினம், திரு.கே.எஸ்.கிருஷ்ணப்பா, திரு.கே.ஏ.சத்தியபாலன், திரு.எஸ். முத்துக்குமார், திரு. எஸ். சுப்ரமணியன், திரு. ஏ. முத்துலெட்சுமணராவ், திரு. ஏ. பி. அய்யாவு, திருமதி ஏ. ராஜகிளி, செல்வி ஆர். கே. விசித்ரா, திரு. எம். திருச்செல்வம் ஆகிய 10 கலைஞர்களுக்குப் பொற்கிழித் தொகையாகத் தலா 1 இலட்சம் ரூபாய் வழங்கிடும் அடையாளமாக 4 கலைமாமணி விருதாளர்களுக்குப் பொற்கிழிக்கான காசோலைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

தமிழில் கருத்தாழமிக்க அரிய கலைகள் சார்ந்த நூல்களைப் பதிப்பிக்க 5 நூலாசிரியர்களுக்கு நிதியுதவி வழங்குதல்

தமிழில் கருத்தாழமிக்க அரிய கலைகள் சார்ந்த நூல்களைப் பதிப்பிக்க முனைவர் மோ. பாட்டழகன், முனைவர் கி. அய்யப்பன், முனைவர் ஜே. ஆர். லட்சுமி, முனைவர் க. வெங்கடேசன், முனைவர் சித்ரா கோபிநாத் ஆகிய 5 நூலாசிரியர்களுக்கு நிதியுதவி வழங்கிடும் அடையாளமாக 2 நூலாசிரியர்களுக்குத் தலா 2 இலட்சம் ரூபாய் நிதியுதவிக்கான ஆணைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

தமிழில் புதிய நாடகங்கள், நாட்டிய நாடகங்கள் தயாரித்து மேடையேற்றம் செய்ய நிதியுதவி வழங்குதல்

தமிழில் புதிய நாடகங்கள், நாட்டிய நாடகங்கள் தயாரித்து மேடையேற்றம் செய்திட 5 நாடகக் கலைஞர்களுக்கும், 5 நாட்டியக் கலைஞர்களுக்கும் நிதியுதவி வழங்கிடும் அடையாளமாக 4 கலைஞர்களுக்குத் தலா 1.50 இலட்சம் ரூபாய் நிதியுதவிக்கான ஆணைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு இசைக் கருவிகள், ஆடை ஆபரணங்கள் வாங்குவதற்கு நிதியுதவி வழங்குதல்

நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு இசைக் கருவிகள், ஆடை ஆபரணங்கள் வாங்குவதற்கு 500 நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்கிடும் அடையாளமாக 5 கலைஞர்களுக்குத் தலா 10 ஆயிரம் ரூபாய் நிதியுதவிக்கான காசோலைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

தமிழ்நாடு இயல், இசை நாடக மன்றத்தின் சார்பில் வழங்கப்படும் நலத்திட்ட உதவிகளின் கீழ் மொத்தம் 85 இலட்சம் ரூபாய்க்கான நிதியுதவியினை 525 கலைஞர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

வெற்றி நிச்சயம் திட்டத்தின் மூலம் திறன் பயிற்சி பெற்ற இளைஞர்களுக்கு பணி நியமன ஆணைகள்

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 11.11.2025 அன்று சென்னை, நந்தனம் மெட்ரோ இரயில் நிறுவனக் கூட்டரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறையின்கீழ்ச் செயல்பட்டு வரும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் வெற்றி நிச்சயம் திட்டத்தின் மூலம் திறன் பயிற்சி பெற்ற 170 இளைஞர்களுக்குத் திறன் பயிற்சிச் சான்றிதழ்கள், ஊக்கத்தொகை காசோலை, பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், பல்வேறு நிறுவனங்களுக்கிடையே திறன் பயிற்சி அளிப்பதற்காகப் புரிந்துணர்வு ஒப்பந்தங்களைப் பரிமாறிக்கொண்டனர்.

L & T நிறுவனத்தின் கப்பல் கட்டுமானத் தொழிற்சாலை சென்னை காட்டுப்பள்ளியில் அமைந்துள்ளது. இந்நிறுவனம் இதுவரை

மாண்புமிகு
தமிழ்நாடு துணை முதலமைச்சர்
திரு. **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள்
ஆணைகளை வழங்கினார் – 11.11.2025

100-க்கும் மேற்பட்ட பாதுகாப்பு, வணிகக் கப்பல்களை வெற்றிகரமாக உருவாக்கியுள்ளது. இந்தக் கப்பல் கட்டுமானத்துறையில் உள்ள திறன் பெற்ற பணியாளர்களின் பற்றாக்குறையைக் களையும் நோக்கில் ஐடிஐ தேர்ச்சி பெற்ற தமிழ்நாட்டு மாணவர்களுக்கு நான்கு மாத பயிற்சித் திட்டத்தை அறிமுகப்படுத்த L & T நிறுவனம், இந்திய கப்பற்படை, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் ஆகியோருக்கு இடையே முத்தரப்புப் புரிந்துணர்வு ஒப்பந்தம் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் கையெழுத்தானது.

300 Manufacturing technician பணியாளர்களுக்கு வேலைவாய்ப்பு பெற்றுத்தரும்

வகையில் Delphi TVS நிறுவனத்துடன் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் இணைந்து வேலைவாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சி அளிக்க புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

IITM -நிறுவனத்துடன் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் இணைந்து Advanced Electronics Manufacturing, Basics of Electronics and Embedded system with sensors, Biosensors & Bioinstrumentation, CNC EDM Wire cutting practice, CNC programming & Machining, Digital Manufacturing practice, Embedded Technology with IoT, Multilayer PCB design & Fabrication, PLC and its industry application, Power Electronics and Drives, Certification Course on Intelligent Data Centre Management உள்ளிட்ட உயர்தொழில்நுட்பப் பயிற்சிகளை 1,000 நபர்களுக்கு அளிப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

Dixon Technologies - Padget Electronics Private Limited நிறுவனத்துடன் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் இணைந்து SMT and FATP modules அடிப்படையில் பயிற்சியினை 300 நபர்களுக்கு அளிக்க புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

GTTI implementating German Dual Vocational and Education Training நிறுவனத்துடன் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் இணைந்து CNC Turning, CNC Milling, CAD/CAM/Design software பயிற்சியினை 2,700 நபர்களுக்கு அளிக்க புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

HCL Tech Training நிறுவனத்துடன் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் இணைந்து தூத்துக்குடி, விளாத்திக்குளம் பகுதியைச் சேர்ந்த 2,500 இளைஞர்களுக்குத் திறன் பயிற்சி அளித்து வேலைவாய்ப்புப் பெற்றுத்தரவும் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை:

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் சார்பாக வெற்றி நிச்சயம் திட்டத்தின்கீழ்ப் பயிற்சியைத் தொடங்கி வைப்பதிலும், இளைஞர்களுக்குப் பணி நியமன ஆணைகள் மற்றும் திறன் ஊக்கத்தொகை (Skill Incentives) வழங்குவதிலும் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு அமைந்த நாள் முதல், இளைஞர்களின் வேலைவாய்ப்புக்குத் தேவையான அத்தனை நடவடிக்கைகளையும் நம்முடைய அரசு மேற்கொண்டு வருகின்றது.

குறிப்பாக, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தன்னுடைய பிறந்தநாளன்று மார்ச் 1ஆம் தேதி தன்னுடைய கனவுத் திட்டம் என்றுதான் இந்த 'நான் முதல்வன்'

திட்டத்தை அறிவித்துத் தொடங்கி வைத்தார்கள். இந்த நான்கு வருடங்களில் 'நான் முதல்வன்' திட்டத்தின் மூலம் 42 இலட்சம் இளைஞர்களுக்கு திறன் பயிற்சியை நம்முடைய அரசு வழங்கி இருக்கின்றது.

அதுமட்டுமல்ல, 3 இலட்சத்து 30 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பையும் நம்முடைய அரசு வழங்கி இருக்கின்றது. அதனுடைய தொடர்ச்சியாகத்தான், இன்றைக்கு Tamil Nadu Skill Development Corporation மூலமாக இந்த வெற்றி நிச்சயம் திட்டமும் செயல்படுத்தப்படுகின்றது. இதன் மூலமாகப் பள்ளி, கல்லூரி முடித்தவர்கள், இடைநின்றவர்கள், ஏன் வேலையில் இருக்கின்றவர்களுக்குக் கூட நாம் திறன் பயிற்சி (Skill Training) வழங்கிக் கொண்டிருக்கின்றோம்.

நீங்கள் உங்களுடைய வாழ்க்கையை உயர்த்திக் கொள்ள வேண்டும் என்று பலமாதங்கள் பயிற்சி எடுத்துக் கொண்டு இங்கே வந்திருக்கின்றீர்கள். உங்களுக்கு இருக்கின்ற இந்த எண்ணமும், ஆர்வமும் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அனைத்து இளைஞர்களுக்கும் நிச்சயமாக வரவேண்டும்.

நமக்கு ஒரு திறன் (skill) இருக்கு என்பதே உங்களுக்கு ஒரு மிகப் பெரிய confidence Boostஐ நிச்சயமாகக் கொடுக்கும். அது எந்தவிதமான திறனாக வேண்டுமானாலும் இருக்கலாம். வெல்டிங் திறனாக இருக்கலாம், கோடிங் திறனாக இருக்கலாம், வீடியோ எடிட்டிங் திறனாக இருக்கலாம். இப்படி எப்படிப்பட்ட திறனாகவும் இருக்கலாம்.

நம்முடைய மாணவர்களுக்குப் பட்டப்படிப்பு மட்டும் பத்தாது, கூடுதலாக ஏதாவது திறனும் (Skill) தெரிந்திருக்க வேண்டும் என்றுதான் இந்த 'வெற்றி நிச்சயம்' திட்டம் தொடங்கப்பட்டது. 'வெற்றி நிச்சயம்' திட்டத்தின் மூலமாகச் சுமார் 60 ஆயிரம் இளைஞர்கள் இன்றைக்குப் பயிற்சி பெற்றுக்கொண்டு இருக்கிறார்கள்.

திறன் பயிற்சியில் (Skill Training) முக்கியமானதே கற்றுக்கொண்ட, திறனை நாம் அவ்வப்போது Technologyக்கு ஏற்றார் போல் Update செய்து கொண்டு வரவேண்டும். ஒரு திறனைக் கற்றுக் கொண்ட பிறகு, நமக்குத் தான் எல்லாம் தெரியும் என்று அமைதியாக இருந்துவிடக் கூடாது. ஏன் என்றால், அதுவே நம்முடைய வளர்ச்சிக்குத் தடையாக இருந்துவிடும்.

அதற்கு இருக்கக்கூடிய சிறந்த எடுத்துக்காட்டாக நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய வாழ்கையை எடுத்துக் கொள்ளுங்கள். முதன்முதலில் பத்திரிகை ஆரம்பிக்கும்போது, அது ஒரு கையெழுத்து பிரதி பத்திரிகையாகத் தான் ஆரம்பித்தார். ஒவ்வொரு பிரதியையும் அவரே கைப்பட எழுதினார். அதன்பிறகு, அச்சிடும் தொழில்நுட்பம் (Printing Technology) வந்த பிறகு update செய்து கொண்டு அதை அச்சிட (print) ஆரம்பித்தார். அதன்பிறகு Internet, social media வந்த பிறகு அதை Internetல் Publish செய்ய ஆரம்பித்தார். இன்னும் சொல்லப்போனால், 90 வயது வரை Social media, Facebook, Twitter போன்றவற்றில் Active ஆக இருந்த ஒரே தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான். ஏனென்றால், அவர் காலத்திற்கேற்ப தன்னை update செய்துகொண்டே இருந்தவர் டாக்டர் கலைஞர் அவர்கள். பயிற்சிக்கும், முயற்சிக்கும் வயது வரம்பே கிடையாது. எல்லா வயதிலும் எல்லோராலும் சாதிக்க முடியும்.

உங்களுடைய திறனை வளர்க்க வேண்டும் என்ற நோக்கத்தோடு நம்முடைய தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் இன்றைக்குப் பல்வேறு முயற்சிகளை எடுத்துக் கொண்டு வருகின்றது. ஆடை, நகை வடிவமைப்பு, தகவல் தொழில்நுட்பம், மின்னணுவியல் (electronics), அழகுக் கலை, உணவுத் துறை, விவசாயம் என்று கிட்டத்தட்ட 35 துறைகளில் இங்கே பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்தக் கழகத்தின் மூலமாகப் பயிற்சி பெறக்கூடியவர்களில் 72 சதவீதம் பேர் சமூகத்தினுடைய பின்தங்கிய பிரிவைச் சேர்ந்தவர்கள் என்பது எங்களுக்குக் கூடுதல் மகிழ்ச்சி, கூடுதல் சிறப்பு. அதில், இலங்கை முகாம் வாழ் தமிழர்கள், திருநங்கைகள், மாற்றுத்திறனாளிகள், மனநல சிகிச்சை பெற்று மீண்ட இளைஞர்கள் என்று பல்வேறு தரப்பினரும் இருக்கின்றார்கள். சிறைச்சாலை சீர்திருத்த பயனர்கள், விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், மீனவர்கள், மலைவாழ் பழங்குடியினர் என்று அனைத்துத் தரப்பு இளைஞர்களும் இதில் பயிற்சி எடுக்க வந்திருக்கின்றீர்கள். இன்னும் பயிற்சி பெற இருக்கின்றீர்கள்.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சமீபத்தில் தாயுமானவர் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள். அந்தத் திட்டத்தினுடைய பயனாளிகளுக்குத் திறன் பயிற்சி கொடுப்பதில் முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்தத் துறைக்கு உத்தரவிட்டுள்ளார்கள்.

அதன்படி, அரசுக் காப்பகத்தில் இருக்கக்கூடிய ஆதரவற்ற மாணவர்களுக்கும் அவர்களுடைய வேலைவாய்ப்புக்கு ஏற்றார்போல் இங்கே பயிற்சி வழங்கப்பட இருக்கின்றது. இதுதான், திராவிட மாடல். இப்படி, ஒட்டுமொத்த சமூகத்தையும் முன்னேற்றுவதுதான்திராவிட மாடல்.

இதில் கூடுதல் சிறப்பாக, பயிற்சி பெறக்கூடியவர்களுக்கு அவர்களுடைய பயிற்சியின் அடிப்படையில் 12 ஆயிரம் ரூபாய் ஊக்கத் தொகையும் இங்கே வழங்கப்பட இருக்கின்றது.

அதுமட்டுமல்லாமல், Factory Skill School என்ற தொழிற்சாலைத் திறன் பள்ளிகள் மூலமாக, தொழிற்சாலைகளிலே பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இளைஞர்களுக்கு அங்கேயே வேலைவாய்ப்பும் வழங்கப்படுகின்றது.

கைவினைக் கலைஞர்களுக்கும் புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த அவர்களுக்குத் திறன் பயிற்சிகள் கொடுக்கப்படுகின்றன. இவர்களுக்கெல்லாம் வங்கிகள் மூலமாகக் கடனுதவியும் ஏற்பாடு செய்யப்பட இருக்கின்றது.

பயிற்சிகளை முடித்திருக்கக்கூடிய உங்கள் அனைவருடைய வாழ்க்கையிலும் 'வெற்றி நிச்சயம்' என்று இந்த நேரத்தில் உங்கள் அத்தனைபேரையும் வாழ்த்துகின்றேன். உங்களுக்குப் பயிற்சிகளை அளித்த அனைத்து நிறுவனங்களுக்கும், பயிற்சியாளர்களுக்கும், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக அலுவலர்கள், வந்திருக்கக்கூடிய அத்தனைபேருக்கும் என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்து, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

நன்றி, வணக்கம்.

பஹ்ரைனில் நடைபெற்ற 3ஆவது ஆசிய இளையோர் பளுதூக்குதல் விளையாட்டுப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற தமிழ்நாட்டு வீரர் திரு.அ.மஹாராஜன் அவர்களுக்கு ரூ.25 இலட்சம் ஊக்கத்தொகை

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார் – 05.11.2025

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெறும் தமிழ்நாட்டின் விளையாட்டு வீரர், வீராங்கனைகளை ஊக்குவிக்கும் வகையில் உயரிய ஊக்கத்தொகை வழங்கி வருகின்றார்கள். மேலும் உலகின் எப்பகுதியில் நடக்கும் விளையாட்டுப் போட்டிகளிலும் தமிழ்நாட்டு விளையாட்டு வீரர், வீராங்கனைகள் கலந்து கொள்ள பொருளாதாரம் ஒரு தடையாக இருக்கக்கூடாது என்பதற்காகத் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையை ஏற்படுத்தி விளையாட்டு வீரர், வீராங்கனைகள் தங்களுக்குத் தேவையான அதிநவீன உபகரணங்களை வாங்கிக் கொள்ளவும், தேசிய, சர்வதேசப் போட்டிகளில் கலந்து கொள்வதற்கான செலவு, தங்குமிடம், பயிற்சி பெறுதல், பயணத்திற்கான செலவுகளை மேற்கொள்ள தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையிலிருந்து நிதி உதவி வழங்க உத்தரவிட்டுள்ளார்.

அதனடிப்படையில் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 05.11.2025 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பஹ்ரைனில் சமீபத்தில் நடைபெற்ற 3 ஆவது ஆசிய இளையோர் விளையாட்டுப் பளுதூக்குதல் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற தமிழ்நாட்டு வீரர் திரு.அ.மஹாராஜனுக்கு 25 இலட்சம் ரூபாய்க்கான ஊக்கத்தொகை காசோலையை வழங்கிப் பாராட்டுத் தெரிவித்தார்.

மேலும், அபுதாபியில் 21.11.2025 முதல் 30.11.2025 வரை நடைபெறும் உலக சீனியர் கிக் பாக்சிங் சாம்பியன்ஷிப் போட்டியில் பங்கேற்கும் 11 வீரர், வீராங்கனைகளுக்குப் போட்டியில் பங்கேற்க, பயணச்செலவு, தங்குமிடச் செலவு உள்ளிட்ட செலவீனத்திற்காகத் தலா 1,75,000 ரூபாய்

வீதம் மொத்தம் 19.25 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார்.

தொடர்ந்து தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய விடுதியைச் சேர்ந்த 5 கூடைப்பந்து வீரர், வீராங்கனைகளுக்கு விளையாட்டு உபகரணங்களை வாங்கிட மொத்தம் 2.75 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளையும், உலகத் திறன் விளையாட்டுப் போட்டியில் பங்கேற்கும் பாரா வாள்வீச்சு வீராங்கனைச் செல்வி ஷெரந்தி தாமஸ்க்கு செலவீனத் தொகையாக 1,64,500 ரூபாய்க்கான காசோலையும் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து வழங்கினார்.

தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையின் (TN Champions Foundation) மூலமாக இதுவரை 481 மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர் உட்பட 4,082 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்குச் சர்வதேசப் போட்டிகளில் கலந்து கொள்ளவும், உயர்தர விளையாட்டு உபகரணங்கள் வாங்கிடவும் 36,00,58,551 ரூபாய் நிதியுதவியாக வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

2025-2026ஆம் கல்வியாண்டிற்கான
மிதிவண்டிகள் வழங்கும் திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 14.11.2025 அன்று சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அழகப்பா மாதிரி மேல்நிலைப் பள்ளியில் பள்ளிக் கல்வித்துறை மற்றும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர்மற்றும்சிறுபான்மையினர் நலத்துறைகளின் சார்பில் நடைபெற்ற பள்ளி மாணவ – மாணவியருக்கு மிதிவண்டிகள் வழங்கும் திட்டம் 2025-2026, சிறந்த பள்ளிகளுக்கான விருது 2024-2025, குழந்தைகள் தின விழாவில் தமிழ்நாடு முழுவதும் 2025-2026 ஆம் கல்வியாண்டில் அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் பகுதியாக அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 11-ஆம் வகுப்புப் பயிலும் 5,34,017 மாணவ, மாணவியருக்கு

மாண்புமிகு
தமிழ்நாடு துணை முதலமைச்சர்
திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள்
தொடங்கி வைத்தார் - 15.11.2025.

241 கோடி ரூபாய் செலவில் மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தினைத் தொடங்கி வைக்கும் அடையாளமாக 1,448 மாணவ, மாணவியருக்கு மிதிவண்டிகளை வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, தமிழ்நாட்டில் மேல்நிலைக் கல்வியை ஊக்குவிக்கும் வகையில், பள்ளிகளுக்கு மாணவ, மாணவியர் சிரமமின்றி சென்று வர உதவியாக, அரசு, அரசு உதவி பெறும், பகுதியாக அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் 11-ஆம் வகுப்புப் பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர், ஆதிதிராவிடர், பழங்குடியினர், இதரப் பிரிவைச் சார்ந்த அனைத்து மாணவ, மாணவியருக்கும், எவ்வித வருமான உச்சவரம்பின்றி ஆண்டுதோறும் மிதிவண்டிகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ், கடந்த நான்கு ஆண்டுகளில் 1,092 கோடி ரூபாய் செலவில் 22 இலட்சம் மாணவ, மாணவியருக்கு மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

2025-2026 ஆம் கல்வியாண்டில் 11 ஆம் வகுப்பு பயிலும் 2,38,967 மாணவர்கள், 2,95,050 மாணவியர் என மொத்தம் 5,34,017 மாணவ, மாணவியருக்கு 241 கோடி ரூபாய் செலவில் மிதிவண்டிகள் வழங்கப்படவுள்ளன.

இத்திட்டத்தின்கீழ் சிவகங்கை மாவட்டத்தில் 4,938 மாணவர்கள், 6,511 மாணவியர் என மொத்தம் 11,449 மாணவ, மாணவியர்களுக்கு 5.18 கோடி ரூபாய் செலவில், மிதிவண்டிகள் வழங்கப்படவுள்ளன.

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அழகப்பா மாதிரி மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அரசு, அரசு நிதி உதவி, பகுதியாக நிதி உதவி பெறும் 8 பள்ளிகளைச் சேர்ந்த 576 மாணவர்கள், 872 மாணவிகள் என மொத்தம் 1,448 மாணவ, மாணவியருக்கு மிதிவண்டிகளை வழங்கி, தமிழ்நாடு முழுவதும் 2025-2026 ஆம் கல்வியாண்டில் அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகள், பகுதியாக அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 11-ஆம் வகுப்புப் பயிலும் 5,34,017 மாணவ, மாணவியருக்கு 241 கோடி ரூபாய் செலவில் மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தினைத் தொடங்கி வைத்தார்.

சிறந்த 114 பள்ளிகளுக்குக் கேடயம்

அரசு, அரசு நிதியுதவி பெறும் தொடக்க, நடுநிலைப் பள்ளிகள் கல்விப் பணியில் முன்னேற்றம் காணவும், பள்ளிகளிடையே போட்டி மனப்பான்மையினை ஊக்குவிக்கவும், ஒவ்வொரு ஆண்டும் மாவட்டத்திலுள்ள 3 சிறந்த பள்ளிகளைத் தெரிவு செய்து மாவட்ட வாரியாகச் சுழற்கேடயங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

2024-2025 ஆம் கல்வியாண்டில் ஊராட்சி, நகராட்சி, மாநகராட்சி, அரசு நிதியுதவி பெறும் தொடக்க,நடுநிலைப் பள்ளிகளில் மாவட்ட அளவில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற அனைத்து மாவட்டங்களைச் சேர்ந்த மொத்தம் 114 பள்ளிகளின்

தலைமை ஆசிரியர்களுக்கு மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கேடயங்களை வழங்கினார்.

குழந்தைகள் தின விழா

சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமரான ஜவஹர்லால் நேருவின் பிறந்தநாளான நவம்பர் 14 குழந்தைகள் தினமாகக் கொண்டாடப்படுகிறது. குழந்தைகள் தினத்தையொட்டி இன்றைய விழாவில் நாட்டரசன்கோட்டை கே.எம்.எஸ்.சி. மேல்நிலைப் பள்ளி மாணவிகளின் பரதநாட்டியம், கோட்டையூர் சி.சி பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவிகளின் நாட்டுப்புறப் பாடல், தேவகோட்டை புனித மரியன்னை பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவிகளின் நடனம், மரகாத்தூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி மாணவியின் பேச்சு ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

கலைநிகழ்ச்சிகளில் பங்குபெற்ற மாணவ, மாணவியரை மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் பாராட்டிக் கேடயங்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை.

இன்றைக்குத் தமிழ்நாடு முழுவதும் பள்ளி மாணவர்களுக்கு சைக்கிள் வழங்குவது, குழந்தைகள் தின விழா, சிறந்த அரசு தொடக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளிகளுக்கு விருது, சான்றிதழ்கள் வழங்குகின்ற 3 நிகழ்ச்சிகளை ஒரே இடத்தில் நடத்தி, உங்களையெல்லாம் சந்திப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

இன்றைக்கு, சிவகங்கை மாவட்டத்தில் மட்டும் சுமார் 11 ஆயிரத்து 500 மாணவச் செல்வங்களுக்கு இந்த சைக்கிள்களை வழங்க இருக்கின்றோம். அதே போல் தமிழ்நாடு முழுவதும், 5 இலட்சத்து 35 ஆயிரம் மாணவர்களுக்கு சைக்கிள்களை நாம் வழங்க இருக்கின்றோம்.

பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் பேசும்போது குறிப்பிட்டுப் பேசினார். பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்களின் துறை சைக்கிள்களை கொடுப்பதாகவும், வாங்குவது அவருடைய பள்ளிக்கல்வித் துறை என்றும் அவர் குறிப்பிட்டு, நன்றி தெரிவித்துப் பேசினார். அதில் ஒரு சின்ன திருத்தம், கொடுப்பது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், வாங்குவது இங்கே வந்திருக்கக்கூடிய பள்ளி மாணவர்கள்.

இதில் இன்னொரு பெருமைக்குரிய விசயம் என்னவென்றால், இன்றைக்கு மாநிலம் முழுவதும் கொடுக்கப்படுகின்ற அந்த சைக்கிள்களில், அதனைப் பெறுபவர்கள் மாணவர்களைவிட, மாணவிகள் எண்ணிக்கை மிக, மிக அதிகம். அதிகம் என்றால், ஆயிரம், இரண்டாயிரம், ஐயாயிரம் இல்லை. இன்றைக்கு 57 ஆயிரம் மாணவிகள் அதிகமான பேர் சைக்கிள்களைப் பெற இருக்கின்றீர்கள்.

ஆண்களைவிட பெண் பிள்ளைகள் இன்றைக்கு அதிகம் படிக்க வருவதற்கான அடையாளம் தான் இந்த எண்ணிக்கை.

இதுதான் நம்முடைய திராவிட மாடல் அரசினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வெற்றி.

இன்றைக்கு இவ்வளவு பெண்களுக்கு நாம் சைக்கிள் கொடுக்கின்றோம். இத்தனைபேர் படிக்க வருகின்றீர்கள். ஒரு காலத்தில் பெண்கள் வீட்டைவிட்டு வெளியே வர அனுமதி கிடையாது. படிப்பதற்கு உரிமை கிடையாது. பெண்களை அடிமைப்படுத்திப் படிக்கவிடாமல் வைத்திருந்தார்கள். அதையெல்லாம் தலைகீழாக மாற்றி, பெண்கள் எல்லோரும் படிக்க வேண்டும், அனைவரும் படிக்க வேண்டும் என்ற நிலைமையை ஏற்படுத்தியது நம்முடைய திராவிட இயக்கம் என்பதை நீங்கள் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும்.

இந்த நிலைமை சாதாரணமாக வரவில்லை. கிட்டத்தட்ட ஒரு 100 வருட போராட்டத்திற்குப் பிறகுதான் இந்த நிலைமையை நாம் அடைந்திருக்கின்றோம். பல போராட்டங்கள், தியாகங்களுடைய பலனாகத்தான் இங்கே நீங்கள் இத்தனை ஆயிரம் பேர் படிக்க வந்திருக்கின்றீர்கள்.

இந்த வரலாற்றை எல்லாம் மாணவர்களாகிய நீங்கள் முதலில் தெரிந்துக்கொள்ள வேண்டும். அதற்காகத்தான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அடிக்கடிச் சொல்வார்கள். மாணவச் செல்வங்கள் நீங்கள் அத்தனைபேரும் நன்றாகப் படிக்க வேண்டும். வாழ்கையில் நீங்கள் அத்தனைபேரும் படித்து நல்ல நிலைமைக்கு முன்னேறி வரவேண்டும்.

அதற்காகத்தான் நம்முடைய அரசு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்குப் பல திட்டங்களை நிறைவேற்றி வருகிறார். சமீபத்தில், கல்வியில் சிறந்த தமிழ்நாடு என்ற ஒரு நிகழ்ச்சியை நம்முடைய அரசு நடத்தியது. பள்ளிக் கல்வித்துறை நடத்தியது. உங்களில் பலபேர் தொலைக்காட்சியில் பார்த்திருப்பீர்கள், Youtubeல் பாத்திருப்பீர்கள்.

கல்வி, ஒவ்வொருத்தருடைய வாழ்க்கையிலும் எந்த அளவிற்கு ஒரு முன்னேற்றத்தை

ஏற்படுத்தும் என்று அந்த நிகழ்ச்சியைப் பார்த்த அத்தனைபேருக்கும் புரிந்திருக்கும். ஏழ்மை நிலைமையில் இருக்கக்கூடிய ஒரு குடும்பத்தை, அந்தக் குடும்பத்தில் இருக்கக்கூடிய ஒருத்தருடைய கல்வி எந்த அளவிற்கு உயர்த்திடும் என்பதை அந்த நிகழ்ச்சியைப் பார்த்த அத்தனைபேருக்கும் புரிந்திருக்கும்.

கல்வி என்பது அவ்வளவு பவுர்ஃபுல்லான விஷயம். கல்வி உங்களுக்கு வெறும் பொருளையும், பணத்தை மட்டும் கொடுப்பதில்லை. உங்களுக்கு அதனுடன் சேர்த்து Confidence-ஐயும் Power-ஐயும் கொடுப்பது தான் கல்வி. அதனால்தான் இன்றைக்கு இந்தியாவிலேயே கல்விக்காக அதிக திட்டங்களை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார். படிப்பு மூலமாகப் பெறுகின்ற அந்த அறிவை, நீங்கள் சுயமாகச் சிந்திக்க பயன்படுத்த வேண்டும்.

ஒரு யானைப் பாகன், அவனுடைய யானையை ஒரு சின்ன கயிறு மூலமாகக் கட்டி வைத்திருந்தானாம். அதைப் பார்த்து அந்தப் பக்கம் வந்த ஒரு சுற்றுலாப் பயணி அந்த யானைப் பாகனிடம் சென்று கேட்டிருக்கின்றார். இவ்வளவு பெரிய யானையை இவ்வளவு சின்ன கயிற்றில் கட்டிப் போட்டிருக்கீங்களே. யானை அந்தக் கயிற்றை அறுத்துவிட்டு ஓடிவிடாதா என்று அந்தப் பயணி கேட்டுள்ளார். அதற்கு அந்த யானைப் பாகன் சொன்னான். இந்த யானை, குட்டி யானையாக இருக்கும்போது இந்தக் கயிற்றை வைத்து நான் கட்டிப் போட்டிருந்தேன். அதில் இருந்து, இப்போது வளர்ந்து கொஞ்சம், கொஞ்சமாகப் பெரிதாகிவிட்டது. இருந்தும் அதே கயிற்றில்தான் நான் கட்டிப்போடுகிறேன்.

குட்டியாக இருந்தபோது அறுக்க முடியாத கயிற்றை, இப்பவும் அறுக்க முடியாது என்று அந்த யானை இன்னும் நினைத்துக் கொண்டிருக்கிறது. என்று பதில், அந்த யானைப் பாகன் சொன்னானாம்.

நம்முடைய மனித மூளையும் அதே மாதிரிதான், நமக்கு இதெல்லாம் வராது, நம்மால் இதை எல்லாம் செய்ய முடியாது என்று நாம் யாரும் நினைக்கக் கூடாது. அப்படி நினைத்தால், நமக்கும் அந்த யானை நிலைமைதான்.

ஆகவே, நாம் அத்தனை பேரும், குறிப்பாக வந்திருக்கக்கூடிய மாணவச் செல்வங்கள் நீங்கள் தொடர்ந்து முயற்சி செய்துகொண்டே இருக்க வேண்டும். அதற்கு உங்களுடைய சிந்தனை ஆற்றலை நீங்கள் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

இன்றைக்கு நாம் அனைவரும் மகிழ்ச்சியோடு குழந்தைகள் தினத்தைக் கொண்டாடுகிறோம். இன்றைக்கு உங்களுக்கான தினம்.

உண்மையிலேயே, பெரியவர்களை விட அதிகமாகச் சிந்திக்கிறவர்கள் இங்கு வந்திருக்கக்கூடிய மாணவச் செல்வங்கள், குழந்தைகள் நீங்கள்தான்.

எப்படி எல்லாம் கேள்வி கேட்க வேண்டும் என்பதை உங்களிடம் நாங்கள் கற்றுக்கொள்ள வேண்டும். இன்னும் சொல்லப்போனால் சில நேரங்களில் நீங்கள்தான் எங்களுக்கே டீச்சர்ஸ்.

எங்கள் வீட்டில் எங்கள் அப்பா, அம்மா கேட்கின்ற கேள்விக்கு என்னால் பதில் சொல்ல முடிந்துவிடும். ஆனால், என்னுடைய பெண் கேட்கின்ற கேள்விக்கு உடனே என்னால் பதில் சொல்ல முடியாது. அந்த அளவிற்குத் தெளிவாகக் கேள்வி கேட்பார்கள்.

உங்கள் மனதில் ஒவ்வொரு நொடியும் பல கேள்விகள் தோன்றிக் கொண்டே இருக்கும். அப்படிப்பட்ட அந்தக் கேள்விகளை நாம் கேட்டுவிட வேண்டும். சிந்தித்து கேள்வி கேட்க வேண்டும்.

அதனால் தான், நம்முடைய தலைவர்கள் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள், எல்லோரும் தொடர்ந்து பகுத்தறிவு பற்றி என்னவென்று வலியுறுத்திக் கொண்டே இருந்தார்கள்.

பகுத்தறிவுனா என்ன? எந்த விசயமாக இருந்தாலும், ஏன்? எதற்கு? எப்படி? என்று கேள்வி கேட்க வேண்டும். பதில் கிடைக்கும் வரை கேள்வி கேட்டுக்கொண்டே இருக்க வேண்டும். அப்போதுதான் அதற்குச் சரியான பதில் நமக்கு கிடைக்கும். நமக்கு ஒரு தெளிவும் பிறக்கும்.

அப்படி தொடர்ந்து தமிழர்கள் கேள்வி கேட்டதனால்தான், இன்றைக்கு இந்தியாவிலேயே மிகச் சிறந்த ஒரு மாநிலமாக, கல்வியில் சிறந்த

மாநிலமாக நம்முடைய தமிழ்நாட்டு மாணவர்கள், தமிழ்நாடு சிறப்பாக விளங்கி கொண்டிருக்கிறது.

இன்னும், தமிழ்நாடு, உலக நாடுகளோடு போட்டிப்போடுகின்ற அந்த நிலைமைக்கு நாம் உயர்த்தவேண்டும்.அப்படி வளரவேண்டும்,உயர்த்த வேண்டும் என்றால், இங்க வந்திருக்கக்கூடிய மாணவர்கள், மாணவிகள் நீங்கள் அத்தனைபேரும் நன்றாகப் படிக்க வேண்டும். அதை விட முக்கியமாக சிந்திக்கும் திறனை நாம் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

உங்களுடைய கல்வி வளர்ச்சிக்காக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் ஒவ்வொரு நாளும் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி வருகின்றார்கள். ஒன்றாம் வகுப்பிலிருந்து 5ஆம் வகுப்பு வரை படிக்கக்கூடிய மாணவச் செல்வங்களுக்கு ஒவ்வொரு நாளும் 22 இலட்சம் குழந்தைகளுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிமுகப்படுத்தி, செயல்படுத்தி இருக்கின்றார்.

பள்ளி மாணவர்களுக்கு மட்டுமல்ல, கல்லூரி மாணவர்களுக்கும் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தியிருக்கின்றார். அரசுப் பள்ளிகளில் படித்து, காலேஜ் சென்று படித்தால், அது எந்த காலேஜ் ஆக இருந்தாலும் சரி, எந்தப் படிப்பாக இருந்தாலும் சரி, மாணவர்களுக்குத் தமிழ்ப்புதல்வன், மாணவிகளுக்குப் புதுமைப்பெண் என்ற திட்டத்தின் மூலம் மாதம் 1,000 ரூபாய் கல்வி ஊக்கத்தொகை. இதன் மூலமாக 8 இலட்சம் மாணவ, மாணவிகள் பயன்பெற்றுள்ளார்கள்.

இன்றைக்கு உங்களுக்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிதிவண்டிகளைக் கொடுத்திருக்கின்றார். இன்னும் சில மாதங்களில், கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா லேப்டாப் திட்டமும் வழங்கப்பட இருக்கின்றது.

நீங்களும் இன்னும் சில ஆண்டுகளில் படித்து முடித்து காலேஜ்க்கு செல்லும்போது, உங்களுக்கும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் லேப்டாப் கொடுப்பார்கள்.

பள்ளி, கல்லூரியில் மட்டுமல்ல, உயர்கல்வியை முடித்த பிறகும், உங்களுக்கு துணை நிற்க, உங்களுக்கு உதவுவதற்காகத்தான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த திட்டம், 'நான் முதல்வன்' திட்டம்.

இரண்டு நாளைக்கு முன்பு செய்திகளில், தொலைக்காட்சியில் பார்த்திருப்பீர்கள். இந்த ஆண்டு தமிழ்நாட்டில் இருந்து 155 மாணவர்கள் UPSC mains clear பண்ணியிருக்கிறார்கள். UPSC preliminary exam, mains, interview என்று ஒவ்வொரு stageலையும் 'நான் முதல்வன்' திட்டம் மூலமாக நம்முடைய அரசு ஊக்கத்தொகையைக் கொடுத்து கொண்டிருக்கிறது.

இந்தத் திட்டங்களை எல்லாம் நீங்கள் தெரிந்துக்கொள்ள வேண்டும். நல்ல முறையில் அதையெல்லாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

நாம் அத்தனைபேரும் Instagram, YouTube-ல எல்லாம் ரீல்ஸ் பார்க்கின்றோம், பார்ப்பீர்கள். ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகின்றேன். ரீல்ஸ் மட்டுமே வாழ்க்கை கிடையாது. அதில் முக்கால்வாசி பொய் என்பதால்தான், அதற்கு பேரே Reels.

Real-ஆ நீங்கள் வெற்றிபெற வேண்டும் என்றால், கல்வி தான் உங்களுக்கு என்றைக்குமே கை கொடுக்கும் என்பதை நீங்கள் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். கல்வியோடு சேர்த்து விளையாட்டிலும் ஆர்வம் செலுத்துங்கள்.

நீங்கள் கல்வியில் முன்னேறினால், உங்களுடைய குடும்பம் பொருளாதாரத்தில் நிச்சயம் முன்னேறும். உங்களுக்கே அந்த நம்பிக்கை வரும். உங்கள் குடும்பம் எல்லாம் முன்னேறும்போது, ஒட்டுமொத்தத் தமிழ்நாடும் முன்னேறும். அந்த முன்னேற்றத்தை உங்களுடைய கல்வியில் இருந்து தான் தொடங்க முடியும்.

உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய மிதிவண்டிகள், அது உங்களுடைய சைக்கிள், உங்களுடைய சொத்து, நீங்கள்தான் அதற்கு ஓனர்ஸ் இனிமேல், அதைப் பாதுகாப்பாக வைத்து பத்திரமாகப் பராமரிக்க வேண்டும்.

இங்கே பல மாணவச் செல்வங்கள் வந்திருக்கின்றீர்கள். பல ஆசிரியர்கள் வந்திருக்கின்றீர்கள். பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்களும் வந்திருக்கின்றார். அவரை வைத்துக் கொண்டு ஆசிரியர் பெருமக்களுக்கு ஒரு வேண்டுகோள். தயவு

செய்து பள்ளிக்கூடங்களில் PET periodஐ கடன் வாங்கி மற்ற periodஐ நடத்தாதீர்கள். முடிந்தால், உங்கள் periodஐ கடன் கொடுத்து, மாணவர்களை அதிகமாக விளையாட்டுத்துறையில் ஈடுபடுவதற்கு அவர்களுக்கு ஊக்கமளியுங்கள். படிப்பு எந்த அளவிற்கு முக்கியமோ, அதே அளவிற்கு மாணவச் செல்வங்களுடைய உடல் ஆரோக்கியமும் மிக, மிக முக்கியம்.

எனவே, இங்கு வந்திருக்கக்கூடிய சைக்கிள் பெற்ற மாணவர்களுக்கும், சிறந்த பள்ளிகளுக்கான விருதுகளைப் பெற்ற ஆசிரியர் பெருமக்களுக்கும், மீண்டும் என்னுடைய வாழ்த்துகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

நன்றி, வணக்கம்.

கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்கள் நினைவு நாள்

படமும்/செய்தியும்



கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களின் 89-ஆவது நினைவு நாளான தியாகத் திருநாளையொட்டி, தமிழ்நாடு அரசின் சார்பில் 18.11.2025 அன்று சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ.அன்பரசன், பெருநகரச் சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. ஏ.எம்.வி.பிரபாகர ராஜா, திரு. ஜே. எம்.அசன் மௌலானா, துணை மேயர் திரு. மு.மகேஷ்குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறைச் செயலாளர் திரு. வே.ராஜாராமன், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா.வைத்திநாதன், இ.ஆ.ப., இணை இயக்குநர் (ம.தொ) திரு. மு.மேகவர்ணம் மற்றும் பலர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

படமும்/செய்தியும்

ஓவியக் கலைஞர்களின் கலைப் படைப்புகளை விற்பனை செய்யும் ‘ஓவியச் சந்தை’ திட்டம் துவக்கம்

சென்னை, எழும்பூர், அரசு அருங்காட்சியக வளாகத்தில், 11.11.2025 அன்று மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு. பெ. சாமிநாதன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு. பி. கே. சேகர்பாபு ஆகியோர், கலை பண்பாட்டுத் துறை சார்பில் ஓவியக் கலைஞர்களின் கலைப் படைப்புகளை விற்பனை செய்யும் ‘ஓவியச் சந்தை’ திட்டத்தினைத் தொடங்கி வைத்தார்கள். இந்நிகழ்வின்போது, பெருநகரச் சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் திரு. இ.பரந்தாமன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இ.ஆ.ப., கலை பண்பாட்டுத் துறை இயக்குநர் திருமதி எஸ். வளர்மதி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் பிறந்தநாள்

படமும்/செய்தியும்

பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் 137-ஆவது பிறந்தநாளையொட்டி, தமிழ்நாடு அரசின் சார்பில் 14.11.2025 அன்று சென்னை கிண்டி கத்திப்பாரா சந்திப்பில் அமைந்துள்ள, பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் திரு.டி.ஆர் பாலு, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.ஜே.எம். அசன் மௌலானா. திரு. எஸ். ஆர். ராஜா, துணை மேயர் திரு. மு.மகேஷ்குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறைச் செயலாளர் (பொறுப்பு) திருமதி வே.அமுதவல்லி இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா.வைத்திநாதன், இ.ஆ.ப. செய்தி மக்கள் தொடர்புத் துறை கூடுதல் இயக்குநர் (செய்தி) திரு. ச.செல்வராஜ் உள்ளிட்டோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

மக்கள் போற்றிய மகத்தானத் திட்டங்கள்

அன்று...

"ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய்க்கு வழங்கும் திட்டம்"

அனைத்து மக்களுக்கும் குறைந்த விலையில் தரமான அரிசி வழங்கப்பட வேண்டும் என்ற குறிக்கோளைச் செயல்படுத்திடும் வகையில், நமது நாட்டிலேயே வேறு எங்கும் இல்லாத குறைந்த விலையில் ஏழை, எளிய, நடுத்தரக் குடும்பங்கள் பயனடையும் வகையில், பொது விநியோகத் திட்டத்தின் கீழ் நியாயவிலைக் கடைகளில் விற்பனை செய்யப்படும் அரிசியின் விலையைக் குறைக்கும் நோக்கத்தில் "ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய்க்கு வழங்கும் திட்டம்" முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் சென்னை, தேனாம்பேட்டை அமுதம் சில்லறை அங்காடியில் 03.06.2006 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

இன்று...

"முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்"

அரசு வழங்கும் பல்வேறு சேவைகளை மக்களின் வீடுதேடிச் சென்றடையச் செய்யும் தமிழ்நாடு அரசின் உயரிய நோக்கின் அடுத்தக் கட்டமாக, மாநிலத்தில் உள்ள வயது முதிர்ந்தோர், மாற்றுத்திறனாளி குடும்ப அட்டைதாரர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, அவர்களின் இல்லத்திற்கே சென்று அரிசி, சர்க்கரை உள்ளிட்ட ரேசன் பொருட்களை விநியோகம் செய்யும் "முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்" மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களால் 12.08.2025 அன்று சென்னை, தண்டையார் பேட்டை, கோபால் நகர், அன்னை சத்யா நகரில், வயது முதிர்ந்தோர், மாற்றுத்திறனாளிகள் இல்லங்களுக்கு நேரில் சென்று ரேசன் பொருட்களை வழங்கித் தொடங்கி வைக்கப்பட்டது.

தெரிந்துகொள்வோம்

ஸ்டார்ட் அப் நிறுவனங்களை அதிக எண்ணிக்கையில் உருவாக்கும் TANSEED நிதியுதவித் திட்டம்

StartupTN
வாழ்க தமிழ்!
வளர்க தமிழ்நாடு!

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பின் ஸ்டார்ட்-அப் நிறுவனங்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து, அதனை ஊக்குவிக்க தலைமைச் செயல் அலுவலர் பதவியுடன் 70க்கும் மேற்பட்ட பணியாளர்களை நியமித்து ஸ்டார்ட்-அப் TN உருவாக்கப்பட்டது.
- ஸ்டார்ட்-அப் நிறுவனங்களை அதிக எண்ணிக்கையில் உருவாக்க TANSEED நிதியுதவித் திட்டம் தொடங்கப்பட்டது.
- இந்தத் திட்டத்தின்கீழ், இதுவரை கடந்த 4 ஆண்டுகளில் 43 SC / ST Start-Up நிறுவனங்கள் உட்பட 212 Start-Up நிறுவனங்களில், ரூ.79 கோடியே 49 இலட்சம் தமிழ்நாடு அரசு முதலீடு செய்துள்ளது.
- அரசு முதலீட்டுடன் தொடங்கப்பட்ட இந்த நிறுவனங்களில் 68 நிறுவனங்கள் ரூ.554 கோடியே 49 இலட்சம் மதிப்பில் வெளி முதலீட்டாளர்களிடம் இருந்து முதலீடுகளைப் பெற்றுள்ளது, இதன் மூலம் 1,000 க்கும் மேற்பட்டோர் வேலைவாய்ப்பைப் பெற்றுள்ளனர்.
- தனியார் முதலீட்டாளர்களையும் ஸ்டார்ட்-அப் நிறுவனங்களை இணைக்கும் TANFUND தளத்தின் மூலம் ரூ.128 கோடியே 84 இலட்சம் தனியார் முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளது.
- Start-Up TN மூலம் நவீன வடிவமைப்பு உதவி மையம் - டிசைன் ஸ்டூடியோ கல்வி நிறுவனங்களில் - Pre Incubation Centers புத்தொழில் நிறுவனங்களுக்கு வழிகாட்ட - Mentor TN தளம் தனியார் முதலீட்டாளர்கள், ஸ்டார்ட்-அப் நிறுவனங்களை இணைக்கும்- TAN FUND தளம் புத்தொழில் நிறுவனங்களை அறிமுகப்படுத்தும் Launch pad நிகழ்ச்சிகள் SC/ST தொழில் முனைவோர்களை ஊக்குவிக்க பெரியார் சமூகநீதி தொழில் வளர் மையம், Space Tech ஸ்டார்ட்-அப் நிறுவனங்களுக்கு ரூ.10 கோடி நிதி உதவி ரூ.2 கோடி நிதி ஒதுக்கீட்டில் - கிராமந்தோறும் புத்தொழில் மையம். 11 நகரங்களில் வட்டாரப் புத்தொழில் மையங்கள் எனப் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளது.
- தமிழ்நாட்டில் ஸ்டார்ட்-அப் நிறுவனங்களுக்கு ஏற்றச் சூழலை உருவாக்கியதால் 2021இல் 2032ஆக இருந்த ஸ்டார்ட்-அப் நிறுவனங்களின் பதிவு தற்போது 12,171ஆக உயர்ந்துள்ளது. இதில் 6,063 நிறுவனங்களில் பெண்கள் நிறுவனர்களாக உள்ளனர்.
- கடந்த ஆட்சியில் ஸ்டார்ட்-அப் தர வரிசைப் பட்டியலில் கடைசியில் இருந்த தமிழ்நாடு 2021 இல் 3ஆம் இடம் ஆன லீடர் விருதினைப் பெற்றது. 2022ஆம் ஆண்டு சிறந்த செயல்பாட்டாளர் விருதினைப் பெற்று முதல் இடத்தைப் பெற்றது.
- கடந்த 4½ ஆண்டுகளில் 13 மாவட்டங்களில் 697.81 ஏக்கர் பரப்பளவில் ரூ.386 கோடியே 76 இலட்சம் மதிப்பில் 17 புதிய தொழிற்பேட்டைகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன. 14 மாவட்டங்களில் 543.31 ஏக்கர் பரப்பளவில் ரூ.419 கோடியே 58 இலட்சம் மதிப்பில் 16 புதிய தொழிற்பேட்டைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன.
- MSME துறையின் வெற்றிகரமானத் திட்டங்களால், கடந்த 4½ ஆண்டுகளில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கு ரூ.2 ஆயிரத்து 133 கோடியே 26 இலட்சம் மானியத்துடன், ரூ.5 ஆயிரத்து 490 கோடியே 80 இலட்சம் வங்கிக் கடனுதவி வழங்கப்பட்டு, 66,018 இளைஞர்கள் தொழில்முனைவோர்களாக உருவாக்கப்பட்டுள்ளனர்.

டிசம்பர் 06: அண்ணல் அம்பேத்கர் அவர்கள் நினைவு நாள்

“நம்மைப் பாதுகாக்கும் புரட்சியாளர்”

பெரும்பாலான மக்களின் உரிமைகளையும்-கண்ணியத்தையும் மறுத்த, இந்தச் சமுதாயத்தில் வேரூன்றிய சமூக அநீதிகளுக்கு எதிராக நம்மிலிருந்து உருவாகி எதிர்த்த புரட்சியாளர் அம்பேத்கருக்குப் புரட்சி வணக்கம்!

கல்வியின் மகத்துவத்தை உணர்த்தி, தனது பேரறிவால் சமத்துவத்துக்கும் நீதிக்கும் பாதை அமைத்தவர் அவர்!

தனது சிந்தனைகளால் நமக்கு உரமூட்டி-நம்மைப் பாதுகாக்கும் புரட்சியாளர் அம்பேத்கர் நம்முடைய வாளாகவும், கேடயமாகவும் என்றென்றும் வாழ்கிறார்! அண்ணலின் அறிவொளியில் சமத்துவச் சமுதாயத்துக்கான பாதையில் நடைபோடுவோம்!

— மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்

தமிழ் வளர்த்த இத்தாலியப் பேரறிஞர் வீரமாமுனிவர் அவர்கள் பிறந்தநாள்

படமும்/செய்தியும்

தமிழ் வளர்த்த இத்தாலியப் பேரறிஞர் வீரமாமுனிவர் அவர்களின் பிறந்தநாளையொட்டி, தமிழ்நாடு அரசின் சார்பில் 08.11.2025 அன்று, சென்னை காமராஜர் சாலை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு. பி.கே. சேகர்பாபு, பெருநகரச் சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் திரு. த.வேலு, துணை மேயர் திரு. மு.மகேஷ் குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறைச் செயலாளர்(பொறுப்பு) திருமதி வே.அமுதவல்லி, இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு.இரா.வைத்திநாதன், இ.ஆ.ப., தமிழறிஞர்கள், அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

புதுடெல்லியில்

இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சி - 2025

புதுடெல்லியில் நடைபெறும் 44-ஆவது இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சி-2025, பிரகதி மைதானத்தில் உள்ள "Amphee" கலையரங்கில் 15.11.2025 அன்று நடைபெற்ற "தமிழ்நாடு நாள் விழா"வை மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் குத்துவிளக்கேற்றித் தொடங்கி வைத்தார்கள்.

புதுடெல்லியில் உள்ள பிரகதி மைதானத்தில், ஆண்டுதோறும் இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியானது நவம்பர் 14 ஆம் தேதி முதல் 27 ஆம் தேதி வரை 14 நாட்கள் நடைபெற்று வருகின்றன. இந்த ஆண்டு (2025) நடைபெறும் 44-ஆவது இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியினை 14.11.2025 (வெள்ளிக்கிழமை) அன்று மாண்புமிகு ஒன்றிய வணிகம் மற்றும் தொழில் அமைச்சக இணையமைச்சர் திரு. ஜித்தின் பிரசாதா அவர்கள் தொடங்கி வைத்தார்கள். இப்பொருட்காட்சியில் இந்தியாவிலுள்ள பல்வேறு மாநிலங்கள், இந்திய யூனியன் பிரதேசங்கள், அரசு சார்பு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், வெளிநாட்டு நிறுவனங்கள் பங்கேற்று தங்களது வளர்ச்சித் திட்டங்கள், சாதனைகள், கொள்கைகள் போன்றவற்றைக் காட்சிப்படுத்தியும், வெளிநாட்டு நிறுவனங்கள் தங்களது நாட்டில் தயாரிக்கப்படும் முக்கியப் பொருட்களைச் சந்தைப்படுத்தியும் வருகின்றன.

நடப்பாண்டில், இப்பொருட்காட்சிக்கான கருப்பொருள் "Ek Bharat, Shreshtha Bharat" (ஒரே பாரதம், உன்னத பாரதம்) ஆகும். "ஒரே பாரதம், உன்னத பாரதம்" என்பது இந்தியாவின் தேசிய ஒற்றுமையையும், பல்வேறு பண்பாடுகளை

ஒன்றிணைக்கும் நோக்கத்தையும் கொண்ட ஒரு திட்டமாகும்.

இக்கண்காட்சியில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, தோட்டக்கலைத் துறை, தொழில் துறை, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை, தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை, சுற்றுலாத்துறை, பூம்புகார், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், கோ-ஆப்டெக்ஸ், தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் செய்தி மக்கள் தொடர்புத் துறை ஆகிய துறைகளின் சார்பில் அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள அரங்கில் தமிழ்நாடு அரசின் மகத்தான திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்த புகைப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தக் கண்காட்சியில் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் அவர்கள் பத்திரிகையாளர்கள் சந்திப்பில் தெரிவித்ததாவது,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் படியும் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படியும் தமிழ்நாடு அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் பல்வேறு துறைகளை ஒருங்கிணைத்துப் பொதுமக்கள் பார்வைக்காகக் கைத்தறித் துறை, தமிழ்நாடு அரசு தொழில் வளர்ச்சிக் கழகம், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை மூலமாக உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் குறித்தும் வேளாண்மைத் துறை சார்பில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களைச் சந்தைப்படுத்துதல் குறித்த அரங்குகள், இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சி ஆகியவை இடம் பெற்றிருக்கின்றன. தமிழ்நாடு நாள் விழாவில் தமிழ்நாட்டின் பாரம்பரிய கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படவுள்ளன. இந்தப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியில் கடந்த ஆண்டு தமிழ்நாடு அரங்கிற்குச் சிறப்புப் பரிசு வழங்கப்பட்டது போல் இந்த ஆண்டும் சிறப்புப் பரிசு கிடைக்கும் என்ற வகையில் இந்த அரங்கம் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் தேசிய அளவில் சந்தைப்படுத்துவதற்கு இந்தப் பன்னாட்டுப் பொருட்காட்சி ஒரு நல்வாய்ப்பாக அமைந்துள்ளது என்று தெரிவித்தார்.

மேலும், இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியில் பங்கேற்கும் அனைத்து மாநிலங்களும், தங்களது மாநில நாள் விழாவினைச் சிறப்புடன் கொண்டாடி வருகின்றனர். அந்த வகையில் தமிழ்நாடு நாள் விழா 15.11.2025 அன்று பிரகதி மைதானத்தில் உள்ள "Amphee" கலையரங்கத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

வெற்றிக் கதை

நாகப்பட்டினம் மாவட்டம்

ஏழை, எளிய மக்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்த “கலைஞரின் கனவு இல்லம் திட்டம்” தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நெஞ்சம் நிறைந்த நன்றி...

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் அனைத்து வளர்ச்சித் திட்டப்பணிகளைத் தொடர்ந்து கண்காணித்துச் செயல்படுத்திட பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து, கடைக்கோடி மக்களின் கனவுகளைத் தாங்கி அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி என்ற இலட்சியத்திற்கு இணங்க மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து மக்களைத்தேடி அனைத்தும் சேர வேண்டும் என்ற நோக்கில் உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டம், மக்களைத்தேடி மருத்துவம், பெண்களுக்கு இலவச பேருந்துப் பயணம், வீட்டுமனைப்பட்டா போன்ற பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள். சொந்த இடம் இருந்தும் வீடு இல்லாத சாதாரண மக்களுக்கு வீடு வழங்கும் நோக்கில் கலைஞரின் கனவு இல்லம் திட்டம் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் தகுதியான பயனாளிகளைத் தேர்வு செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, வீடு கட்டித்தரப்படுகிறது. இத்திட்டத்தின் மூலமாக ஆயிரக்கணக்கான மக்கள் வீடு பெற்றுள்ளனர். மேலும், இத்திட்டத்தில் விண்ணப்பித்துப் பயன்பெறுவதற்கு ஊரக வளர்ச்சித் துறை சார்பில் சிறப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன் அடிப்படையில், நாகப்பட்டினம் மாவட்டத்தில் ஊரக வளர்ச்சித் துறை சார்பில் கலைஞரின் கனவு இல்லம் திட்டம் மூலம் 2,500 வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாவட்டத்தில் அனைத்துப் பகுதிகளுக்கும் இத்திட்டம் சென்றடைந்திடும் வகையில் ஒன்றிய அளவில் செயல்படுத்தப்படுகிறது. அதன்படி, நாகப்பட்டினம் ஒன்றியத்தில் 400 வீடுகள், கீழையூர் ஒன்றியத்தில் 430 வீடுகள், கீழ்வேளூர் ஒன்றியத்தில் 410 வீடுகள், திருமருகல் ஒன்றியத்தில் 400 வீடுகள், தலைஞாயிறு ஒன்றியத்தில் 450 வீடுகள், வேதாரண்யம் ஒன்றியத்தில் 410 வீடுகள் வழங்கப்பட்டன. வீடுகள் கட்டும் பணி தொடங்கப்பட்டு இதுவரை 699 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுப் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. மற்ற வீடுகள் கட்டும் பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. விரைவில் பணி முடிக்கப்பட்டுப் பயனாளிகளுக்கு வழங்கப்பட உள்ளது.

திருமதி பவானி வெங்கட கிருஷ்ணன்

கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தில் பயனடைந்த நாகப்பட்டினம் மாவட்டம், சிக்கல் ஊராட்சியைச் சேர்ந்த பயனாளி திருமதி பவானி வெங்கட கிருஷ்ணன் அவர்கள் நம்மிடம் கூறுகையில்...

நாகப்பட்டினம் மாவட்ட ஊரக வளர்ச்சித் துறை மூலம் செயல்படுத்தப்படும் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின்கீழ்ச் சிக்கல் ஊராட்சியைச் சேர்ந்த திருமதி பவானி வெங்கட கிருஷ்ணன் என்பவர் கூறுகையில், நானும் எனது கணவரும் விவசாயத் தினக்கூலி வேலை செய்து வருகிறோம். எங்களுக்கு சொந்தமாக இடம் இருந்தும் வீடு கட்டுவதற்கு வசதியில்லாமல் குடிசையில் வாழ்ந்து வந்தோம். தற்போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தில் எங்களின் வீடு கட்டும் கனவு பலித்து வீடுகட்டி தற்போது மகிழ்ச்சியாக உள்ளோம்.எங்களைப்போன்றஏழை, எளிய மக்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்துள்ள இத்திட்டத்தினைத் தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எங்களது நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தில் பயனடைந்த நாகப்பட்டினம் மாவட்டம், திருப்புகலூர் ஊராட்சியைச் சேர்ந்த திருமதி நளினி பழனி அவர்கள் நம்மிடம் தெரிவித்ததாவது...

நாகப்பட்டினம் மாவட்டம், திருமருகல் ஊராட்சி ஒன்றியம், திருப்புகலூர் ஊராட்சியைச் சேர்ந்த திருமதி நளினி பழனி என்பவர் கூறுகையில், நான் விவசாயக் கூலி வேலை செய்தும், எனது கணவர் தினக்கூலி வேலை செய்தும் வருகிறோம். எங்களுக்கு 5ஆம் வகுப்பு படிக்கும் பெண் குழந்தை உள்ளது.

திருமதி நளினி பழனி

நாங்கள் சம்பாதிக்கும் வருமானம் அன்றாடச் செலவிற்கே சரியாகிறது. இந்நிலையில் எங்களுக்கு வீடுகட்ட சொந்த இடமிருந்தும் வீடுகட்ட பணம் இல்லாமல் வாடகைக்கு இருந்து வந்தோம். தற்போது எங்கள் ஊராட்சியில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தில் தேர்வாகி தற்போது வீடுகட்டி வருகிறோம். விரைவில் எங்களுக்குச் சொந்த வீடு கிடைத்துவிடும். இதன் மூலம் எங்களுடைய நீண்டநாள் கனவு நிறைவேறியுள்ளது. இத்திட்டம் இல்லாவிட்டால் எங்களைப் போன்ற ஏழைகளுக்குச் சொந்த வீடு கட்டுவது என்பது கனவாகவே இருந்து இருக்கும். மேலும் வாடகை செலுத்துவது மிச்சப்படுவதால் எங்களது குழந்தையின் சேமிப்பு, படிப்பு ஆகியவற்றிற்குப் பயன்படுகிறது. எங்களைப் போன்ற சொந்த இடமிருந்தும் வீடு இல்லாமல் தவிக்கும் மக்களுக்குக் கலைஞரின் கனவு இல்லத் திட்டத்தினை அளித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எங்களது குடும்பம் சார்பில் நிறைந்த மனதுடன் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

தொகுப்பு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,

நாகப்பட்டினம் மாவட்டம்.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்

இந்தச் சிறப்பான திட்டத்தை நடைமுறைப்படுத்திய எங்க தமிழ்நாடு முதல்வருக்கு எங்கள் பள்ளி மாணவ, மாணவியர்கள் சார்பாக நன்றி...

சென்னை, பெரம்பூர், மடுமா நகர், சென்னை நடுநிலைப் பள்ளியில் ஐந்தாம் வகுப்பு 'A' பிரிவில் பயின்று வரும் செல்வி D. அத்விதா அவர்கள் "முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்" குறித்துத் தமது கைப்பட எழுதிய நன்றி மடல்...



காலை உணவுத்
திட்டம்

என் பெயர் அத்விதா. நான் ஐந்தாம் வகுப்பு சென்னை நடுநிலைப் பள்ளியில் படிக்கிறேன். என்னுடைய அப்பாவும், அம்மாவும் வேலைக்குச் செல்வதால், நான் காலி மட்டுமே குடித்து விட்டுப் பள்ளிக்கு வருவேன். முதல்வரின் காலை உணவுத் திட்டத்தின் மூலம் நான் தினமும் காலை சிற்றுண்டி சாப்பிடுகிறேன். தினமும் வெவ்வேறு வகையான சிற்றுண்டி வழங்கப்படுகிறது. என்னைப் போல் என் பள்ளியில் பயிலும் ஏராளமான மாணவர்கள் காலை உணவை உவகையுடன் விரும்பி சாப்பிடுகிறார்கள். இதனால் எங்களுக்கு காலையில் ஆசிரியர் நடத்தும் பாடங்களை புரிந்துகொள்ளும் கற்க மிகவும் எளியதாக உள்ளது. தினமும் வகை, வகையான காலை சிற்றுண்டி உண்பதற்கு வீட்டிலிருந்து விரைவில் வந்து விடுகிறேன். இதனால் பள்ளிக்கு விடுப்பில்லாமல் வருகிறேன்.

என் அம்மா செய்யும் எப்புமா பிடிக்காது. ஆனால் காலை உணவுத் திட்டத்தில் போப்பமும் எப்புமாவில் கேரட், பீன்ஸ், பட்டாணி போட்டு செய்வதால் மிகவும் சுவையாக உள்ளது. மேலும் காலை உணவுத் திட்டத்தில் வழங்கப்படும் சாம்பாரில் எனக்கு பிடித்த முள்ளங்கி, முருங்கை, மாங்காய் வருவதைக் கிழங்கு இருப்பதால் கேரட் போன்ற காய்கறிகள் சாம்பார் மிகவும் சுவையாக இருக்கிறது. முதல் அமைச்சரின் காலை உணவுத் திட்டதினால் எங்கள் பள்ளியில் 1 முதல் 5 வகுப்பு வரை பயிலும் மாணவர்களை மிகவும் பயனடைகிறார்கள் இந்த சிறப்பான திட்டத்தை நடைமுறைபடுத்திய எங்க தமிழக முதல்வருக்கு எங்கள் பள்ளி மாணவர்கள் சார்பாக நன்றியை தெரிவித்து கொள்கிறேன்!

நன்றி உண்மையுள்ள
தி. அத்விதா

D. ADVITHA
V 'A'
CMS MADUMANAGAR
PERAMBUR, CHENNAI.
CELL NO: 7305256060

தலைமையாசிரியர்
சென்னை நடுநிலைப்பள்ளி,
மடுமா நகர்,
பெரம்பூர், சென்னை-600 011

சென்னை, பெரம்பூர், மடுமா நகர், சென்னை நடுநிலைப் பள்ளியில் ஐந்தாம் வகுப்பு 'A' பிரிவில் பயின்று வரும் செல்வன் A. முஹம்மது உமர் அவர்கள் "முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்" குறித்துத் தமது கைப்பட எழுதிய நன்றி மடல்...

Chief Minister Breakfast Scheme

My name is Mohammad umar. I am studying in V std My parents are going for jobs very early in the morning so I drink coffe and come to school everyday. Our chief Ministers Morning Breakfast Scheme helps me to eat my food everyday. Daily they are giving Variety food. Very tasty breakfast is served daily. Like me all the students in my school eat breakfast daily It makes us brisk in the morning and helps us to learn our lessons with concentration To eat a variety of tasty breakfast everyfast I come to School Without taking leave I come to School

Chief Minister's Breakfast Scheme

Very early I don't take leave. I don't like upma prepared by my mom But the rava kichadi served in morning breakfast scheme was very tasty with carrot, beans and peas. I like Sambar very much It was prepared with radish, drumstick, Mango, potato and carrot which makes it tastes Students from I to V are benifitted by our chief Minister's morning breakfast Scheme, ON behalf of our School Students, I give thanks to our Chief Minister for the implementation of this best Scheme in our School.

yours faithfully
A.Muhammed umar

A. MUHAMMED UMAR
V 'A'
CMS MADUMANAGAR
PERAMBUR, CHENNAI.11
CELL NO: 7299238899

தலைமையாசிரியர்
சென்னை நடுநிலைப்பள்ளி
மடுமா நகர்,
பெரம்பூர், சென்னை-600 011

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

பயிற்சி வினா - விடைத்தாள்

1. பூமியின் மேற்பரப்பால் சூரிய கதிர்வீச்சின் ஒரு பகுதி மீண்டும் பிரதிபலிக்கப்படுவது இவ்வாறு அழைக்கப்படுகிறது.

(A) ஆல்பிடோ (B) அலை (C) காலநிலை (D) வானிலையியல்

2. மான்டாக்ஸ் சோதனை – நோயைக் கண்டுபிடிக்க உதவுகிறது.

(A) மலேரியா (B) காசநோய் (C) புற்றுநோய் (D) டிப்தீரியா

3. யுட்ரோபிகேஷனினால் மீனின் இறப்புக்குக் காரணமாக இருப்பது

(A) ஆக்ஸிஜன் அளவு அதிகரிப்பது (B) கார்பன்-டை-ஆக்சைடு அளவு அதிகரிப்பது

(C) பாசிகள் எண்ணிக்கை குறைவது (D) ஆக்ஸிஜன் அளவு குறைவது

4. கீழ்க்காணும் நிகழ்வுகளில் எது நிலைமம்?

(A) மெதுவாக நகர்ந்து சென்று நிற்கக் கூடிய ஒரு தொடர்வண்டியில் உள்ள பயணி

(B) நிலையான வேகத்தில் செல்லும் காரின் ஓட்டுநர்

(C) உயர எழும்பி பறக்கும் விமானத்தின் விமானி

(D) ரங்க ராட்டினத்தில் சுற்றும் ஒரு குழந்தை

5. அறிவியல் மனநிலை (scientific temper) பற்றிக் கூறும் சட்டப்பிரிவு

(A) சட்டப்பிரிவு 35 A (B) சட்டப்பிரிவு 51 A (C) சட்டப்பிரிவு 32 (D) சட்டப்பிரிவு 14 A

6. தவறான இணையைக் கண்டறிக:

(1) கபில் கபூர்	–	இலக்கியமும், கல்வியும்
(2) தீபக் தார்	–	அறிவியலும், பொறியியலும்
(3) லக்ஷ்மன் சிங்	–	இலக்கியம்
(4) வடிவேல் கோபால்	–	இசை

(A) (1) மற்றும் (4) மட்டும் தவறானது (B) (3) மற்றும் (4) மட்டும் தவறானது

(C) (1) மற்றும் (2) மட்டும் தவறானது (D) (2) மற்றும் (3) மட்டும் தவறானது

7. 2014ஆம் ஆண்டு தேசிய இளைஞர் கொள்கையின்படி, இளைஞர்களின் எந்த வயதுப் பிரிவு கருத்தில் கொள்ளப்படுகிறது?

(A) 13-29 வயதுப் பிரிவு (B) 15-30 வயதுப் பிரிவு (C) 13-35 வயதுப் பிரிவு (D) 15-29 வயதுப் பிரிவு

8. ஊழலை எதிர்த்துப் போராட பின்வரும் நடவடிக்கைகளில் இந்திய அரசால் எடுக்கப்பட்டது எது / எவை?

(I) நேரடிப் பணப் பரிமாற்றம் (II) பொது கொள்முதலில் இ-டெண்டர்

(III) குரூப் 'C' பதவிக்கான ஆட்சேர்ப்புக்கான நேர்காணலை நிறுத்தியது

(A) (I) மட்டும்
(B) (I) மற்றும் (II) மட்டும்
(C) (I) மற்றும் (III) மட்டும்
(D) (I), (II) மற்றும் (III) அனைத்தும்

9. கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கருதுக, சரியான விடையைத் தேர்ந்தெடுக்க:

(i) G20- நாடுகளின் அரசியலமைப்பானது ஓர் முறையான ஆவணமாகும்.

(ii) G20- நாடுகளின் நிருவாகமானது ஒருமித்த கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டது.

(iii) G20- இணக்கம் என்ற கோட்பாடானது உள்ளடக்கியிருப்பதும், பிரதிநிதித்துவமும் அதன் தலைமைக்கான அடிப்படைகளாகும்.

(vi) G20 ஒற்றுமைக்கே மரியாதை இறையாண்மைக்கு அல்ல.

(A) (iv) மட்டும் சரியானது
(B) (ii) மற்றும் (iii) மட்டும் சரியானது
(C) (i) மற்றும் (ii) மட்டும் சரியானது
(D) (iii) மட்டும் சரியானது

10. கூற்று மற்றும் காரணம் வகை :

கூற்று [A] : 2024 கேல் ரத்னா விருது கிரிக்கெட் வீரர் முகமது சமிக் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

காரணம் (R) : இந்த விருதினை மத்திய இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் அனுராக் தாகூர் வழங்கினார்.

(A) [A] தவறு [R] சரி
(B) [A] மற்றும் (R) இரண்டும் சரி
(C) [A] சரி, ஆனால் (R) தவறு
(D) [A] மற்றும் [R] சரியே, ஆனால் [R], [A] க்கு சரியான விளக்கம் இல்லை

11. கூற்று [A] : கரிம வேளாண்மையில் சூழல் பாதுகாக்கப்படுவதால் பெருகிய முறையில் பிரபலமடைந்து வருகிறது.

காரணம் [R] : சுற்றுச்சூழல் அடிப்படையிலான பூச்சிக் கட்டுப்பாடுகள் மற்றும் விலங்குக் கழிவுகள் மற்றும் நைட்ரஜனை நிலைநிறுத்தும் பயிர்களில் இருந்து பெறப்பட்ட உயிரியல் உரங்களைப் பயன்படுத்தும் இயற்கை வேளாண்மை அடிப்படையிலான விவசாய முறை.

(A) [A] உண்மை, ஆனால் (R) தவறானது
(B) [A] மற்றும் (R) இரண்டும் உண்மை மற்றும் [R] என்பது [A] இன் சரியான விளக்கம்
(C) [A] தவறானது, [R] உண்மை
(D) (A) மற்றும் [R] இரண்டும் உண்மை தான், ஆனால் [A] என்பதற்கு [R] சரியான விளக்கம் இல்லை.

12. 2024 ஆம் ஆண்டிற்கான பத்மஸ்ரீ விருது பெற்ற முனைவர் நாராயண் சக்ரபர்த்தி பற்றிய தவறான கூற்றைக் கண்டுபிடிக்கவும்.

(A) அவர் மேற்கு வங்காளத்தைச் சேர்ந்தவர்
(B) அவர் சுற்றுச்சூழல் சுகாதாரம் மற்றும் பாதுகாப்புத் துறையில் குறிப்பிடத்தக்க பங்களித்துள்ளார்
(C) அவரது ஆராய்ச்சி ஆர்சனிக் நச்சுத்தன்மையின் தீர்வு மற்றும் சிகிச்சையை முதன்மையாகக் கொண்டது.
(D) அவருக்கு 2024 ஆம் ஆண்டிற்கான பத்மஸ்ரீ விருது மருத்துவத் துறையில் வழங்கப்பட்டது.

13. இந்தியப் புவியியல் ஆய்வு மையம், மேகாலயாவில் எந்த மலையில் பழமையான புதைபடிவத்தைக் கண்டறிந்தது?

(A) தெற்கு கேரோ மலைகள்

(B) கிழக்குக் காசி மலைகள்

(C) மேற்குக் காசி மலைகள்

(D) ஜைன்டியா மலைகள்

14. கழிவுப்பொருட்களின் வெப்ப அழிவிலிருந்து உருவாகும் தூசி துகள்களை _____ மூலம் காற்றில் கலப்பதைத் தடுக்கலாம்.

(A) குளிர்சாதனம் (B) உயிர் உலை

(C) சுவாசக் கருவிகள் (D) மின்நிலை விரைவூக்கி

15. பேரழிவுகளை அவற்றின் தொடர்புடைய பண்புகளுடன் சரியாகப் பொருத்தவும்.

(a) எரிமலை வெடிப்பு	–	1. கடுமையான காற்று
(b) சூறாவளி	–	2. கடலடி நிலநடுக்கம் / பிளவு
(c) ஆழிப் பேரலை	–	3. பாலைவனமாக்கல்
(d) வறட்சி	–	4. பாறைக் குழம்பு

	(a)	(b)	(c)	(d)
(A)	4	1	2	3
(B)	3	2	1	4
(C)	3	1	2	4
(D)	2	3	1	4

16. சரளைமண் பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது சரியானது?

(i) இந்த வார்த்தையானது கிரேக்க மொழியில் இருந்து வந்தது.

(ii) இதில் இரும்பு மற்றும் அலுமினியம் சக்தி அதிகமாக உள்ளது.

(iii) இதில் நைட்ரஜன், பொட்டாசியம் மற்றும் சுண்ணாம்பு குறைவாக உள்ளது.

(A) (i) மட்டும்

(B) (i) மற்றும் (iii) மட்டும்

(C) (ii) மற்றும் (iii) மட்டும்

(D) (i) மற்றும் (ii) மட்டும்

17. பின்வரும் இந்திய நதிகளுள் அதிக ஆற்றுப்படுகையைக் கொண்டது.

(A) கோதாவரி (B) காவேரி

(C) மகாநதி (D) கிருஷ்ணா

18. நார்வெஸ்டர், 50 செ.மீ மழைப்பொழிவை ---------இடத்தில் தருகிறது.

(A) அசாம் (B) ஒடிசா

(C) மேற்கு வங்காளம் (D) கர்நாடகம்

19. கீழ்க்கண்டவற்றுள் எவை சரியாகப் பொருந்தியுள்ளன:

இனம்		மாநிலம்
(1) லீம்போ அல்லது லிம்பு	–	சிக்கீம்
(2) கர்பி	–	இமாச்சலப் பிரதேசம்
(3) தோங்காரியா	–	ஒடியா
(4) போண்டா	–	தமிழ்நாடு

(A) (1) மற்றும் (3) மட்டும் (B) (2) மற்றும் (4) மட்டும்

(C) (1), (3) மற்றும் (4) மட்டும் (D) (1), (2), (3) மற்றும் (4)

20. தாக்கினி இலக்கியம் குதுப் ஷாகி சுல்தான் ----------ஆல் ஆதரிக்கப்பட்டது.

(A) கோல்கொண்டா (B) பிஜப்பூர்

(C) அகமது நகர் (D) பிடார்

21. சரியான விடையைத் தேர்ந்தெடு:

கூற்று [A] : பாமன் ஷா மிகச் சரியாகத் தாக்குதல் தொடுத்து வாரங்கல் மற்றும் ரெட்டி அரசுகளான ராஜமுந்திரி, கொண்டவீடு ஆகியன மீது ஆதிக்கம் செலுத்தி ஆண்டுதோறும் திறை செலுத்திவைத்தார்.

காரணம் [R] : இது அடிக்கடி போர்கள் ஏற்பட வழி வகுத்தது.

(A) கூற்று [A] சரி. காரணம் [R] கூற்று [A] விற்கு சரியான விளக்கமன்று.

(B) கூற்று [A] சரி: காரணம் [R] தவறு.

(C) கூற்று (A)-வும் காரணம் (R)-ம் தவறு.

(D) கூற்று [A] சரி, காரணம் [R], கூற்று [A]-ன் சரியான விளக்கமாகும்.

22. மராட்டியப் பேரரசின் இரண்டாவது நிறுவனர்

(A) பாஜிராவ் (B) பாலாஜி பாஜிராவ்

(C) பாலாஜி விஸ்வநாத் (D) மாதவ்ராவ்

23. அக்பரின் படையெடுப்பு வெற்றிகளைக் காலவரிசைப்படுத்துக.

(1) காஷ்மீர் (2) காபுல்

(3) கந்தஹர் (4) அஹமத்நகர்

(A) (1), (3), (2), (4) (B) (2), (1), (3), (4)

(C) (1), (3), (4), (2) (D) (3), (2), (4), (1)

24. சுல்தானியர்களின் ஆட்சியில், பிரதம மந்திரி வாசிர் என்று அழைக்கப்பட்டார்.

(i) திவானி-இ-விசாராத் என்றழைக்கப்பட்ட நிதித் துறைக்கு அவர்தான் தலைவராகச் செயல்பட்டார்.

(ii) துறையிலுள்ள வரவு செலவுக் கணக்குகளை மேற்பார்வையிடும் இடத்திலிருந்தார்.

மேற்கூறிய கூற்றுகளில் எவை சரியானவை?

(A) (i) (B) (ii)

(C) (i) மற்றும் (ii) (D) மேற்கூறியவற்றில் எதுவும் இல்லை

25. கீழ்க்கண்டவற்றுள் சரியாகப் பொருந்தியதைத் தேர்வு செய்க.

(1) ஆரிய பட்டர்	–	ஆரிய பாட்டியம்
(2) வராஹமிகிரர்	–	ஹாஸ் யாயு வேதா
(3) பிரம்மகுப்தர்	–	பிருகத் சம்ஹிதா
(4) வாக்பாட்டா	–	அஷ்டாங்க சங்கரா

(A) (1) மற்றும் (4) சரியானவை (B) (1) மற்றும் (2) சரியானவை

(C) (2) மற்றும் (4) சரியானவை (D) (2) மற்றும் (3) சரியானவை

விடைகள்

1.–(A)	2.–(B)	3.–(D)	4.–(B)	5.–(B)
6.–(B)	7.–(D)	8.–(D)	9.–(D)	10.–(C)
11.–(B)	12.–(D)	13.–(A)	14.–(D)	15.–(A)
16.–(C)	17.–(A)	18.–(A)	19.–(A)	20.–(A)
21.–(D)	22.–(C)	23.–(B)	24.–(C)	25.–(A)

கீழ்க்கண்ட தலைப்புக்கான சரியான பதிலை இவ்வலுவலக இணையதள மின்னஞ்சலுக்கு அனுப்பும் கட்டுரைக்கு சிறப்புப் பரிசு, புகைப்படத்துடன் கூடிய கட்டுரை அடுத்தமாத இதழில் இடம்பெறும்.

தலைப்பு:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 12.08.2025 அன்று தொடங்கி வைத்த "முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்" வாயிலாகப் பயன்பெற்றுள்ளது குறித்து விவரிக்கவும்.

கட்டுரை அனுப்ப வேண்டிய இணையதள முகவரி: tamilarasujournal@gmail.com

டிசம்பர் 11: மகாகவி பாரதியார் அவர்கள் பிறந்தநாள்

"செந்தமிழ்த் தேனீ"

உய்வகை காட்டும் உயர்தமிழுக்குப் புதுநெறி காட்டிய புலவன்!

தமிழ்க்கவியில், உரைநடையில், தனிப்புதுமை படைத்த செந்தமிழ்த் தேனீ மகாகவி பாரதியார் அவர்களின் பிறந்தநாளில் அவரை வணங்குகிறேன்!

மொழி-நாடு-பெண் விடுதலை-பிற்போக்குத்தனங்கள் எதிர்ப்பு எனத் தமிழுக்கும் தமிழ்ச் சமூகத்துக்கும் இந்தியத் திருநாட்டின் விடுதலைக்கும் தொண்டு செய்த பாரதி வாழிய!

— மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 22.11.2025 அன்று தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் ஹாக்கி இந்தியா இணைந்து நடத்தும் 14 ஆவது ஆடவர் ஹாக்கி இளையோர் உலகக் கோப்பை போட்டிகள் நடைபெற உள்ள, ரூ.9.47 கோடி மதிப்பீட்டில் சர்வதேச தரத்திலான செயற்கை புல்வெளியுடன் புதுப்பிக்கப்பட்ட வளைகோல் பந்து (ஹாக்கி) மைதானத்தைத் திறந்துவைத்து மதுரை மற்றும் கோவில்பட்டி அணியினருக்கு இடையே நடைபெற்ற காட்சிப் போட்டியை துவக்கி வைத்தார்.

தமிழரசு
Tamilarasu

R.N.I. No. 21446/70 Regn. No. TN/CCN/643/2024-2026
& WPP No. TN/PMG (CCR) 518/2024-2026

Date of Publication : 2nd week of every month
Date of Posting : 27th - 30th of every month

பெருநகரச் சென்னை மாநகராட்சியில்

தூய்மைப் பணியாளர்களுக்கு முதலமைச்சரின் உணவுத் திட்டம்

தொடங்கி வைத்தார்

திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 16.11.2025 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பெருநகரச் சென்னை மாநகராட்சியில் பணியாற்றும், தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு வழங்கும், "தூய்மைப் பணியாளர்களுக்கான முதலமைச்சரின் உணவுத் திட்டத்தை" தொடங்கி வைத்தார்.

Published by : Dr. R. Vaithinathan, I.A.S., on behalf of Information and Public Relations Department, Government of Tamil Nadu, Secretariat, Fort St. George, Chennai - 600 009 and Printed by: R.Pugazh Vendhan at TAMILARASU PRESS, Rajiv Gandhi Salai, Taramani, Chennai - 600 113. Editor : Dr. R. Vaithinathan, I.A.S.,